உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சங்கற்பநிராகரணமூலம்.

கோற்றவன்குடி

உமாபதிசிவாசாரியர்.

திருவாய்மலர்ந்தருளியது.

இதற் றுரையுடன்.

இஃது,

காஞ்சிபுரம்

மகாவித்வான்

கந்தசாமிமுதலியார்

மாணாக்கர்

கா சுந்தரமூர்த்திமுதலியார்

அவர்கள் பார்வையிட்டு,

கன்னிகைப்பேர்

முருகேச முதலியாரால்

சென்னை

ஜீவகாருண்யவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1898௵

உ

திருச்சிற்றம்பலம்.

சங்கற்பநிராகரண,

மூலமும் உரையும்

விநாயகர் வணக்கம்,

திருந்திய வருந்தவம் பொருந்துபன் முனிவர்
கமையாக்காத லமையாது பழிச்சும்
நிகரில் செக்கர்ப் புகர்முகத் தெழுந்த
புனிற்று வெண்பிறைத் தனிப்பெருங் கோட்டுத்
தழைசெவி மழைமதப் புழைநெடுந் தடக்கை
வாட்டரு மும்மை நாட்ட நால்வாய்ப்
பாசமங்குசந் தேசுறு மெயிறுண்
கனியிவை தாங்கும் புனித நாற்கரத்
தங்க தங்கடகம் பொங்கிழை யார
நிறைமணிச் சுடிகைக் கறையணற் கட்செவி
கொண்டதிண் பெரும் பண்டிக் குறுந்தாட்
களிறுத னிருகழல் கருதா
வெளிறுறு துயரம் வீட்டினம் பெரிதே.

இ-ள். திருந்திய வருந்தவம் பொருந்து பன்முனிவர்-சாத்திரங்களில் உத்தமப் பிரகாரமாக விதிக்கப்பட்ட வரிய தவசுகளோடுங் கூடி யிருந்துள்ள மஹா இருடிகள் பலருங்கூடி,—கமையாக்காத லமையாது பழிச்சும் - ஒருக்காலு நிறம்பாத வாஞ்சை யோடுங்கூடி யநவரதமுந் தோத்திரம்பண்ணும், —நிகரில் செக்கர்ப் புகர்முகத் தெழுந்த புனிற்று வெண்பிறைத் தனிப்பெ

ருங் கோட்டு - ஒப்பில்லாமலிருக்கிற செக்கர் வானம்போன்றசி வந்தபுகரோடுங் கூடியிருக்கிற முகத்திலே தோன்றப்பட்ட வீ ன்றணித்தாயுள்ள வெள்ளிய பிறைபோலு மொப்பில்லாத பெரி ய கொம்பினையு முடையதாய்;—தழைசெவி மழை மதப் புழை நெடுந் தடக்கை - தழைந்த செவியினையுங் கார்போலும் பொழி யா நின்ற மதத்தினையு மிரண்டு துவாரத்தோடுங்கூடி நெடியதா ய்ப் பருத்திருக்கிற துதிக்கை யினையுமுடையதாய், —வாட்டரு மும்மைநாட்ட நால்வாய் - ஒளியினையுடைய மூன்று கண்ணினை யும் நான்றவாயினையு முடையதாய், —பாசமங்குசந் தேசுறுமெ யி ருண்கனி யிவைதாங்கும் புனித நாற்கரத்து - பாசத்தினை யுந் துறட்டினையும் பிரகாசத் தினையுடைய கொம்பினையு மழகி ய மாங்கனியினையு மிவை யிற்றைத் தரித்துக் கொண்டிருக்கிற சுத்தமாயுள்ள நாலுகையினையு முடையதாய்,—அங்கதங் கடகம் பொங்கிழையார நிறைமணிச் சுடிகை கறையணற் கட்செவி கொண்ட திண்பெரும் பண்டிக் குறுந்தாள் - தோள்வளையினையு மிரத்தின கடகத்தினையு மிக்க நவரத்தினங்களை யழுத்தி யிழை க்கப்பட்டிருக்கிற வாபரணத்தினையுங் குறைவற வணிந்து இர த்தினத்தை யுடைய தலையினையுங் கறுத்திருக்கிற கண்டத்தினையு முடையதாய் கண்ணே செவியாகக்கேட்கிற பாம்புகொண்டு கட் டப்பட்டுச் சிக்கென்று பெரிதாயிருக்கிற வயிற்றினையுங் குறுகியி ருக்கிற காலினையு முடையதாயிருக்கிற.—களிறுத னிருகழல்கரு தா - இப்படிக்கொத்தவானை யினதிரண்டுபாதங்களையு மென்ம னதார நினைந்து, —வெளிறுறுதுயரம் வீட்டினம் பெரிதே - கு ற்றத்தோடுங் கூடியிருக்கிற துக்கங்களை மிகவும் விடுவியா நின் றேம், (௧)

காப்பு-முற்றிற்று.

பாயிரம்.

பெருங்கட லுத்வுங் கருங்கடு வாங்கிக்
கந்தரத் தமைத்த வந்தமில் கடவுள்
பாலரை யுணர்த்து மேலவர் போலக்
கேட்போ ரளவைக் கோட்படு பொருளா
ல்ருளிய கலைக ளலகில வாலவை
பலபல சமயப் பான்மைத் தன்றே
யஃதா லந்நூற் றன்மை யுன்னிய
மாந்த ரிதுவே பொருளென் றதனிலை
யறைதவின் வேற்றோர் பனுவ லேற்றோர்க்
கிசையா மாறுபாடு கூறுவ ரதனாற்
புறச் சமயங்கள் சிறப்பில வாகி
யருளின் மாந்தரை வெருளுற மயக்கி
யல்கைத் தேரி னிலையிற் றீரு
மீங்கிவை நிற்க நீங்காச் சமய
மூவிரு தகுதி மேவிய தாமு
மொன்றோ டொன்று சென்று நிலையி
லாறு மாறு வீறுடைத் திவற்று
ளெவ்வ மில்லாச் சைவநற் சமயத்
தலகி லாகம நிலவுத லுளவவை
கனக மிரணியங் காஞ்சன மீழந்
தனவிதி யாடகந் தமனிய மென்றிப்
பலபெயர் பயப்பதோர் பொருளே போலப்
பதிபசு பாச விதிமுறை கிளக்கும்
வாய்ந்த நூல்க ளாய்ந்தன ராகி
யாசா னுகி வீசிய சமத்துட
னேழஞ் சிருநூ றெடுத்த வாயிரம்

வாழுநற் சகன மருவா நிற்பப்
பொற்பொது மலிந்த வற்புதனுனி
யாரும் விழவிற் பொற்றே ராலயத்
தேரு வெண்மர் நிறையி விருப்ப
மயங்குவாத மாயாவதி
முயங்கிட வொருதலை முதவெதிர் மணிசேர்
பெண்ணை சூழ்ந்த வெண்ணெயம்பதி திசழ்
மெய்கண்டவ னருள் கைகண்டவர்களி
லொருவ ரொருதலை மருவியிருப்ப
வஞ்சப்பிறவிக் கஞ்சிவந்தொருவ
னேதிறையருளென வீதெனுமாயா
வாதியை யயலினர் மருதலைத் தருடா
மற்றவரயலின ரவருரை மறுத்துச்
சொற்றரவயலின ரவருந்தொலைவுற்
றின்னேயெவரு முன்னேகழியுழி
யாங்கய விருந்த வருளின ரழகிது
நீங்கள் சங்கற்ப நிராகரித் தமையென
மற்றவ ருரைத்த சொற்றரு பொருள்கொடு
வாதசெற்ப விதண்டையு மேது
மோதுநால்வகை யுவமையுக்திகடர
வருள்சேர்மாந்தர் வெருள்சேராமற்
றர்க்கமும் விடையமுங் கற்க
நற்கவிமாந்தர் நகநவிற்றுவனே.

இ-ள். பெருங்கடலுதவுங் கருங்கடு வாங்கிக் கந்தரத்தமைத்த வந்தமில் கடவுள் - பெரிதாயுள்ள திருப்பாற் கடலிலே நின்று முண்டாகப்பட்ட கறுத்தநஞ்சினைத் தனது ஸ்ரீயத்தத்தினாலே வாங்கி யமுதுசெய்து கண்டத்திலே தரித்துக் கொண்டிருக்கையிலேயுந் தனக்கு முடிவில்லாத கடவுள். (என்னவே கத்தாவை நீக்கி முற்காலத்திலே தேவர்கள் அமுதங்கடைய வழிலே நஞ்சு

பிறந்தது அதினாலே யவர்கள் பீடைப்படுகையினாலே துஷ்டநி க்கிரகமும், அவர்கள் கத்தாவைநோக்கியபயமிட வஞ்சாதிரென் றந்தநஞ்சை யமுதுசெய்தவர்களை யிரக்ஷிக்கையினாலே சிஷ்டப ரிபாலனமுமாகி நின்றதெனக் கொள்க.) இப்படித் துஷ்டநிக்கி ரகமுஞ் சிஷ்டபரிபாலனமு முடைய கடவுளானவர்,—பாலரை யுணர்த்து மேலவர்போல - தங்கள் பிள்ளைகளுக்கந்தப் பக்குவ ங்கடோறு மறிவையுந் தொழிலையும் கொடுத்துவந்த மாதா பிதா க்களைப்போல,— கேட்போ ரளவைக்கோட் படுபொருளா லரு ளியகலைக ளலகில - கேட்கிற சீடர்களுடைய வெல்லைக் கோட் பாடுகளுக்கீடா யுள்ளவத்தங்களைக்கொண் டருளிச்செய்யப் பட் டிருக்கிற சாத்திரங்க ளெண்ணிறந்த தாயிருக்கும், —ஆலவை பலபல சமயப்பான்மைத் தன்றே - அப்படி யிருக்கையால் அந் தச் சாத்திரங்கள் வெகுவிதமாயுள்ள சமயப் பகுதிகளோடுங்கூ டியிருக்கும்,—அஃதா லந்நூற்றன்மை யுன்னியமாந்த ரிதுவே பொருளென் றதனிலையறைதலின் - ஆகையால் அந்தச் சாத்திர ங்களினதுண்மை யாராய்ந் தறிந்தவர்கள் நமக்கிதுவே சாத்திர மு மிதுவேயுத்தமுமென் றந்தச்சமயத்தையே பலமாகச்சொல்லி நிற்கையினாலே,—வேற்றோர்பனுவ லேற்றோர்க் கிசையா மாறு பாடுகூறுவர் - மற்றொருசாத்திரத்தை யாராய்ந்தறிந்தவர் களுக் கு அவன்சொல்லுகிற சாத்திரமு மத்தமும் பொருந்தா தாகை யால் அவன்சொன்ன திவனுக்குப் பொருந்தாம லிவன்சொன்ன தவனுக்குப் பொருந்தாம லொன்றுக்கொன்று மாறுபடச் சொல் லாநிற்பர்கள்,—அதனாற் புறச்சமயங்கள் சிறப்பில்வாகி யருளின் மாந்தரை வெருளுறமயக்கி யலகைத்தேரி னிலையிற்றிரும் - அப் படி யிருக்கையினாலே உலகாயிதன் புத்தன் சமணன் மீமாங்கி சன் மாயாவாதி பாஞ்சராத்திரியென்று சொல்லப்பட்ட புறச்சம யங்களினுள்ள வத்தங்களினுண்மைப் பகுதியில்லாததாய் சிவனு டைய வநுக்கிரகத்திற் கேதுவல்லாதவ பக்குவான்மாக்களை யீ தோரத்த மிருந்தபடியென் றச்சப்படத் தக்கதாக மருட்டிப் பே

ய்த்தேரைத் தண்ணீரென்று கருதி இதைக்குடித்துத் தாகந் தீர
லாமென்று வந்தவனுக்கந்தத் தண்ணீர்பொய்யாய்ப் பேய்த்தேர்
மெய்யான தன்மைபோல விந்தச்சாத்திரங்களு மத்தங்களுஞ் ச
த்தியம் போலத்தோன்றி யசத்தியமாய் முடியும்; —ஈங்கிவைநி
ற்க நீங்காச்சமய மூவிரு தகுதிமேவிய தாமும் - ஆகையால் இவ்
விடத்திற் சொல்லப்பட்ட சமயங்களு மத்தங்களு நமக்கு வேண்
டுவதில்லை. தன்னிலொன்றோடொன்று கூடிக் கொண்டிருக்கிற
சைவம் பாசுபதம் மாவிரதம் காளாமுகம் வாமம் வைரவம் என்
கிற வுட்சமயங்களாறும்,—ஒன்றோடொன்று சென்றுறுநிலையி லா
றுமாறுவீறுடைத்து இவை யொருசமயத்தோ டொருசமயந் தாக்
கிப் பார்க்குமளவில் அந்தவாறு சமயங்களுந் தனித்தனியேமகத்
துக்களாயிருக்கும்,—இவற்று ளெவ்வமில்லாச் சைவநற்சமயத்த
லகிலாகம நிலவுதலை - இந்தச்சமயங்களில் வைத்துக்கொண்
டு ஒருசற்றுங் குற்றஞ்சொல்ல வொண்ணாமலிருக்கிற சைவமாகி
யநல்சமய மொன்றையு நோக்கித் தம்பிரானா ரருளிச்செய்யப்ப
ட்டிருக்கிற வாகமங்க ளெண்ணிறந்து பொருந்தாநிற்கும் அந்த
ஒருசமயத்தை நோக்கிப் பலசாத்திர மருளிச்செய்வானேனென்
னில்,—அதை கனக மிரணியங் காஞ்சன மீழந்தன நிதியாடகந்
தமனியமென்றிப் பலபெயர் பயப்பதோர் பொருளேபோலப்பதி
பசு பாசவிதிமுறை விளக்கும்-அப்படிப்பலவாக வருளிச்செய்த
து மொருபொருளைப் பற்றியிருக்கும் அஃதெங்ஙனேயென்னில்
கனகமென்றும் இரணியமென்றும் காஞ்சனமென்றும் ஈழமென்
றும் தநமென்றும் நிதியென்றும் ஆடகமென்றும் தமனியமென்று
ம் இங்ஙனம் பலபெயராகச் சொல்லப்பட்டவை யெல்லாம்பொ
ன்னாகிய வோர்பொருளையே பற்றிநின்றார் போல வந்தச்சாத்திர
ங்களும் பதியினிலக்கணத்தையும் பசுவினிலக்கணத்தையும் பா
சத்தினிலக்கணத்தையுமே சொல்லாநிற்கும்,—வாய்ந்தநூல்களா
ய்த்தனராகிய சாருகி வீசியசமத்துடன் - இங்ஙனம் பொருந்தப்ப
ட்டிருக்கிற வாகமங்களைக் கற்றுணர்ந்தாராய்ந்தபோதவான்களா

ய்சமயவிசேஷ நிருவாண வபிஷேகமென்கிற நாலுதீக்ஷைகளை யுமுடையவர்களா யெங்கும் பிரகாசிக்கப் பட்டிருக்கிறபக்ஷப்பி ரதிபக்ஷமில்லாத சமபோதவான்களாயுள்ளவிந்தப்பெரியோர்கள் —ஏழஞ் சிருநூறெடுத்தவாயிரம் வாழூழச்சகன மருவாநிற்ப-சகாத்தம் ஆயிரத்திருநூற்றமுப்பைத்தச்துசெல்லாநின்றகாலத்திலே பொற் பொதுமலிந்த வற்புத ஞானியாரும்விழவில்-பொன்னினாற்செய்யப்பட்ட திருவம்பலத்தின் கண்ணேநிறைந்தெழுந்தருளியிருக்கிற வாச்சரியவானுயுள்ள திருவம்பலமுடைய தம்பிரானருடைய வானிமாதத்தி லாரூர்திருவிழாவிலே—பொற்றே ராலையத்தேரூவெண்மர் நிரையிலிருப்ப-பொலிவிளையுடைத்தாகியதேர்மண்டபத்திலேயேறிமுன்சொல்லப்பட்ட வாசாரியமாரெட்டுத்திருப்பெய ரொழுங்கிலேயெழுந்தருளியிருக்கிறவவதாரத்திலே மயங்குவாதமாயாவாதி முயங்கிடவொருதலை-சற்காரியவாதமின்றியொருகாற்சொன்ன தொருகாற்சொல்லாமல் முன்னுேபின் மலைந்துவருகிற வர்க்கத்தோடெங்கூடியிருக்கிற மாயாவாதியென்கிறசமயியொருபுறத்திலேகூடியிருக்க—முதுவெதிர்மணிசேர்பெண்ணைசூழ்ந்தவெண்ணெயம்பதி திகழ்மெய்கண்டவனருள்கை கண்டவர்களி லொருவரொருதலைமருவியிருப்ப-முதிர்ந்தமூங்கில்களினுண்டாகிய முத்துக்களோடெங் கூடியிருக்கிற பெண்ணையாறு சூழப்பட்ட திருவெண்ணெய் நல்லூரென்கிற திருப்படை வீட்டிலே திருவவதாரஞ் செய்யப்பட்ட மெய்கண்ட தேவநாயனருடைய வநுக்கிரகத்தைப் பெற்றவடியார்களிலே யொருத்தரந்தக்கூட்டத்தி னொருபுறத்திலே பொருந்தி யெழுந்தருளி யிருக்கிறவவதாரத்திலே,—வஞ்சப்பிறவிக் கஞ்சிவந்தொருவ னேதிறையருளென - பொல்லாங்கை விளைப்பதாயிருக்கிற பிறவிப் பிணிக்குப்பயப்பட்டானொருபக்குவன்வந் திவர்களைத் தண்டம்பண்ணித்தம்பிரானுர் திருவருளெப்படி யிருப்பதென் றவன்வினுவ,— ஈதெனு மாயாவாதியை யயலினர் மருதலைத்தருட ர - தன்னுடைய வத்தத்தைப்பார்த்திதுவே பொருளென்று காட்டின மாயாவா

திசைய யருகேயெழுந் தருளியிருந்தவ ரவன்சொன்ன வத்தத்தை
க்கண்டிருந் திதுவத்தமல்ல வென்றுதள்ளித் தம்முடைய வத்தத்
தை யிதுவே பொருளென்றுநாட்ட, —மற்றவரயலின ரவருரை
மறுத்துச்சொற்றர - அவருடைய பக்கத்திலிருந்தவர் அவர்சொ
ன்னவத்தத்தைக் கண்டித்துத் தம்முடைய வத்தத்தை யிதுவே
பொருளென்றுநாட்ட,— அயலின ரவருந் தொலைவுற்று - அவரு
டையவருகே யிருந்தவராலே யவருங் கண்டிக்கப்பட்டு,— இன்
னேயெவரு முன்னேகழியுழி - இப்படியொருவரை யொருவர்ம
றுத் தெட்டுப்பேருமுன்னே தள்ளுண்டவவதரத்து,—ஆங்கடலி
ருந்த வருளினரழகிது நீங்கள்சங்கற்ப நிராகரித்தமையென மற்
றவறுரைத்த சொற்று பொருள்கொடு - அவ்விடத்தவர்க ளரு
கேயெழுந் தருளியிருந்த வாசாரியவான்களைப் பார்த்து நீங்களு
ங்களத்தங்களைச் சங்கற்பித்தது மத்தைநிராகரித்தது மிகவு நன்
றாயிருந்த தென்றருளிச்செய் தவர்கள்சொன்ன சொற்களிலுண்
டாகிய பொருள்களை யெடுத்துக்கொண்டு யான்,—வாத செற்ப
விதண்டையு மேதுவு மோதுநால்வகையு வமைந்திகடர - வாத
மென்றசொல்லுதான் விகாரமென்றும் விசியுழியென்றுமிரண்டா
ம். இதில்விகாரமென்றது குருவுஞ் சிஷனுமாகுதல், தன்னே
டொத்த பக்ஷபாதனுகுதல், மாறுபாடின்றிப்பிரமாணங்களிலு
ண்டாகிய வத்தங்களைத் தர்க்கித்ததிலுண்டாகிய குற்றங்களை நீங்
கிச் சத்தியமானவத்தத்தை நியமிக்கப்படுவதெனக் கொள்க விசி
யுழியென்ற சொல்லுதான் செற்பையென்றும் விதண்டை யென்
றுமிரண்டாம், இதிற் செற்பையென்றது பிறருடைய வத்தங்க
ளை நிராகரித்துத் தன்னுடையபொருளை மலைவறநாட்டுமை யெ
னக்கொள்க. விதண்டையென்றது பிறருடைய வத்தங்களைநிரா
கரித்துத் தன்னுடையவத்தந் தோன்றுமனின்று சாதிக்கப்படுவ
தெனக்கொள்க. ஏதுவென்றது அளவைப் பிரமாணங்களிலே
விதிக்கப்பட்டிருக்கிற பலவேதுக்களும். ஓதுநால்வகையுவமை
யுமென்றது வினை பயன் மெய் உருவென்று சொல்லப்பட்ட நா

துவகையுவமையு மிந்தநூலிலே விளங்கத்தக்கதாக,—அருள்சேர்மைந்தர் வெருள்சேராமல் - திருவருளுக் கேதுவாயுள்ள பக்குவான்மாக்களுக்கு அத்தமலெவென்கிற வச்சம்வந்து பொருந்தாமல் அவர்கள்,—தர்க்கமும் விடயமுங்கற்க நற்கவிமாந்தர் நகநவிற்றுவனே - இந்நூலிலுண்டாகிய தர்க்கங்களையும் விடயங்களையுங்கற்கத்தக்க தாகவும் நல்லகவிதையோடுங் கூடியிருக்கிறவித்துவான்கள் இவனுமொருநூல் செய்வதேயென்று சிரிக்கத்தக்கதாகவும் இந்நூலைச் சொல்லாநின்றேன். (உ)

பாயிரமுற்றிற்று.

மாயாவாதிசங்கற்பம்.

—()—

நவிற்றியநிரையி னவித்தையினுரை
நித்தனறிவன் சுத்தனகண்டித
னிருவிகற்பனிர்த் தத்துவனிரஞ்சனன்
சொல்வகையெவையுந் தொடராத்தூய்மணி
வரம்பில்வேதச் சிரந்தருபரம்பொருள்
சத்தாயெவையுந் தானுயவித்தை
தொத்தாதுயர்ந்த தொல்சுடர்மூவா
வின்னதன்மைய னேகனனேகன்
கன்னற்பெருஞ்சுவை தன்னிற்பிறவாப்
பெற்றியினிருந்து பொற்பணியியல்பினின்
வான்வளியனனீர் மண்மருந்தன்ன
மானதரது வாறைங்கோசத்
தொகுதியாக்கைப் பகுதியதொருபுடைச்
சுத்திவெள்ளி யொத்தனமித்தையிற்
றனெனலாகுந் தன்மைத்துலாதையிற்

சின்னாற்றகையின் வேற்றுமைமரீஇய
தென்னப்பன்மைய தெனினிலைபழம்பூத்
தோனுர்வயிரந் தருத்தருந்தொன்மையின்
வானுரந்திரை நுரைதருவாய்மையிற்
கூடுமசித்தைச் சித்துதவாதெனி
னெற்பதர்பலாலத் திற்பாந்தருமிது
தன்னியல்பென்றும் விளையாட்டென்று
முன்னுளமறைகண் மொழிதலினெருநூற்
பன்மணிநிலையும் பசுப்பாலெனவும்
பகல்வனீரி லலர்கதிரெனவுங்
கூவலாழிகுளஞ் சிறுகுழிகால்
வாவியாவையும் வருபுனலெனவு
மவ்வவற்றடங்கி யாடியுணிழலெனத்
தோன்றியாக்கைநற் காந்தத்திரும்புங்
கனவிற்றீங்குங் கங்குலிற்கயிறும்
புனலிற்றேன்றும் பேய்த்தேர்ச்செய்தியு
மன்னதுன்பினன் னிறப்பளிங்கெனப்
பதினுற்காணத் தொருமூன்றவத்தை
நாளுநாளு நயந்துறுமிருபயன்
றன்னிற்சாராத் தொன்மைத்தன்மை
தர்ப்பணநிழற்கட் குற்றமாய்ந்தற்றே
லிவ்விய ற்பந்தப் பௌவமதகல
விண்முதறந்த கொண்மூப்படலத்
திருளறவுதித்த காரகவிவேகந்
தன்னிற்றேன்றிச் சாதகமனைத்தையு
மன்னகப்பிரிப்பு மடியிழைவாங்கலும்
போலஞாலம் பொய்யறக்கழீஇத்
தானேதானுய்த் தன்னிற்றன்னைத்
தானேகண்டு தன்னலமுற்று

வசையிறத்துவ மசிபதத்தெளிவா
லகமேபிரமமாயின னெனவறிந்
தசலனுகிநற்சல சலமதியெனக்
கண்டிடுமுடலம் விண்டகல்கடத்து
மங்குலதுடைதர வெங்குமாந்தகைத்தே
யிவ்வகையுணர்ந்து செய்தொழிலமுத
மடவோர்தாமுங் கடனுவியற்றுங்
கன்மகாண்டத் தொன்மைப்புரிவாற்
ருேற்றியவித்தை மேற்கடையரணியி
லெழுந்தெரியவற்றை விழுங்கியதென்னத்
தன்னெழிந்துள்ள தானுயழியு
மந்நிலையன்றி யழிவறுமுத்தி
யேயாதென்றுதன் னியல்பை
மாயாவாதிவகுத் துரைத்தனனே.

இ-ள். நவிற்றியநிரையி னவித்தையி னுனுரை - முன் சொல்லப்பட்ட வொழுங்கில் மாயாவுபாதிகளினாலே வாதிக்கப் பட்டுப் பரப்பிரம மிப்படி மயங்கி நிற்குமென்று சொல்லுகிறமா யாவாதியினுடைய மதமிருக்கும்படி, —நித்தனறிவன் சுத்தனக ண்டிதன் - ஒருக்காலு மழிவில்லாதவனுமாய் சர்வக்கியனுமாய் நிர்மலனுமாய் கண்டிக்கப்படாதவனுமாய்,—நிருவிகற்பனிர் தத் துவ நிரஞ்சனன் - விகற்பமில்லாதவனுமாய் தத்துவாதீதனுமா ய் மறைப்பில்லாதவனுமாய்,—சொல்வகையெவையுந் தொடரா த்தாய்மணி - சொல்லும்பொருளுமா யிருக்கிற சாத்திரங்க ளொ ன்றுமுலுஞ்சென்று கிட்ட வொண்ணுமலிருக்கிற சுத்த ரத்தினமாய் —வரம்பில் வேதச் சிரந்தரு பரம்பொருள் - எந்தச்சாத்திரங்க ளினுலு மளவிடப்படாமலிருந் துள்ளதாமாயினு மெல்லையற்றிரு க்கிறவேதத்தினது தலையிலேசுமந்து தரப்பட்ட வெல்லாத்துக் குமேலாயிருக்கிறவத்தமாய்,—சத்தாய் - சுத்த சைதன்னியமாய், —எவையுந்தானுய் - எல்லா வுபாதிகளுந் தானேயாய்; —அவித்

தைதொர்த்தா துயர்ந்தொல்சுடர் - அப்படியிருந்த தாமாயினும் ந்தவுபாதிக டானவனைத் தொந்தியாதபடி மிக்க பழையதாயுள்ள பிரகாசமாய்,—மூவாவின்னதன்மையன் - ஒருக்காலும் போது செய்யாமலிருக்கிற விந்தரியாயத்தோடு கூடியிருப்பானும்,—ஏக னனேகன் - ஒருத்தனுமாய்ப் பலயோனிகளிலு நிற்கிறவனுமாய் —கன்னற்பெருஞ்சுவை தன்னிற்பிறவாப் பெற்றியினிருந்து - கரும்பிலுண்டான மிக்கவிரதமான தந்தக்கரும்புக்குத் தோன்று தவியல்புபோலத் தன்னிடத்திலுண்டாகிய வின்பத்தையுந் தான றியாமலிருந்துள்ள பரப்பிரமமானது பிரபஞ்சலீலையையுண்டா க்குமிடத்து,—பொற்பணி யியல்பினின் - பொன்னானதுபலவா ன வாபரணங்களாயிருந்த தன்மைபோல,—வான்வளி யனனீர் மண்மருந் தன்னமான தாதுவாறைங் கோசத்தொகுதி யாக்கை ப்பகுதிய தொருபுடை - பரப்பிரமந்தானே ஆகாசமும் வாயுவும க்கினியு மப்புவும் பிருதிவியு மௌடத வன்னங்களு மதனாலுண் டாகப்பட்ட தாதுக்களாறு மன்னமயம் பிராணமய மனோமயவி ஞ்ஞானமய மாநந்தமயமென்கிற ஐங்கோசங்களும ஒருபக்ஷமி வையெல்லாமாகக் கூடியிருக்கிற சரீரத்தின்பகுதியா யிருக்கும். இங்ஙனந் தோன்றப்பட்ட பிரபஞ்சநித்தியமோ வநித்தியமோ அநித்தியமென்னில் இதுநித்தயமாய்த் தோன்றுவானேனென் னில், —சுத்திவெள்ளியொத்தன மித்தையில் - சுத்தியாகிய சிப் பியானது வெள்ளியையொத்துத் தோன்றினாற் போலத் தோன் றிற்றென்று சொல்லலாமாக, மதிப்பிரமையினாலே யநித்தியமா யுள்ள பிரபஞ்சமு நித்தியமாய்த்தோன்றும். ஆனாலந்தப்பரப்பிர மமு மிந்தப்பிரபஞ்சமும் தன்னில்வேறோவென்னில்,—தானெ னலாகுந் தன்மைத்து - அந்தப்பரப்பிரமந்தானே யிந்தப்பிரப ஞ்சமுமென்று சொல்லுந்தன்மையை யுடையதாயிருக்கும் அந்த ப்பிரமத்தைப்போலேயிராம லிந்தப்பிரபஞ்சம் வேற்றுமையாயி ருப்பானேனென்னில்,—உலூதையிற் சின்னூற்றகையின் வேற் றுமைமரீஇயது - சிலம்பியினிடத்துண்டாகிய சிறியநூலினையொ

க்கப் பிரபஞ்சமும் பிரமத்துக்கு வேற்றுமையைப் பொருந்தியி ருக்கும்,—என்னப் பன்மையதெனின் - சிலம்பிநூல்போலேயெ ன்றுசொல்ல வதுவொருதன்மையா யிருந்தது. பிரபஞ்சம்பலபி ரகாரமா யிருப்பானேனென்னில், —இலைபழம் பூத்தோ ணார்வ யிரந் தருத்தருந்தொன்மையின் வாணரந் திரை நுரை தருவாய் மையிற்கூடும் - இலையும் பழமும் பூவுங் காயுந் தோலு நாரும்வ யிரமு மிவையெல்லாமரமானது தந்தொடுங்குன் தன்மைபோ லவும் பெருமையினையுடைய தண்ணீரானது திரையையு நுரை யையுந் திவலையையுங் குமுழியையுந் தந்தொடுக்குந்தன்மைபோ லவும் இப்படிபிரபஞ்சமும் பலவாகத்தோன்றி யொடுங்குமென் றுசொல்லப்படும்,—அசித்தைச் சித்துதவாதெனில் - அசித்தாயு ள்ள பிரபஞ்சஞ் சித்தாயுள்ளபிரமத்திலே தோன்முதென்னில்— நெற்பதர் பலாலத்திற்பரந்தரும் - நெல்லானது பதரையும்வை க்கோலையுந் தந்ததன்மைபோலச் சத்தாகியபிரமும் சித்தாகியபி ரபஞ்சத்தைத் தராநிற்கும். இந்தப்பிரம மிப்படிச்செய்யவேண் டுவானேனென்னில்:—இதுதன்னியல்பென்றும் - இப்படிச்செய் துவருகிறதிந்தப் பிரமத்தினுடைய வியல்பாயிருப்ப தொல்றெ ன்றும். பிரமமிந்த வுபாதிகளினாலே வாதிக்கப்பட்டிருப்பானே னென்னில்,—விளையாட்டென்றும் - இந்த வுபாதிகளோடுங் கூ டிக்கொண் டிருக்கிறதைப் பிரமத்துக்கு விளையாட்டா யிருப்ப தொன்றென்றும் பிரமத்துக் கியல்பென்றும் விளையாட்டென்று மெங்கேகாணப் பட்டதென்னில்,—முன்னுள மறைகண்மொழி தலின் - அநாதியேயுள்ள வேதங்கள் சொல்லுகையினாலே. இந் தவுபாதிகள் பலவாகக் காண்பிக்கப்பட்டாற்போல வந்தப்பிரம மிப்படிப்பலவாகக் கண்டிருக்கப் பட்டிருக்குமோ வென்னி ல்,—ஒருநூற் பன்மணிநிலையும் பசப்பாலெனவும் பலவகனீரில லர்கதிரெனவுங்கூவ லாழி குளஞ் சிறுகுழி கால் வாவியாவையு ம்வருபுனலெனவு மவ்வவற்றடங்கி - மணிகள் பலநிறமாயிருந்த தாயினும் அதிர்கோர்ப்புண்டானநூ லந்நிறம்போற் றோன்றியு

மொருதன்மையா யிருந்தாற்போலவும் பசுக்கள் பலவர்ணங்களா யிருந்தாலும் பாலொரு தன்மையாயிருந்தாற்போலவும் நீர் பொருந்திய பாத்திரங்கள் பலவாயிருந்ததாயினும் அதிற் பிரதிபிம்பஞ்செய்கிற வாதித்தனொன்றாயிருந்த தன்மைபோலவும் கிணறுங் கடலுங் குளமுஞ்சிறிதாயுள்ளகுழிகளும் வாய்க்கால்களும்இவையெல்லாம் பலபேதமா யிருந்ததாயினுந் தண்ணீரொன்றாயிருந்த தன்மைபோலவும் இப்படியே யோனிகள்பலவாறாயிருந்த தாயினுமறிவேகமாய் அநந்தயோனிகடோறுங் கூடியிருந்தாயி னிந்தவுடல்கடோறும் பெந்தப்படாதோ வென்னில்,—ஆடியுணிழலெனத்தோன்றி யாக்கை-கண்ணாடியிலே நிழலானது தோன்றிநிற்கும் அந்தநிழலதிற் றோய்வறநின்றாற் போலவும் உடலிலே பிரமமானதுதோன்றி நிற்குமிடத்தேயு மந்தவுடலிற் றானுந்தோய்வறநிற்கும். அப்படியந்தவுடலிலே தோய்வறநிற்குமாயின் இந்தவுடல் காரியப்படுகிற தெப்படியென்னில், —நற்காந்தத்திரும்பும் - நல்லகாந்தமானது தோய்வறநிற்க வதின்சந்நிதியிலேயிரும்பானது காரியப்பட்டாற்போலப் பிரமந்தோய்வறநிற்க வதின்சந்நிதியிலே யுடலானது காரியப்படாநிற்கும். அந்தவறி விந்த வுடலிலேநின்று சுகதுக்கங்களை யநுபவிக்குதே யதவருவானே னென்னில்,—கனவிற்றீங்குங் கங்குலிற்கயிறும் புனலிற்றோன்றும் பேய்த்தேர்ச் செய்தியும் - ஒருவன் சொப்பனங் காண்கிற விடத்தவனை யோராளைபின் பிடித்துக்கொண்டுவர வதற்குப்பயப்பட்டிவனோடு மிடத்துவிழித்தவவதரத் திவையெல்லாம் பொய்யாயிருந்ததன்மைபோல்வும் ஒருவனிராக் காலத்திலே யொரு புற்றின் வாசலிலே கயிறுகிடக்கிறதைக் கண்டொருபாம்பு கிடக்கிறதைப்பாரீரென்று பிரமித்துநிற்குமிடத்து விடிந்தவவதரத்துப் பாம்புபொய்யாய்க் கயிறுமெய்யான தன்மைபோலவும் ஒருவன் தண்ணீர்தாகத்தின் மிகுதிகொண்டு கானலைத் தண்ணீரென்று புத்திபண்ணிக்கொண்டு வந்தா னதினுடைய வுண்மையைப் பார்த்தவிடத்தவனுக்குத் தண்ணீர் பொய்யாய்க் கானல்மெய்யான தன்

மைபோலவும் இந்தப்பிரம முடலோடுங்கூடி நின்று சுகதுக்கங் களை யநுபவித்தாற்போல விருக்குமதொழிந்து தன்னுண்மைபா ர்க்குமிடத்திந்த சுகதுக்கங்களு மந்தவறிவுக் குண்டாகாது. இப் பொழுது பிரத்தியக்ஷமாக சோத்திராதிகளோடுங் கூடியதுதா னுய்க்கன்மங்களைப் புசிக்கிறது காணப்பட்டிருக்குதே யென்னி ல்,—அன்னதன்பி னன்னிறப்பளிங்கென - அப்படியந்தவிந்தி ரியங்கள் தானுய் நின்றதாயினும் பிரமத்துக்கந்த வநுபோகமுண் டாகாது அக்தென்போலவென்னில் படிகமானது நல்லபஞ்சவ ன்னங்களோடுங்கூடி யதுதானுயிருந்ததாயினு மவையிற்றி னோ டும் படிகமொரு சற்றுந்தோய்வற நின்முற்போலவு மெனக்கொ ள்க. இதன்றியும்,—பதினுற்கரணத் தொருமூன்றவத்தை நாளு நாளு நயந்துறும் - சோத்திராதிகளைந்தும் வாக்காதிகளைந்தும் அ ந்தக்கரணங்க ளுலுமாகப் பதினுலோடுங்கூடிப் புருவ மத்திய த்திலே சாக்கிராவத்தையும் அதிலே சோத்திராதியும் வாக்காதி யுநிற்க வந்தக்கரணங்க ளோடுங்கூடிக்கண்டத்தானத்திலே சொ ப்பனவத்தையும் அதிலே மனோபுத்தி யாங்கார நிற்கச் சித்தத் தோடுங்கூடி யிதயத்தானத்திலே சுழுத்தியவத்தையும் இந்தவவ த்தைகளிலே நாடோறும் பொருந்தி யநுபவியா நிற்கும், அறி வானதிந்த வவத்தைகளோடுங்கூடி யநுபவிக்குமாயி னிதற்குப் புண்ணியபாவதொந்தனை யில்லையோவென்னில்,—இருபயன் ற ன்னிற்சாராத் தொன்மைத்தன்மை தற்பணநிழற்கட் குற்றிபாய் ந்தற்றே - இந்தவவத்தைகளோடுங்கூடி நின்றதாயினுமநாதியே புண்ணிபாவதொந்தனை யிந்தப்பிரமத்துக்குச் சாராது. அக்தெ த்தன்மைத்தென்னில் கண்ணுடியிலே யொருவன்முகம் பிரதிபி ம்பஞ்செய்ய வவ்விடத் தந்தமுகத்தின் கண்ணே பாரைக்கோல் கொண்டு பாய்ந்தவிடத் தந்தக்கண்ணுடி யுடைந்தொழிந்து கண் ணுக்கீனம் வாராதிருந்தாற்போலு மெனக்கொள்க. (இதுபெத்த விலக்கணம்) (மேல்முத்தி) — இவ்வியற்பந்தப் பௌவம தக ல - இப்பொழுது நான்சொல்லிவந்த முறைமையிலே இந்தப்பி

ரமத்தை வாதிக்கப்பட்ட மாயாவாதைகளி லுண்டாகிய பிறவி த்தொந்தனை நீங்குகைநிமித்தமாக. —விண்முதறந்த கொண்மூ ப்படலத் திருளறவுதித்த காறக - ஆகாச மென்கிறதிலே நின்று மேகமானதுதோன்றி யந்தவாகாசத்தை மறைக்க வதனுலுண் டாகிய விருளானது நீங்குகைநிமித்தமாக வந்த வாகாசத்திலேநி ன்று தோன்றி யந்தமேகங்களைநீக்கி யாகாசத்தை நின்மலமாக் கின வாயுவைப்போல,—விவேகந்தன்னிற் றோன்றி - அந்தப்பி ரமத்திலேநின்றும் விவேகஞானமானது தோன்ற,—சாதகமனை த்தையும் - இந்தப்பிரமத்துக்குண்டாகிய மறைப்புக்களெல்லாத் தையும்,—மன்னகப் பிரிப்பு மடி யிழை வாங்கலும்போல ஞால ம்பொய்யறக் கழிந்து - நிலைபெற்று வாராநிற்கிற தொருவீட்டை யொருத்த னொருவைக்கோலாகவு மோரொரு மரமாகவும்நாளி லே பிடிங்கிப்போட்டபின் அந்த வீடென்கிற சொரூப மில்லை யாய்ப்போன தன்மைபோலவும் மடியாகிய புடவையு மப்படித் தானேரோரிழையாக வாங்கிப்போட்டாற் புடவை யென்கிறத ன்மை போனாற்போலவும் பிரபஞ்சமாகிய பொய்யையும் பிருதி விமுதலாகக்கண்டிது நானல்லவிது நானல்லவென்று நியதிபண் ணிநாளிலே நீங்கிக்கொண்டு,—தானே தானாய்த் தன்னிற் றன் னைத்தானேகண்டு தன்னலமுற்றி - இப்படியந்த வுபாதிக ணீங் கினவிடத் திந்தவறிவான இந்தப் பிரமந்தானேயாய் தன்னிடத்தி லே தற்சொருபத்தைத் தானேதரிசித்துத் தன்னிடத்திலுண்டா கிய வின்பத்தைத் தானேயநுபவித்து,—வசையி றத்துவ மசிபத த்தெளிவா லகமே பிரமமாயினனென வறிந்து - குற்றமற்றிருக் கிற தத்துவமசியென்கிற மகாவாக்கியத் தொம்பதந்தத்பத மசிப தமென்னு மிலக்ஷணை மூன்றுமறிந்த தெளிவுகொண் டந்தப்பி ரமந் தானென்கிற பிரமஞானத்தைத் திரவிளங்கி, —அசலனுகி இந்தப்பிரமஞான முண்டான விடத்துப் பின்னைச் சற்றுஞ் சலந மில்லாதவனும், உபாதிகளோடுங் கூடிச் சத்தாதி விடயங்களைப் புசிக்குமிடத்துச் சலநமில்லையென்ற தென்னையெனில், —நற்சல

சலமதியெனக் கண்டிடும் - உபாதிகளோடுங் கூடிச் சத்தாதிவி டயங்களைப் புசிக்குமிடத்தே யந்தவுண்மைக்குச் சலனமில்லாதது நல்லஜலமான தசைந்தவிடத் தந்தஜலத்தோடுங்கூடினசந்திரனு மொக்க வசைந்தாற்போலே யிருக்க வந்தச்சந்திரனுண்மையை ப்பார்க்குமிடத் ததற்கில்லையானாற்போல விந்தவறிவையுங்காண ப்படும். (இதுஜீவன்முத்தியிலக்கணம்) (இனிபரமுத்தியிலக்க ணம்,)—உடலம்விண்டகல் கடத்து மங்குலதுடைதர வெங்கு மாந்தகைத்தே - இந்தச்சரீர தொந்தனை விட்டவவதரத் தந்தவ றிவு மந்தப்பிரமமு மொன்றுபட்டவிடத் தென்போல வென்னி ல் விசாலமாக விருக்கிற கடத்துக்குள்ளே யகப்பட்டுநின்ற வா காயமிந்தக்குட மானதுடைத்த வவதரத் தந்தப்பிரகாசமுந்தானு மொன்றுபட்டாற்போல வாமெனக்கொள்க. (இதுபரமுத்தி.)— இவ்வகையுணர்ந்து செய்தொழிலருத மடவோர்தாமும், எ - து அதுநானென்கிற பிரமஞானத்தையறிந்து தான்முன்புசெய்துவ ந்த கன்மங்களெல்லாவத்தையும் விடமாட்டாத வறிவில்லாதவர் தாமும்.— கடனு வியற்றுங் கன்மகாண்டத் தொன்மைபுரிவா ற்றோற்றியவித்தை - எ - து, அந்தப்பிரமஞான முண்டாகைநி மித்தமாகச் சாதநசதுஷ்டயமாகிய கன்மங்களையநுஷ்டித்தந்தத் தொழில்களைப் பழகிச்செய்துவர விவேகஞான மானதவர்களுக் குண்டாகாநிற்கும்.— மேற்கடையரணியி லெழுந்தெரியவற்றை விழுங்கியதென்னத் தன்னெறிந் துள்ளதானுயழியும் அப்படி யுண்டான விவேகஞானமுந் திக்கடைக்கோலை மேலேவைத்துக் கடைய வந்தத்தொழிலினாலே யுண்டாகிய நெருப்பந்த வரணி யையுங் கோலினையுஞ் சேரச்சுட்டுப் போட்ட தன்மைபோலத் தானென்று மொழிந்து மற்றுண்டாகிய கன்மங்களனைத்தையும ழித்துப்போடா நிற்கும்.—அந்நிலையன்றி - அந்தநிலையிலே நின் றுவிடக்கடவன், அஃதொழிந்து,—அழிவறுமுத்தியேயா தென் று தன்னியல்பை மாயாவாதி வகுத்துரைத்தனனே - நிலைபேறு டையதாயிருக்கிற முத்திபொருந்தாது, இப்படியே தன்னுடை

யபெத்தத்திலு முத்தியிலுமுண்டாகிய முறைமையினை மாயாவா
தியானவன் விரித்துச்சொன்னான். (க)

மாயாவாதிசங்கற்ப முற்றிற்று.

மாயாவாதிசங்கற்பநிராகரணம்.

உரைதருபிரம மொன்றெனுமுரைகண்க்
வருபிரமாண மறையெனிலருமறை
யொன்றென்றதன்றி யிருபொருளுரைத்த
னன்றன்றபேத நாடியபொருளேற்
பேதமும்பேதமு மோதவேண்டா
பேதமெனினு மபேதமெனினும்
பேதாபேத மெனினுமமையுநின்
னையமிலுரையிற் பையவந்துளதாந்
திகழ்பிரமாண விகழ்வுமுண்டன்றிப்
பெத்தம்பேத முத்தியபேதமே
ஸ்நவத்திதமா மவையிருதிறனு
மினியப்பழமொழி யிரண்டலவொன்றே
யன்றியும்பெத்தம் பேதத்தறைதலு
மொன்றியமுத்தி யபேதத்துரைத்தலும்
பழுதாமித்திறம் பதையாதாய்கமற்
றெழுதாமறையெனு மிப்பிரமாண
மாருரைதானே யாயினதேலுன
தேகமநேக முறபியம்பாமற்
சத்தரூபர் தாகாதெனில்வானத்
தொத்தொலியுறழு மெனில்வறிதுநியா
தன்றியும்பதமும் பாழியுமனைத்து

மின்றியோரொலியா யெழுந்திடுமதனுக்
கறிவிலதருவில் தறியாதறையா
தன்றியுமவ்வகை யகண்டிதமதுவிது
வென்றதுகுறிப்ப தெவ்வகையாவு
மொன்றெனுமுரையு மொழிந்தனையன்றே
யருமறைபிரம வுரையெனினதற்குத்
தந்ததாலு முதனவில்பொறியில
தென்னிலோருடற்கண் மன்னியவல்கை
யறைந்தற்றெனப் தார்சொல்தமலத்
திறப்பெற்றின்றே செய்தோர்பெயராற்
சுயம்புவென்றுல கியம்புமென்றறியினித்
தற்கிட்டலவரைத் தான்றெழுதுரைக்குஞ்
சொற்கேற்புரவல னேவலமைச்சரை
யடிகண்மற்றெங் குடிமுழுதாண்மினென்
றேத்தியிறைஞ்சிக் காப்பர்களென்றுஞ்
சேனஞ்செயப் பேசினனன்றி
யிளையவைபிறரிற் கனவிலுமில்லே
தன்னைத்துதிக்குஞ் சொன்னலந்தானுமத்
துறையறிவாணர்க் கறைவதொன்றன்றியுந்
தனக்குத்தானே தன்னலம்பகரா
தசத்துக்குரையா தார்க்சுரையுயிர்க்கெனி
லுரைபிரமாண மிறைபிரமேய
நீபிரமாதா நின்பிரமிதியென
நால்வகையுளதென தேகநன்றன்றே
நற்பிரமாண நிற்பதொன்றன்று
லப்பிரமேயமு மதனியல்பன்றே
கன்னற்சுவையி லந்நியமில்தா
லினிமைதோன்றுத் தனிமைத்தென்றனை
யறிவிற்குவமை யசத்தாங்கட்டி

பிறிவித்தொட்டினும் பேறதுருதே
தற்பரவிரிவு பொற்பணிதருமெனிற்
செய்வோரின்றிச் செய்வினையின்மையிற்
பொன்மணியாகை தன்பணியன்றே
செய்வோர்போலாச் செயப்படுபொருண்முதற்
செய்வோரேயாச் செய்யவும்படுமே
சுத்திவெள்ளியிற் றோன்றிற்றாயினுஞ்
சத்துலகேதுந் தாராதருமெனி
னுலகமித்தையென் றோராதுரைத்தனை
நிலவுநின்மரபு நினைந்திலையாங்கொல்
விவகாரத்தில் வேண்டுதமுலகம்
பரமார்த்தத்திற் பகராமென்னிற்
ப்ரத்துளதேலிவை யும்பரமார்த்தம்
ப்ரத்திலதேலொழி முன்பகர்மாற்ற
மதன்முதலிதுவென வுதவுகவன்றியும்
விவகரிக்குங்காற் றிகழ்ப்ரமார்த்த
நிலையதுதெரியி னிதுநீயேற்
றெரியாதாயி னஃதுந்தெரியா
துரையாளவையு மொழிந்தனையன்றே
யளவைகாண்டல் கருதலுலுரையென
வுளதவைமூன்றின் மொழிவழிநுழையி
னின்பிரமேய மென்பதெனுங்கொல்
பொற்பிதிர்பிதிர்ந்தும் பொன்னேயாகின்
றற்பரமசித்தைத் தருமாறென்னெனிற்
சிலம்பிநூறரு நலம்போற்றோற்று
மென்றனையது வதன்றொழிலன்றியு
மொன்றதனியல்புல கோரியல்பன்றெனப்
பலமிலைப்பழம்பூப் பாதவந்தருநீர்
திரைநுரைதிவலை சிலதருமிவைபோற்

முனேபலவா மெனநீசாற்றினை
சத்தசத்தாகவுஞ் சத்தினிலசத்தின்
கொத்துளதாகவுங் கூறினரிலரால்
வித்திலைகனிநனி விழுதாறருநெறி
சத்தலதொன்று தான்றரவேண்டு
நெற்பதர்பலா லத்திற்குபாதானமென்
காரணமின்றிக் காரியம்பிறவா
பாரிடையொருபடம் பண்ணவும்படுமே
யந்தமில்பிரம மவித்தைகாரணமெனத்
தந்தனையவித்தை தானெய்துறாத
றன்னியல்பென்னில் வன்னிதன்வெம்மையிற்
சத்தினதியல்புஞ் சத்தேயசத்தெனில்
வைத்தனியல்பெனும் வழக்கொழியன்றியு
மிருள்பொதிவிளக்கென வருமருவிளக்கிற்
கருமைபயந்த பெருகொளிதருமெனிற்
றன்னியல்பன்றத னுபாதிவசத்தான்
மன்னியதன்றிமைத் தான்றனிமாயா
தொன்முனசுத்த னன்முமன்றே
யாங்கொருகாலத் தோங்கியதாயி
னந்தமிலவித்தை வந்தணைவதற்கோ
ரேதுவேண்டும் புயலியல்பெனின்வீ
டேரதவேண்டா வொழிந்தோரினுமுறுங்
களங்கமதுறவுறு மவித்தைதற்கவித்தல்
விளங்கியபிரம விளையாட்டாயி
னவித்தையென்பதொன் றங்கியந்தன்னி
லுதிக்குமென்றமுன் னுரையுமறந்தனை
நுண்ணூர்குடம்பை நந்துழிபோலுட்
படுநெறியதனால் விடுநெறியிலதாற்
றலைமையுமறிவு மிலதெனவித்தையை

விடுத்தெடுத்தாணரும் வேற்றோரன்றே
யொளிகொடாமிரங் குளிகைபெற்றாங்கத
னவித்தையவித்தை தவிர்குமென்றுரைக்கி
னித்தனறிவன்சுத்த னென்றுரைத்த
வித்தகமென்னீ வித்தையும்வேறொன்
றெம்மனோரி லொருவனின்னிறை
யமமசைவந் தவனியன்றே
பன்மணிபசுநற் பாத்திரமெனவு
நன்னூல்பானீர் நற்கெதிரெனவு
முடலையுமுணர்வையு முவமித்தனையேற்
றடமணிசரடொடு தாங்கூடலவே
யுணர்வுணர்வொழியி னுலகுணர்வுறினின்
பாலும்பசுவுஞ் சாலுஞ்சாலக்
கலம்பல்வன்றிச் சலம்பலவிலதெனக்
காணுநரின்றி வீணின்விளம்பினை
யாடியுணிழல்போற் கூடுதல்கூறிற்
றன்னிழல்கொண்டு தற்பணஞ்சலிக்கின்
மன்னிழல்கொண்டுடல் வந்தகன்றிடுமே
மன்னயக்காந்த மெனவுடல்பிரம
சந்நிதியளவிற் சலித்திடுமாயி
னகண்டிதன்சந்நிதி யலதிலதெனவ்வு
நடந்திடவேண்டுங் கிடந்திடப்பெறாவே
காந்தத்திரும்பு காட்டுநேர்ப்பெறிலயஞ்
சேர்ந்திடுநீக்குஞ் செயலதற்கிலதே
கனத்துயர்கயிற்றர வெனச்சிலதொடுத்தனை
கனவின்பயனு நனவின்பயனும்
வினையின்பயனவை பொய்யெனவேண்டா
வுடன்மாறாட்டக் கடனதுகருதுக
வுற்றபுற்று மற்றதிற்கயிறு

முடலுங்கூடச் சடமெனவறிதி
யறிவுகயிறென் றறியாதன்றே
யச்சமதடைதல் கொச்சமையுடைத்தே
யின்னுமக்கனவி லிருளுறுகயிற்றிற்
பின்னுநின்பிரமம் பிரமித்திடுமே
துன்னியவினையிற் செம்மலர்ப்பளிங்கெனத்
தானூர்தகைமை யானல்லனென
வொருபயனன்றிப் பலபயன்மரீஇய
திருவினைதருபய னெனநனிவேண்டி
லாண்டவித்தையு மவித்தைகொடாக்கையு
மீண்டிருவினையு மியம்பினைபரத்தைக்
கள்வரைப்பிணிக்குங் காவலரெனமுய
ரெல்வினைத்தொடக்கிற் றேன்றுடற்சிறையிட்
டிருவினையூட்டு மெம்மானம்மா
னருவினையுடற்க ணவத்தைகளுரைத்தனை
யாருறுபவர்பர மகண்டிதமடங்கா
தோர்விலதுடல்சட முருநெறியாதெனின்
மன்னியகரண மாறுட்டத்திற்
பன்னினமென்னி னிவையோபரமோ
முதலியதாயி னிவைபிறழ்வெய்தா
திவையெனிலுனது மொழிபழுதளதே
யுடற்படுபிரமமுறுமெனிற் சாளரத்
திடத்தகுமுறவிர னுதியளியெறிதுய
ரங்குலிதானே யருந்திலுடற்கட்
டங்கியவறிவு தனித்துறுமன்றே
தற்பணநிழற்கட் குற்றிபாய்ந்தற்று
னற்கணிற்றுயர நணுகாத்தகைத்தெனி
னின்மொழிவிரோதமுங் காட்சிவிரோதத்
தன்மையுமுறுமவை தவறிலவாகா

யாமுடைப்பதிவகை யாவரும்பலகலை
சொல்லுதலெளிதரி தத்தொழில்புரிவெனப்
புல்லியபழமொழி புதுக்கினையன்றே
யகண்டிதமெனநீ பகர்ந்தமைதனக்குப்
பந்தமிதுவெனத் தந்தமைகருதில்
வானினடக்குங் காலினைப்பிடித்துப்
பருவிலங்கிட்ட வொருவனீயன்றே
பந்தமதகல வுந்துவிவேகம்
வான்வளியெனத்தனிற் றானேதோன்றின்
முன்புளதாயின் மயங்காதிலதெனிற்
பின்புளதாகா திலதுளதெனின்வெளி
மலராதுதருமனல் மரக்கணின்றுகித்
தருவதுதகுமெனிற் றானேதோன்று
விறகினுதித்த கனறகுமாயி
னவித்தையினுதித்த வித்தையம்மரத்
துதித்தவிவேகம் வித்தையென்றுரைத்த
வெந்தழலனைய விவேகமுதித்த
இந்தனமனைய திறையிலன்றற்றே
யிற்படப்பிரிப்பின் மெய்ப்படுமெவற்றையு
மிதுவன்றிதுவன் றெனக்கழிகாலை
யதுவேதானே யாயினதென்றனை
வித்தைமுன்ன ரவித்தையுமவித்தைமுன்
வித்தையுமில்லா வியனெறியிருளென
விருளலவொளிக்கு மொளியலவிருட்கு
மொருகாலத்து மொருபயனிலதா
லிரண்டையுநுகரு முரண்டருவிழியென
வித்தையுமவித்தையு முய்த்ததொன்றுளதே
தானேதானு மானற்பயனென்
றன்னிற்றன்னைத் தானேகாணிற்

கண்ணிற்கண்ணைக் காணவும்படுமே
தன்னலமதனைத் தானேநுகரு
மென்னின்முன்னல் மெய்தாதிருந்ததென்
கட்டிபோலெனக் கதறினையின்பம்வந்
தொட்டிடும்வித்தை யுடையையாயிடினே
தத்துவமசியென வைத்தமுப்பதத்திற்
கொன்றேபொருளென் றன்றேபகர்வது
நீபுலியாயினை யென்றுங்குணரி
லாயினையென்றத தாகுவமைத்தா
னேயாயினமே லாயாயென்று
லகமேபிரம மாயினதென்றுற்
சகமேயறியத் தான்வேறன்றே
யுண்மையிற்சலமில வுடற்சஞ்சலமுறும்
வெண்மதிபோல விளங்கிடுமென்றனை
யசலனுகிச் சஞ்சலசலத்துச்
சலநமேவின மெனமதிகாண
வேண்டுமெதன்றிக் காண்பவர்பிரதே
லீண்டுனதேகமென் செய்ததியம்புக
வுடல்விடக்கடத்துட் படுவெளிபோலெனில்
விட்டென்பெறவுடற் பட்டென்பட்டமற்
றிகலறவொருவ னிவ்வகைதெளியி
லகிலமுமுத்தி யடைந்திடவேண்டு
மறிந்தோர்முத்தி யடைந்தோராயின்
பிறிந்தோருயிர்பல பேதத்தன்றே
கன்மகாண்டங் காரணமாக
மன்னும்விவேக மென்னிலவித்தைக்
கேதுகாரண மோதினையில்லை
யிதற்குங்காரணம் விதித்தல்வேண்டின்றே

யாணியிலுதித்த கனலவைகவர்வெண
விரதத்துதித்த விவேகமழித்தல்
வருந்தியாயினுந் திருந்தியவேத
நீதியெல்லா நீத்துப்போதமொன்
றறியோர்தாமு மவ்வழிநடத்தல்
பொறியோபோத நெறியோவிதுப்வ
நீங்கிடுநெறிதரு பாங்கினைப்பழித்த
னன்றிகொன்ற லன்றேயன்றியு
ஞாலநீதியு நான்மறைநீதியும்
பாலருன்மத்தர் பசாசரிலெனவு
முறங்கினேன்கை வெறம்பாக்கெனவுந்
தானேதவிரா தானுற்புரியா
தொழிற்றிடினிரயத் தழுந்துதறிடமே
யுய்த்தோனன்றி முத்தியுரைத்தல்
பித்தோபிரமஞ் செத்தோபெறவ
துடலையுநீயே சடமெனச்சாற்றினை
வையினும்வாழ்த்தினுங் கொய்யினுங்கொளுத்தினும்
வணங்கினுமுதைப்பினும் பிணங்குதல்செய்யாப்
பிரமத்தன்மை பெறுவதெக்கால
மிருக்குநாள்சில வெண்ணினூல்கதறித்
தருக்கம்பேசித் தலைப்பறியுற்றுக்
கண்டோரிய்ந்தப் பிண்டமுண்டலறிப்
பன்னேபாக்கை தன்னேயுற்றுடல்
விடவருமென்று நடுநடுங்கி
விட்டோர்தெய்வத் தொட்டின்றன்றியும்
யானேயெவரு மானேனென்றவி
னவ்வவர்சிறிய வவ்வவர்வாணுட்
செவ்வினிரயஞ் சேர்த்தவாதனுல்!
மாயாவாதப் பேயாவுனக்குத்

தேவரிலொருவருண்டாக
மேவருநரகம் விடுத்தலோவரிதே.

இ - ள். உரைதரு பிரமமொன்றெனு முரைக்கண் வருபிரமாண மறையெனில் - நீபெத்தமாகவு முத்தியாகவுங் கூறினவுன்னுடைய மதத்தின் ருற்பரியம் பிரமமொன்றுமே யுள்ளதென்று சொல்லுமிடத்து ஒன்றென்றதற்குப் பிரமாணமேதென்னில், இதற்குப்பிரமாணமாகச் சொல்லப்பட்டது வேதமா யிருக்குமென்னில்,—அருமறை யொன்றென்றதன்றி யிருபொருளுரைத்த னன்றன்லு - அரியவேதமானது பிரமமொன்றுமே யுள்ளதென்று சொல்லுவதன்றி ஜீவபரமிரண்டென்று சொல்லுகிறது நீயிட்ட பிரமாணத்துக்கு நன்ருகாது,— அபேதநாடிய பொருளேல் - வேதமப்படி யிரண்டென்றது மபேத சித்தாந்தத்தைச் சொன்னதாயிருக்குமென்னில்,— பேதமுமபேதமு மோதவேண்டா - நீ யொன்றென்றதற்கிட்ட பிரமாணமிரண்டென்று மிரண்டல்லவென்றுஞ் சொல்லவேண்டுவதில்லை. பேதமென்று மபேதமென்றும் பேதாபேதமென்றும் வேதஞ்சொல்லுகிற தெல்லா மந்தப்பிரம மொன்றையுமா யிருக்குமென்னில்,— பேதமெனினு மபேதமெனினும் பேதாபேதமெனினு மமையு நின்னையமிலுரையிற் பையவந்துளதாங் திகழ்பிரமாண விகழ்வும் - வேதமிரண்டென்ருலு மிரண்டல்லவென்ருலு மிரண்டுமா யிரண்டல்லவுமா யிருக்குமென்ருலு மமைவுபிறந்திருக்கிற வுனனுடைய சந்தேகமற்ற சாத்திரத்திலே விசாரித்துப் பார்க்குமிடத் துன் மதத்திலே விளங்கப்பட்ட பிரமாண விரோதமுண்டாகா நிற்கும்,—உண்டன் றிப்பெத்தம் பேதமுத்தி யபேதமேல் - அப்படிப் பிரமாண விரோத முண்டாகாது காணும் அந்தவேதம் பெத்தத்திற் பேதமென்று முத்தியிலபேதமென்றுஞ்சொல்லுமென்னில்,—அநவத்திதமாமவையிருதிளனும் - சாத்திரம் பெத்தத்திற் பேதமென்று முத்திலபேதமென்றுஞ் சொன்ன விரண்டுவகையும் விசாரித்துப்பார்க்குமிடத் துன்னுடையசாத்திர மறுதி

யில்லாததாம். ஆகையாற் சாத்திரவிரோத முண்டென்கிறது த
ப்பாது,—இனியப் பழமொழி யிரண்டல வொன்றே - நானாவ
த்திதமாயிருக்கு மென்றது கொண்டு நீயிப்பொழு தந்தப்பழை
ய மொழியாகிய வேதமிரண்டென்று சொல்லாது ஒன்றென்று
சொல்லுமென்னில்,—அன்றியும் பெத்தம்பேதத் தறைதலுமொ
ன்றிய முத்திபேதத் துரைத்தலும்பழுதா மித்திறம்பதையா தா
ய்க,—சாத்திரமுன்னே யிரண்டென்று சொல்லி யிப்போதொ
ன்றென்று சொன்ன தோஷமன்றியும் பெத்ததிசையில் ஜீவபர
மிரண்டா யிருக்குமென்றதும் முத்திதிசையில் ஜீவபரமிரண்டு
மொன்றாயிருக்குமென்றதுங் குற்றத்தை யுடைத்தாம். இப்படி
நான்சொன்னவகையைப் பதறுமலாய்ந்து பார்ப்பாயாக.—மற்
றெழுதாமறையெனு மிப்பிராமணமாருரை - அதொழிந்தஎழு
தப்படாதவேதமாகிய விந்தப்பிரமாண மாராலே சொல்லப்பட்
டது,—தானேயாயினதேல்-அஃதொருவராற் சொல்லப்பட்ட த
ல்லசுயம்புவாயுள்ள தொன்றென்னில்,—உனதேக மனேகமுறும்
நீபிரமமொன்றென்றது பொய்பிரமமொருமுதலும் வேதமொ
ருமுதலுமாக வுன்னுடையஏக மநேகமாய்ப் பொருந்தாநின்றது
- இதன்றியும்,—இயம்பாமற் சத்தரூபந் தகாதெனில் - ஒருவனு
ச்சரியாமற் சத்தத்தினுடையசொரூபந் தானுகத் தோன்றுதென்
னில்,—வானத்தொத்தொலி யுறழுமெனில்-ஆகாசத்திலேயொரு
வருச்சரியாமற்சத்தமானதுண்டானாற்போலவேதமுமொருவ ருச்
சரியாமற்றானே யுண்டாகாநிற்குமென்னில்,—வறிதுதியாது - ஆ
காசத்திலே வாயுவேதுவாகக்கொண்டு சத்தமுண்டாவதொழிந்து
சும்மாச்சத்தந்தோன்றுது,—அன்றியும் பதமும் பாழியு மனைத்து
மின்றியோ ரொலியாயெழுந்திடு மதனுக்கறிவிலது-அன்றியும் ப
தமென்றுங் கிரமமென்றும் பாழியென்று மின்னும் பலசத்தங்க
ளுமத்தங்களு மத்தங்களுமாயிருக்கும் வேதமானது இப்படி யா
காசத்திற்சத்தமொரு பிரகாரமாயிருக்கும் அந்தசத்தத்துக்கறிவெ
ன்ப தொன்றில்லை இந்தவேத மறிவாயிருப்ப தொன்றுகையாலந்

த விகாரசத்திலுண்டாகிய சத்தம்போலுமிந்தவேதமென்றுசொ ல்லலாகாது. வேதந்தானே யுண்டாகாதென்முலந்தவேதத்தைச் சொன்னூர் சிலர்வேண்டும். இதற்கு,—உருவிலதறியா தறையா து - இந்தச்சரீரத்தாலே சொல்லப்பட்டது வேதமென்னி லிது சுத்தஜடமாயிருந்தபடியாலே யொருசத்தத்தையு மத்தத்தையுஞ் சொல்லமாட்டாது. அன்றியுமவ்வகை யகண்டிதமதுவிதுவென் றது குறிப்பதெவ்வகை. அநுவயம். அவ்வகை யன்றியுமகண்டி த மதுவிதுவென்றது குறிப்ப தெவ்வகை - அந்தச்சரீரத்தின்ப குதியுமன்றியும் பிரமத்தினுடைய தன்மையை விசாரிக்கி லதுக ண்டிக்கப்படாததா யகண்டிதமாயிருந்தபடியாலே சத்தத்தையு மத்தத்தையு மதுவிதுவென்று சுட்டிச்சொல்லும்பகுதி யெப்படி யாவு மொன்றெனுமுறையு மொழிந்தனையன்றே - ஆகையாலெ ல்லா மொன்றேயென்று சொன்ன சொல்லையும் விட்டுவிட்டா யாகும்,—அருமறை பிரமவுரையெனில் - அரியவேதமான தந்த ப்பிரமத்தாலே யுச்சரிக்கப்பட்டதென்னில்,—அதற்குத் தந்தத் தாலுமுத னவில்பொறியிலது - அந்தப்பிரம மகண்டிதமாகை யால் பல்லுநாக்கு முதலாக விதற்குச் சொல்லப்பட்ட கருவிகளி ல்லாதபடியினாலே யந்தப்பிரமத்தாற் சொல்லப்படாது,—என் னிலோருடற்கண் மன்னியவலகையறைந்தற்று - அந்தப்பிரமத் தாலே வேதஞ் சொல்லப்படாதென்னில் பேயானது ஒருவன்ச ரீரத்திலே நிலைபெற்றுநின்று வருகால நிகழ்ச்சிகள் சொன்னாற் போல வந்தப்பிரமமு மொருவனுடலைச் சார்ந்துநின்று வேதத் தைச்சொல்லாநிற்கும்,—என்பதார்சொல தமலத்திறம் பெற்றி ன்றே - அப்படியோருடலைச் சார்ந்துநின்று சொல்லுமென்றது ஓர்தேவரைச்சார்ந்தோ ஓரிருடியைச்சார்ந்தோ யாரைச் சார்ந்து நின்று வேதத்தைச்சொல்லப்பட்டது. அப்படியொருவரைச் சா ர்ந்துநின்று சொன்னதாமாகி லதுபசுவாக்கியு மாகையா லந்தச் சொல்லுக்கு நின்மலத்துவமுண்டாகாது, பின்னையெப்படிப்பிர பஞ்சமெல்லாஞ் சுயம்புவென்று சொல்லுவதென்னில்,— செய்

தோர்பெயராற் சுயம்புவென்றலகியம்பு மென்றறியினி - நிஷ்க ளமாய்நின்ற கத்தாசகளீகரித் தவனாலேபிறந்தந்த வேதமுச்சரிக் கப்படுகையினாலே இதைச் சொன்னவன் சுயம்பாகையா லிந்த வேதத்தையுஞ் சுயம்புவென் றுலகஞ்சொல்லாநிற்கும் இஃதிப்ப டியிருக்குமென்று மேலறிவாயாக,— தற்கீட்டலைவரைத் தான் றெழுதரைக்குஞ் சொற்கேல் - வேதமும்முடைய கத்தாசொ ன்னதாகில் அவன்றனக்குக் கீழதாயுள்ளதேவதைகளைத்தா னம ஸ்கரித்துச் சொல்லவேண்டுவானேனென்னில்,—புரவலனேவல மைச்சரையடிகண் மற்றெங்குடி முழுதாண்மினென் றேத்தி யிறைஞ்சிக் காப்பர்களென்றுங் கீசனுஞ்செயப் பேசினன்றா இரா ஜாவினுடைய குடியாயுள்ளவர்களெல்லாரு மந்தராஜாவைக்கண் டு தங்கள்மேற் கருமஞ்சொல்லிக் கொள்ளமாட்டார்கள்; வாசற் காரியம்பார்க்கிற மந்திரிமுதலானபேர்களைக்கண் டடியோங்கள் தேவரீருக்குப் பழையவடிமையாக விருக்குமென்று வணங்கின விடத் தவர்களுக்குண்டாகிய மேற்கரும மந்தக்காரியப் பெயர்க ளாலே தீர்க்கப்பட்டாற்போலக் கத்தாவு மெல்லாரும் பக்குவர் களல்லாததுகொண்டே யபக்குவர்களாயுள்ளவர்கள் வழிபாடுசெ ய்யத்தக்கதாக அந்தேவதைகளையுஞ் சொன்னதா யிருக்கும்.— அன்றியினையவை பிறரிற்கனவினுமிலனே- இஃதொழிந்துபிற தெய்வங்களையவ னமஸ்கரித்துச் சொன்னானென்கிற தவனுக்கு ச்சொப்பனத்தினு முண்டாகாது. உம்முடையகத்தா தன்னைத் தான் ஸ்தோத்திரம்பண்ணுவானே னென்னில்,—தன்னைத் துதிக் குஞ்சொன்னலந்தானு மத்துறையறிவாணர்க் கறைவதொன்று- கத்தாதன்னைத்தான் ஸ்தோத்திரம்பண்ணுகிறது பக்குவான்மாக்க ளாயிருக்கிறவர்கள் தன்னைவழிபாடு செய்யத்தக்கதாகச் சொன்ன தாகயிருக்கும்,—அன்றியுந் தனக்குத்தானே தன்னலம்பகரா தச த்துக்குறையா தார்க்குரை யுயிர்க்கெனில் - இதன்றியுங் கத்தா தன்னுடைய பெருமையைச் சொல்லுமிடத்து வேறேயொருவர் கேட்கச் சொல்லுவதொழிந்து தனக்குத்தான் றன்னுடைய பெ

ருமையைச் சொல்லிக்கொள்ளாது. பின்னைச்சரீரம் ஜடமானப
டியினாலே யந்தச்சரீரத்தை நோக்கிச் சொல்லாது. பின்னையவ
னுடைய பெருமையைச்சொன்ன தாரைநோக்கி ? அது பிறரை
நோக்கிச் சொன்னனென்னில்.—உரைபிரமாண மிறைபிரமே
யமீபிரமாதா வின்பிரமிதியென நால்வகையுளநுன்தேக நன்றன்
றே - சாத்திரமாகிய பிரமாணங்கத்தாவாகியபிரமேயம் ஆன்மா
வாகியபிரமாதா ஆன்மாவினுடைய வறிவாகிய பிரமிதியென்று
நால்வகையாகக் காணப்பட்ட தாகையா னியொன்றென்றது ந
ன்றாயிருந்தது,—நற்பிரமாண ;நிற்பதொான்றன்றால் - ஆகையா
ல் நன்றாகவிதற்குப் பிரமாணமொன்று நாட்டப்பட்ட வேதமு
மொன்றென்றுசொல்லி நிலைநிற்கப்பட்டதில்லை,— அப்பிரமே
யமு மதனியல்பன்றே - இந்தப்பிரமாணத்தாலே யளவிடப்பட்
டதாய் மேல்மறுக்கப்போகிற பிரமேயமு மந்தச்சாத்திரத்தி னு
டைய வியல்பாகப்படும். (இது அவன்வேதஞ் சுயம்புவென்ற
தை மறுத்தது.) (மேற்பிரமேயமென் றவன்கொண்ட பிரமத்
தை மறுக்கிறார்.)—கன்னற்சுவையிலங்நியமிலதா லினிமைதோ
ன்றாத் தன்மைத்தென்றனை - கரும்பிலுண்டாகிய விரதந் தன்
னில் வேறுபாடில்லாததுகொண்டு தன்னுடையவிரதந் தனக்குத்
தோன்றாத்தன்மை போலும் பிரமமுந்தன்னுடையவின்பத்தை
த்தானறியாதென்றும் நீயுன்மதத்திலேசொன்னாய்.— அறிவிற்கு
வமை யசத்தாங்கட்டி பிறிவித் தொட்டினும்பேறாதாறே - அ
றிவாயுள்ளதற் குவமைசொல்லுமிடத் தறிவாயுள்ளதைச் சொல்
லாமல் ஜடமாயுள்ள கரும்புமிரதமும் போலுமென்று சொன்னா
ய். அந்தத்தோஷமன்றியுங் கரும்பிலுண்டாகிய கட்டியைத் தன்
னிலேபிரித்துவைத்து மேலோரவதாரத்திலே கூடினவிடத்தித்த
னைநாளிந்த விரதத்தையிழந்தோமே யிப்பொழுதிந்த விரதத்
தைப்பெற்றோமே யென்கிறதன்மை கட்டிக்குண்டாகா தாகை
யாலது பிரமத்துக்குவமையன்று,இதன்றியும். தற்பிரவிரிவுபொ
ற்பணிதருமெனில் - பரப்பிரமந் தேகாதிபிரபஞ்சமாகப்பலவா

கவிரிந்த தன்மைபொன்னுன து பலபணியாயிருந்த தன்மைபோ லுமென்று நீசொல்லில்—செய்வோரின்றிச் செய்வினை யின்மை யிற் பொன்பணியாகை தன்பணியன்றே - இந்தப்பிர பஞ்சத்தி ற்செய்வோ ரொருவரையன்றிச் செய்தொழிலானதுகாணப்படா தாற்போலப் பொன்னுன்று மொருவன் பண்ணப்பல பணியாக விருந்தொழிந்து தானுகப்பலபணியாகாது. நீசொன்னபிரமம் பிரபஞ்சமாக விரிந்ததும் வேறேயொருவனுலே செய்யப் பட்ட தாகவேண்டும். அப்படியன்றுகாணும் எல்லாத்தையுஞ்செய்தது பிரமந்தானே யென்னில்,—செய்வோர்போலாச் செயப்படுபொ ருண்முதல் - இந்தவுலகத்திற் செய்கிறவர்கள் போலாயிராதிவர் களாற்செய்யப்படும் பொருள்களுக்கு முதலாயுள்ள வுபாதானமு ம். அதென்போலவென்னில் குலாலனைப் போலேயிராது சால் குடம் சட்டி பானைக் குபாதான மாகியமண்ணும். ஆகையாலி ந்தப்பிரமத்தை யின்றிப் பிரபஞ்சத்துக் குபாதானம் வேறே யொன்றுண்டாகவேண்டும். அப்படியோருபா தானமுண்டாகி லதுவேயமையாதோ யிந்தப்பிரமமே னென்னில்,— செய்வோ ரேயாச்செய்யவும்படுமே - அந்தவுபாதானம் ஜடமாயிருந்த படி யாலே யதுதானுகப் பிரபஞ்சமாகாது அந்த வுபா தனத்தைக் கொண்டு செய்கைக்குக் கர்த்தாவேண்டும். அதுவன்றிப் பிரபஞ் சத்தி லியாதொருபொருள்களுஞ் செய்வோரொருவரையில்லாம லந்தத்தொழில்கள்தான் செய்யப்பட்டுவருவது முண்டாமோ,— சுத்தி வெள்ளியிற் றோன்றிற்றுயினுஞ் சத்துலகேதுந்தாரா தரு மெனில். - சுத்தியென்னுஞ் சிப்பியானது வெள்ளியாகத்தோன் றினுர்போலக் கண்டவர்களுக்கு அசத்தியமாயுள்ள பிரபஞ்சமு ஞ்சத்தியமாகத் தோன்றிற்றுயினும் அறிவாயுள்ளபிரமம் ஜடமா யுள்ளபிரபஞ்சத்தை யொருபிரகாரத்தா லுண்டாக்காது. உண் டாக்குமென்னில்,—உலக மித்தையென் றோதுரைத்தனை-நீ முன்னே யிந்தவுலகத்தைப் பிராந்தியென்று சொன்னது விசாரி யாமற் சொன்னுயாகவேண்டும்,—நிலவு நின்மரபு நினைந்திலையா

ங்கொல் - இப்படிமலைகையாற் பொருந்தப்பட்ட வுன்னுடைய வத்தித்தினது சிரமத்தை மறந்தாயாகவேண்டும்,— விவகாரத்தி லவேண்டுதுமுலகம் பரமார்த்தத்திற் பகராமென்னில் இந்தப் பிரமமுபாதிகள் வசத்தினாலே தன்னைஜீவனென்று பிரமாணம் பண்ணிக் கொண்டு நிற்கிற விந்தவிவகாரதிசைக் குலகமென்று கொள்ளப்படும், அஃதொழிந்து நான்பிரமமென்றறிந்த பரமா ர்த்ததிசையிலே யெல்லாம் பொய்யா யிருந்தபடியாலே யவ்விட த்துக்குலகமென்று சொல்லப்பட் டிராதென்னில், —பரத்துள தேலினையும் பரமார்த்தம் - இந்தவுலகம் பரமார்த்தமாயுள்ளபி ரமத்திலே நின்றுமுண்டானதாயின் அசத்தியமாயுள்ள பிரபஞ்ச முஞ் சத்தியமாயுள்ள பரமார்த்தமாகவேண்டும்,—பரத்திலதேல் - உலகம் பொய்யாயிருந்தப்படியாலே யிந்தப் பரமார்த்தத்துக்குப் பணியல்லவென்னில்,—ஒழி முன்பகர்மாற்றம் - மூந்தப்பிரமத் திலேநின்றுந் தோற்றினதென்று சொன்னவார்த்தையை நீயொ ழித்துவிடுவாயாக,—அதன்முத லிதுவெனவுதவுக - இந்தவுலக ம்பிரமத்திலே தோன்றினதல்லவாயின் அதுதோன்றின வுபாதா னமுனக்குத் தெரியுமாயி னின்னதென்று சொல்லுவாயாக,—அ ன்றியும் விவகரிக்குங்காற் றிகழ்பரமார்த்தநிலை யது - இந்தத் தோல்வியன்றியும் இன்னமுஞ்சொல்லுமிடத்து நின்மலமாயெல் லாவுபாதிகளையுங் கழன்ற பரமார்த்த நிலையாயிருப்பதொன்றந்த ப் பரப்பிரமம்,—தெரியினிது நீ - அந்தப்பிரமந்தான் காணுநா னென்னில் அது அறிவாயிருப்பது, விசாரித்துப் பார்க்குமிடத் துமலமாயிருக்கிற விந்த மாயாவுபாதிகளோடுஞ் சம்பந்தியாயிரு ப்பானொருத்தனியாகையாலிந்த ஜீவனுந் தனித்தொரு முதலெ ன்,—நீயேல் - அந்தப்பிரமந் தான்காணுநானென்னில் அஃதறி வாயிருப்பது இஃதறியாமலிருப்பானேன்,—தெரியாது - இதுஉ பாதிவசத்தினாலே யறியாமலிருக்கும்,—ஆயி னஃதுந்தெரியாது- நீயுமந்தப்பிரமமு மொருமுதலாயிருக்கையினாலே இக்குபாதிவ சத்தினாலே யறியாமலிருக்குமாயின் அந்தப்பிரமமு மறியாதாக

வேண்டும்,—உரையாரளவையு மொழிந்தனையன்றே - உன்னு டையவத்தத்தை யளவிட்டுச் சொல்லிவைக்கிற பிரமாணத்தை யும்விட்டுவிட்டாய், அதேதென்னில் அஃதொன்றைச் சொல் ல நீயொன்றைச் சொல்லுகையால். அந்தச் சாத்திரத்தின்படி காணு நான்சொன்னதென்னில்,— அளவை காண்டல் கருதலு ரையெனவுளது - பிரமாணமாவது பிரத்தியக்ஷமென்று மநுமா னமென்று மாகமமென்று மூன்றுவகைப்படும்,— அவைமூன்றி ன்மொழிவழி நுழையினின் பிரமேயமென்ப தெனுங்கொல் அ ங்ஙனஞ் சொல்லப்பட்ட பிரத்தியக்ஷத்தின் வழியாலு மநுமாந த்தின் வழியாலு மாகமத்தின் வழியாலு நுழைந்தொன்றையறிந் துகொண்டு வருமாயின்வாக்குமனத்துக்கு மெட்டாதவுன்னுடை யபிரமேயமென்று சொல்லப்பட்ட தென்னமாய்முடியும். (இது அவன் பிரமேயமென்றதை மறுத்தது,) (மேற்சித்தினிடத்த சித் துத்தோன்று மென்பதைமறுக்கிறார்.)—பொற்பிதிர் பிதிர்ந்தும் பொன்னேயா நின்றற்பரம சித்தைத் தருமாரென் னெனில் - பொன்னும்பனியும் போலப்பிரமமும் பிரபஞ்சமு மென்றாய். பலபணியானதும் பொற்கட்டியானதும் மாற்றுநிறமு மொருப டித்தாகக் கண்டோம்பின்பு பொன்னேடுங்கூடப் பொன்னாய் நின்றதுங்கண்டோம் ஆகையாலுன்னுடைய சத்தாயுள்ளபிரமம ந்த வசத்தாயுள்ள பிரபஞ்சத்தைத்தந்த பிரகார மெப்படியென் றுநான்முன்னே யுன்மதத்திலே கேட்டபொழுது,—சிலம்பிநூற ருநலம்போற்றேன்று மென்றனை - சித்தாயுள்ள சிலம்பிஜடமா யுள்ள நூலைத்தந்த தன்மைபோலுஞ் சித்தாயுள்ள பிரமத்திலேஜ டமாயுள்ள பிரபஞ்சந் தோன்றினதென்றுசொன்னாய்,— அதுவ தன்றெழில் - அந்தநூலையநவரதமுந் தோற்றி வித்துக்கொண்டு நிற்கிறதந்தச் சிலந்திக்குள்ளதொழில் பிரபஞ்சம் பிரமத்திலேநி ன்றேரவதரத்திலே தோன்றுவதொழிந் தநவரதமுந் தோன்றி க்கொண்டு நில்லாது,—அன்றியுமொன்றத னியல்புலகோ ரியல் பன்றெனு - அதன்றியுஞ் சிலந்தியினிடத்திலே தோன்றின நூ

லொருதன்மையாகக் காணப்பட்டது பிரமத்திலே தோன்றின பிரபஞ்சமொரு தன்மையாகக் காணப்பட்ட தில்லையென்று நான்முன்னேசொன்னபொழுது,—பலமிலை பழம்பூ பாதவந்தருநீர்திரை நுரை திவலை சிலதருமிவைபோற் றானே பலவாமென நீசாற்றினை - காயையு மிலையையும் பழத்தையும் பூவையு மரமானது தந்த தன்மைபோலவும் திரையையு நுரையையுந் திவலையையுங்குமிழியினையு நீரானது தந்தத் தன்மைபோலவும் பிரமந்தானே பலவிதமாயுள்ள பிரபஞ்சமா யிருக்குமென் றுன்மதத்திலே சொன்னாய்,—சத்தசத்தாகவுஞ் சத்தினி லசத்தின் கொத்துளதாகவுங் கூறினரிலரால் - அறிவாயுள்ள தறியாமையாயிருக்கு மென்று மறிவினிடத்திலே யறியாமையினது கூட்டங்கடோன்றுமென்று நீ சொன்ன விந்தமலைவு புத்தர் சமணாதிகளுஞ் சொல்லார்கள், (ஆல்-அசை.) பின்னையிந்தப் பிரபஞ்சந்தோன்றினபடியெப்படியென்னில்,—வித்திலை கனிநனி விழுதாறருநெறி சத்தல தொன்று தான்றரவேண்டும் - சூக்குமமாயுள்ள வித்தானது இலையையும் பழத்தையுமிகுதியாயுள்ள விழுதையுமுடைய தூலமாகிய வாலமரத்தையுந்தந்த தன்மைபோலத் தூலமாய்ப் பலவாயிருக்கிற பிரபஞ்சத்தையுஞ் சூக்குமமாய் அசத்தா யிருக்கிறதோருபாதானந் தந்ததாகவேண்டும். அப்படி யன்றிகாணும்நெல்லிலேநின்று வைக்கோலும் பதருந்தோன்றினாற்போலச் சித்திலேநின்று ஜடமாயுள்ள பிரபஞ்சந்தோன்றுமென்னில்,—நெற்பதர்ப லாலத்திற் குபாதானமென் - நெல்லுஞ் சூக்குமமாய் ஜடமா யிருக்கையா லதுவும் வைக்கோலுக்கும் பதருக்கு முபாதானமென்றறிவாயாக,—காரணமின்றிக் காரியம்பிறவா - ஆகையாற் றனதாகவுடைய காரணத்திலே நின்றுங் காரியந்தோன்றாது. அப்படித் தோன்றுமென்னையாகில்,—பாரிடை யொருபடம் பண்ணவும்படுமே - பருத்திகாரணமாகப் புடவையுண்டான தொழிந்து மண்காரணமாகப் புடவைபண்ணப்படுமோ ஆகையால் ஜடங்காரணமாக ஜடமுண்டாவதொழிந்து சித்துக்காரணமாக ஜட-

முண்டாகாது இப்படியிருக்கையிலே நீ,—அந்தமில்பிரம மவித்
தைகாரணமெனத் தந்தனை-ஜடமாயழிந்து போவதா யிருக்கிற
தேகாதி பிரபஞ்சத்துக்குச் சித்தாயழிவில்லாம லிருக்கிற பிரமங்
காரணமென்று சொன்னாய்,—அவித்தை தானெய்துறுதல் - சித்
தாயுள்ள பிரமத்திலே ஜடமாயுள்ள பிரபஞ்சந் தோன்றவானே
ன்,—தன்னியல்பென்னில் - இந்தப்பிரபஞ்சந் தோன்றுகிறதந்த
ப்பிரமத்துக் கியல்பாயிருப்ப தொன்றென்றுநீசொல்லில்,—வன்
னிதன்வெம்மையிற் சத்தின தியல்புஞ் சத்தே - அக்கினிக் கூஷ்
ணமியல்பானாற்போல நீசித்துக்கியல்பென்று சொன்னபிரபஞ்ச
முஞ்சித்தேயாகவேண்டும்,—அசத்தெனில் - பிரபஞ்சத்தைஜட
மென்னில்,—வைத்ததனியல்பெனும் வழக்கொழி - சத்தாகவை
க்கப்பட்ட பிரமத்தினுடையவியல்பிந்தப் பிரபஞ்சமென்றுசொ
ன்னவழக்கை விடுவாயாக.—அன்றியுமிருள்பொதி விளக்கென
வரும் - இந்தக்குற்றமன்றியுஞ் சித்தாயுள்ள பிரமத்துக்குஜடமா
யுள்ள பிரபஞ்சமியல்பென்றுநீ சொல்லுகிறது பிரகாசமா யுள்ள
விளக்கு இருளானதைப் பொதிந்துகொண்டு நின்றதென்றதை
யொக்கும் அப்படியன்றுகாணும்,—மருவிளக்கிற் கருமைபயந்த
பெருகொளிதகுமெனில் - பெரியவிளக்கினிடத் துண்டாகியமிக்
கபிரகாசமானது கறுத்த மையைத்தந்த தன்மையை யொக்கும்
சித்தாயுள்ள பிரமம் ஜடமாயுள்ளபிரபஞ்சத்தைத் தந்ததென்று
நீ சொல்லில்,—தன்னியல்பன்ற தனுபாதிவசத்தான் மன்னியது
- அங்ஙனம் விளக்கினிடத்திலே கறுத்தமையானது தோன்றின
து விளக்கினுடைய வியல்பல்ல வென்றறி, திரியென்றும் நெய்
யென்றுஞ் சொல்லப்பட்ட வுபாதிகள் வசத்தினாலேமையானது
நிலைபெற்றதென்றுகொள்,—அன்றிமைத்தான் றனின் மாயாது
- அன்றியும் பிரமத்திலேதோன்றின பிரபஞ்சமீளவும் பிரமத்தி
லே யொடுங்காநிற்கும் விளக்கிற்றோன்றிய மையானது மீளவும
ந்த விளக்கிலே சென்றொடுங்காது. அன்றியும்,— ஒன்றானசத்
த னன்றாமன்றே - இந்தப்பிரமமென்று சொல்லப்பட்ட வொ

ப்பில்லாதவன் ருன்சுத்தனெழிந்த சுத்தனுயிருப்பா னொருத்த னல்லவே அப்படியிருக்கச்சே யிந்த மாயாவுபாதிகளோடெங்கூடி யிருக்கவேண்டுவானேன்,—ஆங்கொருகாலத் தோங்கிய தாயின் - அந்தப்பிரமத்தினிடத்திலே யோரவதாரத்திலே யிந்த வுபாதிக ள்வந்துகூடினதாயின்,—அந்தமில்வித்தை வந்தணைவதற் கோ ரேதுவேண்டும் - முடிவில்லாத மாயாவுபாதிகள் பிரமத்தி னிட த்திலே வந்துகூடினதற்கு முன்னே யொருகாரண முண்டாக வேண்டும்.— புயலியல்பெனின் - நின்மலமாயிருக்கிற வாகாசத் தை மேகமானதுவந்து மறைத்ததன்மைபோலச் சுத்தமாயுள்ள பிரமத்தை மாயாவுபாதிக ளியல்பாகவந்து கூடிற்ருெழிக் கிதற் கொருகாரணம் வேண்டுவதில்லையென்னில்,— வீடோத வேண் டாம் - இந்தவுபாதிக ளியல்பாகவந்து பொருந்தின் மோக்ஷமெ ன்றுசொல்லவேண்டுவதில்லை. அதேனென்னில்,—ஒழிந்தோரி னுமுறும். எல்லாவுபாதிகளையு நீங்கிப்பழைய சுத்தத்தைக் கூடி னவர்களிடத்திலு மிந்தவுபாதிக ளியல்பாக வந்து பொருந்தும், அப்படியன்றுகாணும்,— களங்கமதறவுற மவித்தை தற்கவித்த ல் விளங்கியபிரம விளையாட்டாயின் - பிரமத்துக்கு மயக்கமுண் டாகத் தக்கதாகப் பொருந்தப்பட்ட மாயாசரீரங்க ளிந்தப் பிர மத்தைப் பொருந்திக்கொண்டது மிக்கபிரமத்துக்கு விளையாட் டாயிருப்ப தொன்ருயின்,—அவித்தை யென்பதொன் றந்நியந் தன்னிலுதிக்குமென்ற முன்னுரையு மறந்தனை-விளையாடுகிறவர் களுக்கு விளையாடப்பட்ட பொருள்வேருனல்போலப் பிரமத்தி னையுடைய விளையாட்டாகிய மாயாசரீரமும் வேருயிருப்ப தொ ன்ருகையாம், பிரமத்தினிடத்திலே யுபாதிகடோன்றிப் பிரமத் தை மறைக்குமென்று நீ முன்னேசொன்னசொல்லையு மறந்தா யாகவேண்டும்,—நுண் நூற்குடம்பை நூற்குழிபோலுட்படுநெறி யதனுல் விடுநெறியிலதாற் றன்மையு மறிவு மிலதென் - உலட் டுப் புழுவானது தன்னிடத்திலே நின்றுந் தோன்றிய நுண்ணிய நூலாலே தனக்குக் கூடாகப்பண்ணித் தானதற்குள்ளேபுகுந்து

பின்னைத் தானகப்புறப்படமாட்டாமற் செத்ததன்மைபோல வந்தப் பிரமமு மாயசரீரத்துக் குள்ளே விளையாட்டாக வந்துபுகுந்து பின்னைத் தானகப் புறப்படமாட்டாம னிற்கையா லந்தப் பிரமத்துக்குச் சர்வமுதன்மையுஞ் சர்வஞ்ஞியத்துவமு மில்லையென்றசொல்,—அவித்தையை விடுத்தெடுத்தாணரும் வேற்றோன்றே - இதுபாசபந்தியாயிருக்கையாலே இந்த மாயாசரீரத்தைத் தானக விடுவித்துக் கொள்ளமாட்டாமனின்மலமா யிருக்கிறதொரு குருமுதலிந்த மாயாசரீரத்தை நீக்கிப் பாவக்குழியிலு நின்றெடுத்துத் தனக்கடிமையாக வாண்டுகொள்கையின லந்தச்சரீரத்தோடே கூடிநிற்கிறது பிரமமாகாது. அப்படியன்றகாணும்,—ஒளிகொடாமிரங் குளிகைபெற்றுங் கதனவித்தையைவித்தைதவிர்க்குமென் றுரைக்கின் - பிரகாசத்தோடுங் கூடியிருக்கிறசெம்பானது இரதகுளிகையோடுங் கூடினவிடத்துக்காளித நீங்கிப் பொன்னன தன்மைபோல வந்தப் பிரமத்தர்குண்டாக்கிச் சரீரசம்பந்தத்தையு மதனிடத்லே தோன்றின விவேகஞான நீக்க வந்தப்பிரமஞ் சுத்தமாமென்று நீ சொல்லில்—நித்தனவறிவன் சுத்தனென்னுறைத்த வித்தகமென்னி - அப்படி டீசுத்தமாயிருக்கிற முதலை நீ முன்னே நித்தியனென்றுஞ் சர்வஞ்ஞியனென்று நின்மல னென்றுஞ் சொன்ன சாமர்த்திய மென்னதான்,— வித்தையும் வேறொன்று - நீ விவேகமென்று சொல்லுகிறதிந்த வவித்தையோடுங் கூடிக்கொண்டுநிற்கிற முதலல்ல வதை வேறே முதலென்றுசொல், இந்தவிவேகந்தான் காணுமந்தப்பிரமமென்று நீசொல்லில்,—எம்மனோரி லொருவ னின்னிறை - நீ கத்தாவென்றுசொல்லுகிறமுதல்பாசபந்திகளாயுள்ளவெங்களிலேயொருத்தனகவேண்டும்,—அம்ம-நான்சொல்லுகிறசொல்லைப் புத்திபண்ணிக் கேட்பாயாக,— சைவந்தவனியன்றே - யாதொருத்தனைப்பொல்லாதவனென்று சொல்லப்பட்டது அப்படிச்சொல்லப்பட்டவ னியாகவேண்டும். (இதுபிரமிதியைமறுத்தது)(இனிபிரமாதாமறுப்பு.) இதன்றியம்,—பன்மணிபசுமற்பாத்திரமெ

னவு நன்னூல்பானீர் நற்கதிரெனவு முடலையுமுணர்வையு முவ மித்தனையேல் - இரத்தினங்கள் பலவாயிருந்தாயினு மதிற்கோ க்கப்பட்ட நூற்சர டொருதன்மையா யிருந்தாற்போலவும்பசுக் கள் பலவாயிருந்த தாமாயினு மவையிலுண்டானபா லொருதன் மையாக விருந்தாற்போலவும் பாண்டங்கள் பலவாயிருந்ததாமா யினு மவையிற்றிற் பிரதிபிம்பஞ்செய்கிற வாதித்தனொருதன்மை யா யிருந்தாற்போலவுங் கூவலாழி குளஞ் சிறுகுழி கால் பலவா யிருந்த தாமாயினு மவையிற்றிலுண்டாகிய தண்ணீரொரு தன் மையா யிருந்ததுபோலவுமென்று யோனிபேதங்களா யிருந்துள் ளவுடல்களுக்கும் அவையிற்றிற்கூடிநிற்கிற பிரமத்துக்கு முவ மையாகச்சொன்னாய் அப்படியாகில்,— தடமணிசரடொடு தாங் கூடவே - பிரகாசத்தினாலே மிகுந்திருக்கிறமணிகளுஞ்சரடுந்தா மாகக்கூடினதில்லை யவையிற்றை வேறேயொருத்தன் கோக்கக் கோப்புண்டுநின்ற தன்மைபோல வுன்னுடையபிரமத்தையு மிக் தவுடலையுங்கூட்டினவ னொருத்த னுண்டாகவேண்டும், அதன் றியும்,—உணர்வுணர்வொழியி னுலகுணர்வுறினின் பாலும் பசுவு ஞ் சாலும் - உன்னுடையபிரமமான தறியாததாயுங் கூடிநிற்கி றதேகாதி பிரபஞ்சமறிவேயா யிருந்ததாமாயினீ பாலையும் பசு வையு முவமையாகச் சொன்னதற்கொக்கும். அதன்றியும்,—சா லக்கலம்பலவன்றிச் சலம்பலவிலதெனக் காணுநரின்றி வீணின் விளம்பினை - மிகவும்பாத்திரங்களிற் பின்னமொழிந் தாதித்தனி ற் பின்னமில்லையென்றுங் கூவலாழி குளஞ் சிறுகுழி கால் தங்க ளிற் பின்னமொழிந்து ஜலத்திறபின்ன மில்லையென்றுங் கண்டு சொல்வார் சிலரையின்றி விருதாவிலேமிகவுஞ் சிறிது வார்த்தை களை நீசொன்னது திருஷ்டாந்த விரோதமாகையா லதத்தமாகா து.—ஆடியுணிழல்போற் கூடுதல்கூறில் - கண்ணாடிக்குணிழல் தோய்வற நின்றாற்போலச் சரீரத்திலேபிரமந் தோய்வற நிற்கு மென்று நீசொன்னவத்தத்தை நான்சொல்லுமிடத்து,— தன்னி ழல்கொண்டு தற்பணஞ்சலிக்கின் மன்னிழல் கொண்டுடல் வந்த

கன்றிடுமே - தன்னிடத்திலேநிற்கிற பிரதிபிம்பம் பிரதான மா கக்கொண்டு கண்ணுடியானது சலித்ததாமாயின் பிரமத்தினு டைய பிரதிபிம்பம் பிரதானமாகக் கொண்டிருந்தவுடல் கூடியும் பிரிந்தும் நிற்கும் அவையிற்றுக் கில்லாதபடியினாலே யீதத்தம ன்று,—மன்னயக்காந்தமென வுடல் பிரமசந்நிதியளவிற் சலித்தி டுமாயின்-நிலைபெற்று வாராநிற்கிற விரும்பானது காந்தம்விகார மறநிற்க வதனுடைய சந்நிதிமாத்திரத்திலே விகாரப்பட்ட தன் மைபோலப் பரப்பிரமமும் விகாரமறநிற்க வதனுடைய சந்நிதி மாத்திரத்திலே யுடல்போக்குவரத்தைச் செய்யாநிற்குமாயின்— அகண்டிதன் சந்நிதியலதிலதெவையு நடந்திடவேண்டுங் கிடந் திடப்பெறுவே - பரப்பிரமமென்று சொல்லுகிறது கண்டிதமல் லாமலகண்டிதமாகையாலே யதனுடைய சந்நிதியல்லாத விட மோரிடமுமில்லையாகையாற் கடபடாதியாயுள்ளவை யெல்லாம் போக்குவரத்தைச் செய்யவேண்டும். அதன்றியும் உடலானது சேட்டித்துங் கடபடாதிகள் சேட்டையின்றிக் கிடக்கிறதுஞ் சந் நிதியிலே யெல்லாங் காரியப்படு மென்கிறதுக்குப்பெருது. இத ன்றியும்,—காந்தத்திரும்பு காட்டுநெற்பெறி லயஞ்சேர்ந்திடும்-காந் தமு மிரும்புங் கூடிக்கிடந்த தாமாயினு மதைத்தாமாகக் காரியப் படமாட்டாது அவையிற்றை முகமொக்கக் காட்டுவார் சிலரைப் பெற்றகாலத் திரும்பானது காந்தத்தத்தைச்சென்று பொருந்தாநி ற்கும், ஆகையாலுன்னுடைய பிரமத்தையு முடலையுங் கூட்டிக் காரியப்படுத்துகிறது வேறேயொரு முதலுண்டென்று கொள்ளு வாயாக. இதன்றியும்,—நீக்குஞ்செய லதற்கிலதே - காந்தமிரும் பைக் கூட்டிக்கொள்ளுமதொழிந்து நீக்கிக்கொள்ளுந் தன்மை யதற்குண்டாகாது. பிரமத்தின் சந்நிதியிலே யுடல்கூடியும்பிரி ந்தும் வருகையானீ காந்தமிரும்பென்றது திருஷ்டாந்த விரோத மாகையா லதுவத்தமன்று. இதன்றியும்,—கனாத்துயர் கயிற்றர வெனாச் சிலதொடுத்தனை - சொப்பனத்திலே யதிப்பங்களாயுள் ள காரியங்களைக் காண்கிறவன் விழித்தவிடத்ததுபொய்யான தன்

மைபோலவும் இராக்காலம் புற்றின்வாசலிலே கயிறு கிடக்கிற தைக்கண்டு பாம்பென்று புத்திபண்ணிப் பயப்பட்டவனுக்கு விடிந்தவவதாரத்துப் பாம்புபொய்யான தன்மைபோலவுஞ் சுகதுக்கங்களாலுண்டாகிய வநுபோகங்களு மந்தப்பிரமத்துக் குண்டாகாதென்று சொன்னாய்,—கனவின்பயனு நனவின்பயனும் வினையின்பய னவைபொய்யென வேண்டா - சொப்பனத்திற் சூக்குமதேகத்தோடுங் கூடிச் சத்தாதிவிடயங்களை யிவன் புசித்துஞ் சாக்கிரத்திலே தூலதேகத்தைப் பொருந்தித் சத்தாதி விடயங்களைப்புசித்து மீண்டுமிவன்முன்னேசெய்த பிராரத்தம்புசித்தொழிந்து சாக்கிரத்திற்புசித்ததுமெய் சொப்பனத்திற்புசித்தது பொய்யென்று சொல்லவேண்டுவதில்லை,— உடன்மாறுட்டக் கடனதுகருதுக - சாக்கிரத்துக்குத் தூலதேகத்தோடே கூடி யநுபவிக்கும் சொப்பனத்துக்குச் சூக்குமதேகத்தோடே கூடி யநுபவிக்கும் ஆகையால்சரீரவொற்றுமை யுள்ளதென்றறிவாயாக,—உற்ற புற்றுமற்றதிற்கயிறு முடலுங்கூடச் சடமெனவறிதி - இவன்சென்றிராக்காலத்திலே பொருந்தப்பட்டபுற்றும் அதன் வாசலிலே கிடக்கிறகயிறு மிவனுடையசரீரமுமாக மூன்றும் ஜடமென்கிற தை நீயுமறிவை;—அறிவுகயிறென் றறியாதன்றே - அறிவாயுள்ள பிரமங்கயிற்றைக் கயிறென் றறியமாட்டாமற் பிரமிக்குமாகிலதையறிவென்று சொல்லப்படாது,— அச்சமதடைதல் கொச்சைமையுடைத்தே - பிரமங்கயிற்றைப் பாம்பென்று பயப்படுமாயின் அதைக்கத்தாவென்று சொல்லப்படாது, இதன்றியும்.— இன்னுமக்கனவி லிருளுறுகயிற்றிற் பின்னுமின்பிரமம் பிரமித்திடுமே-இன்னமொரு குற்றமுண்டு கனவிற்றீங்கு பொய்யென்றறிந்துங் கங்குலிற்கயிறுபொய்யென் றறிந்து மிருக்கையிலேயுமிளவுங்கனவைக் கண்டவிடத்துங் கங்குலிலே கயிற்றைக் கண்டவிடத்து முன்னுடையபிரமமான தச்சப்படுகிறது தருமே, ஆகையாலிந்தவுடம்போடுகூடி யிப்படிமயங்குகிறது பிரமமன்று இதன்றியும்,—துன்னியவினையிற் செம்மலர்ப்பளிங்கெனத் தானுந்தி

னைமையானல் - சிவந்த பூவோடெங்கூடியிருக்கிற படிகந்தன்னு டைய தன்மையிழந் தந்தவன்னமேயா யிருந்த தாமாயினு மதி லொரு சற்றுந்தோய்வற நின்முற்போலப் பிரமமுமொருங்கிவருகி றகன்மங்களைப் புசிக்குமிடத் தந்தவிடயங்கள் தாமாயிருந்ததாமா யினுமதிலொரு சற்றுந்தோய்வற நிற்குமாயின், —மல்லென்வொ ருபயனன்றிப் பலபயன்மரீஇய திருவினைதருபயனென னனிவே ண்டில் - படிகம்பூவோடு கூடியிருந்தபொழுது சிவந்த வன்ன மொன்றுமேயாயிருந்தாற்போல் வினையோடுகூடினபிரமமுமே கப்பிரகாரமாயிராமல் நானுவிதமாய்க் கொண்டிருப்பானேனெ ன்ன வதுபுண்ணிய பாவங்கள் பலவாயிருக்கையினலே யத்தை யனுபவிக்கவேண்டி யப்பிரமமும் வெகுபிரகார மாயிருந்ததெ ன்றுமிகவு முனக்குப்பக்ஷமாயின்,—ஆண்டவித்தையு மவித்தை கொடாக்கையு மீண்டிருவினையு மியம்பினை - இவ்விடத்திவனை யடிமையாகவாண்டு மிரக்ஷித்துக்கொள்ளுகிற தொருவிவேகஞா னமும் அறியாமையோடுங் கூடியிருக்கிற வோர்சரீரமும் பலவி தமாயிருக்கிற புண்ணிய பாவங்களு முண்டென்முய் ஆகையா ல்,—பரத்தைக் கள்வரைப்பிணிக்குங் காவலரெனமுய ரெல்வி னைத் தொடக்கிற்றேன்றுடர் சிறைபிட்டிருவினையூட்டு மெம்மா னம்மான் - இவ்விடத்துக் களவுகொண்ட கள்வரைக்கொண்டுவ ந்து சிறைசெய்ததற்குத்தக்க தண்டங்களையுஞ் செய்கிற விராஜா க்கினைபோல முன்ஜனனங்களிலே செய்தபழையவினையினதுதொ ந்தனையினலே யுண்டாகப்பட்ட வுடலாகிய சிறைச்சாலையிலேயு ன்னுடைய பிரமத்தைவிட்டுப் புண்ணியபாவங்களென்கிறதண் டங்களைப் புசிப்பிக்கும் சர்வான்மாக்களிடத்துங் கிருபை ஜநித்த வெம்முடைய கத்தாவாயுள்ள சுவாமியென்கிற கத்தா. இதன்றி யும்,—அருவினையுடற்க ணவத்தைக ளுரைத்தனை - அரிதாயுள் ளவினைக்கீடாக வெடுக்கப்பட்டவுடலிலே மூன்றவத்தைப் படு மென்று நீயுன்மதத்திலே சொன்னுய்,—ஆருறுபவர் பரமகண்டி தமடங்காது - இந்தச்சரீரத் தோடெண்டாகிய மூன்றவத்தையும

நுபவிக்கிறதார்தான் பரப்பிரமமோ வென்னில் அது பரிபூரண மாயிருந்தபடியாலே நனவு கனவு சுழுத்திஎன்கிற வவத்தைகளி லடங்காது,—ஓர்வில துடல்சடமுரு நெறியாதெனின் - உடல்ஜ டமாயிருந்தபடியாலே யவத்தைப்படுமென்கிற வார்த்தை யதுக் குண்டாகாது. பின்னேயிந்த வவத்தைப்படுகிற நெறியாதென்று கேட்க,—மன்னியகரண மாருட்டத்திற் பன்னினமென்னின்நி லைபெற்றுவாராநிற்கிற வந்தக்கரணங்கள் பிரிந்தவிடத் துண்டா கிய மயக்கத்தையுடைய தாயிருக்கும் மியாமவத்தையென்று சொ ல்லப்பட்டதென்னில்,—இவையோ பரமோமுதலியது - அந்த க்கரணங்களோ பரப்பிரமமோ விந்தச்சரீரத்துக்கு முதன்மை யுடையது,—ஆயினிவைபிறழ்வெய்தாது-பரப்பிரம முதன்மை யுடையதாயி னந்தப்பரப்பிரமநிற்க விந்தவந்தக்கரணங்க ணீங் கமாட்டாது, அதனால்,—இவையெனி லுனதுமொழி பழுதுள தே - இந்தவந்தக் கரணங்கள் முதன்மையு முடைய தென்னி லெல்லா முதன்மையு முடையது பரப்பிரமமே யென்று வே தஞ் சொல்லு மென்று நீசொன்னது பழுதாகவேண்டும், — உ டற்படு பிரம முறுமெனில் - அப்படியன்று காணும் அவத்தை யுறுகிற துடலுக் குள்ளே யகப்பட்டு நிற்கிற பிரமமேயாகில், — சாளரத் திடத்தகு முறுவிரனுதி யளிநெறி துயரங்குலிதா னே யருந்திடி லுடற்கட் டங்கியவறிவு தனித்துறுமன்றே - பலக ணிவாசலிடத்திலே புறம்பேநின்றுள்ளே யொருவிரலைநீட்ட வந் தவிரல்நுதியிலே யொருவண்டானது கொட்டவதனு லுண்டாகி யவிதன மந்தவிரல்தானே யநுபவித்ததாமாயின் இந்த வுடலிலே பொருந்திநிற்கிற பிரமமவத்தையைத் தனியேயநுபவித்ததென் றுசொல்லலாம். அந்தவிரனுதியிலே வண்டுகொட்டின கடுப்புப் பாதாதிகேச மளவுநின்று கடுக்கிறபடியினுலே யுடலிலேநிற்கிறவ றிவவத்தையைத் தனியேயுறுமென்று நீசொன்னது அத்தமாகா து இதன்றியும்,—தர்ப்பணநிழற்கட் குற்றியாய்ந்தற்று நற்கணிற் றுயரநணுகாத் தகைத்தெனின் - கண்ணாடியி னிடத்திலே தோ

ன்றின நிழலினதுகண்ணிலே கூர்ச்சிகொண்டு கடாவின விடத்துக் கண்ணுடியுடைந்தொழிந்து கண்ணுக்குலயம்வாராத் தன்மைபோலச் சுகதுக்கங்களாலுண்டாகிய வநுபோகங்களுமுடலுக்கொழிந்து பிரமத்துக்கில்லையென்னில்,— நின்மொழி விரோதமும் காட்சிவிரோதத் தன்மையுமுறுமவை தவறிலவாகா - உன்னுடையசாத்திரஞ் சுகதுக்கங்களை யநுபவிக்கிறதறிவென்றுசொல்லும் நீ-யிப்பொழு துடலுக்கொழிந்து வறிவுக்கநுபோகமில்லையென்கையாற் சாத்திரவிரோதமும் பிரத்தியக்ஷமாக வறிவு சுகதுக்கங்களை யநுபவிக்கையிலே யநுபோகமில்லை யென்கையாற் பிரத்தியக்ஷ விரோதமு மிவையிரண்டுந்தப்பாம லுண்டாகாநிற்கும்,—யாமுடைப்பதிவகை யாவரும் பலகலைசொல்லுதலெளிதரிதத் தொழில்புரிவெனப் புல்லியபழமொழி புதுக்கினையன்றே நாம்வஸ்து நிண்ணயமாகநாட்டப்பட்டது "சொல்லுதல் யார்க்கு மெளியவரிவாஞ்சொல்லிய வண்ணஞ்செயல்." என்று சொல்லப்பட்ட திருவள்ளுவப்பயனிற் குறளை நீ யிப்பொழுது புதுக்கினுயாகவேண்டும். (யாமென்ற தாக்ஷேபச்சொல்,) இதன்றியும்,— அகண்டிதமென நீ பகர்ந்தமை தனக்குப்பந்தமிதுவெனத் தந்தமை கருதில் - பரப்பிரமமொன்ருலுங் கண்டிக்கப்படாத வகண்டிதமாயிருப்பதென்று நீ முன்னே சொன்னதற்கிப்பொழுது மாயாவுபாதிகளாலே யிப்படிப் பந்திக்கப்பட்டு நிற்குமென்று சொன்னதை விசாரித்துப்பார்க்கில்,—வானிடைக்குங் காலினைப்பிடித்துப் பருவிலங்கிட்ட வொருவனீயன்றே - ஆகாயத்தின் கண்ணே வியாபரித்துநடக்கிற காற்றினைப்பிடித் தங்கிங் கசையாதவண்ணம் பெரியவிலங்கை யிட்டுவைத்தவ னியாவனென்று சொல்லப்படும்: (இதுபிரமாதாவை மறுத்தது,) (இஃதவனுடையபெத்தம்.) (மேலவனுடைய முத்தியை மறுக்கிருர்.) பந்தமதகலவுந்து விவேகம் வான்வளி யெனத்தனிற்ருனே தோன்றின் பிரமமாயாவுபாதிகளாலே பந்திக்கப்பட்டிருக்குமென்று சொன்னவந்தப்பந்தம் பிரமத்துக்கிப்பொழுது நீங்கத்தக்கதாக வந்து

தோன்றின விவேகஞான மாகாசத்தி னிடத்திலே யெழுவாயு தோன்றி யந்தவாயுவாகாசத்தைமறைத்துநின்ற மேகங்களையொ துக்கியதனை நின்மலமாக்கின தன்மைபோல விந்தவிவேகஞான மும் பிரமத்தினிடத்திலேநின்றுந் தானேதோன்றினதாயின்,— முன்புளதாயின் மயங்காது-இந்தவிவேகஞானம் பிரமத்துக்குமு தலேயுள்ளதாயின் அதுநிற்கையிலே பிரமத்துக்கு நடுவேமயக்க ம்வாராது,—இலதெனில்-இந்தவிவேகம் பிரமத்துக்குமுதலேயு ள்ளதல்ல நடுவே யோரவ தரத்திலே வந்துண்டான தென்று நீ சொல்லில்,—பின்புளதாகாது - முன்பில்லாதது பின்போ ரவத ரத்திலே யுண்டாகாது,—இலதுளதெனின் - முன்பில்லாதது பி ன்புண்டாமென்னில்,—வெளிமலரதுதரும் - இல்லாததுண்டா மென்கிற தாகாசத்திலே யொருபூவுண்டென்கிறதுக் கொக்கும், —அப்படியன்றுகாணும். அனல் மரக்கணின்றுகித் தருவதுத குமெனில் - அக்கினியினுடையபிரகாச மரத்தினிடத்திலே மு ன்பு காணப்படாதிருந்து பின்பொரு காலத்திலே காணப்பட் டாற்போல முன்பில்லாத விவேகஞானம் பின்புண்டாங் காணு மென்று நீசொல்லில்,— தானேதோன்றாவிறகினிடத்து முன்பி ல்லாதவக்கினி பின்புண்டாமிடத்து ஒரு அரணியைவைத்துக்க டைய வுண்டானதொழிந்து தானாகவுண்டாகாது. ஆகையாலுன் பிரமத்துக்கும் பின்புண்டாகிய விவேகஞானமும் வேறேயொ ருத்தனுண்டாக்க வுண்டானதென்றுகொள். இதன்றியும்,— விற கினுதித்த கன்றகுமாயி னவித்தையினுதித்தவித்தை. அநுவயம். அவித்தையினுதித்த வித்தைவிறகினுதித்த கனறகுமாயின்- அறி யாமையாகிய பெத்தநிலையிலே தோன்றின விவேகம் விறகினி டத்திலே தோன்றின வக்கினியை யொக்குமாயின்,— அம்மரத் துதித்த விவேகம் வித்தையென்றுரைத்த வெந்தழலனைய. அநு வயம் வித்தையென்றுரைத்த விவேகம் அம்மரத்துதித்த வெந்த ழலனைய - வித்தையென்று சொல்லப்பட்ட விவேகஞானமந்தவி றகிலேதோன்றினவெவ்வியதழலையொக்கும்,விவேகமுதித்ததிந்

னமனேயது-விவேகஞானந் தோன்றினதுதானந்த விறகினேயொ க்கும். ஆகையாலே, -இறையிலன்றற்றே- விவேகஞானந் தோ ன்றினது பிரமத்திலேயென்று சொல்லப்படாது மாயாவவித்தை யிலேயாகவேண்டு. இதுதிருஷ்டாந்த விரோதமாகையால்நீசொ ன்னதத்தமாகாது இதுவன்றியும்,—இற்படப்பிரிப்பின் மெய்ப் படுமெவற்றையு மிதுவன்றிதுவன்றெனக் கழிகாலேயதுவேதா னே யாயினதென்றனே - வீடானதை யோரோர் வைக்கோலா கவு மோரோர்கழியாகவு நாளிலேபிடிங்கிப் போட்டபின்பு வீ டென்கிற சொல்லில்லேயாய்ப் போனதன்மைபோலவும் சீலேயை யையோரோரிழையாக வாங்கிப்போட்டாற் சீலேயென்கிற தன் மைபோனதுபோலவும் சக்ரமாகக்கூடிக் கொண்டிருக்கிறவெல் லாவுபாதிகளேயு மிதுநாமல்ல விதுநாமல்லவென்று நியதிபண்ணி நீங்கினவிடத் தந்தப்பிரமந்தானே யிந்தஜீவனுயிருந்ததென்று நீ சொன்னுய்,— வித்தைமுன்ன ரவித்தையு மவித்தைமுன் வித் தையுநில்லா - அறிவாகிய பிரமத்தின்முன்னே யறியாமை யாகி யதேகாதிபிரபஞ்சந் தோன்றிநில்லாது அறியாமையாகிய தேகா திபிரபஞ்சத்தின் முன்னே யறிவாகியபிரமந் தோன்றி நில்லாது அதென்போலவென்னில்,—வியனெளியிருளென - மிக்கபிரகா சத்தினேயுடைய வாதித்தன்முன்னே யந்தகாரநில்லாதாற் போ லவு மந்தகாரத்தின்முன்னே யாதித்த னில்லாதாற்போலவு மெ னக்கொள்,—இருளலவொளிக்கு மொளியலவிருட்கு மொருகா லத்து மொருபயனிலது - இருளல்லாத சுத்தவொளிக்குமொளி யல்லாத சுத்தவிருட்கு மொருகாலத்தினு மிவையிர்றுக் கொருப யனுமுண்டாகாது,—ஆல் -அப்படியிருக்கையால்,—இரண்டை யறுகரு முரண்டருவிழியென - இருளோடுகூடி யிருளே யறுபவி த்து மொளியோடுகூடி யொளியையறுபவித்து மவையிரண்டுமு தலுமாகாமற் றனியேயொருமுதலாய் நின்ற பெரியகண்ணினது தன்மையைப்போலுமென்று சொல்லாமாகில்,— வித்தையும வித்தையு முய்த்ததொன்றுளதே - அறிவாயுள்ள பதியோடுகூடி

யிதுபதியென்றறிந்து மறியாமையாயுள்ள பாசத்தோடுகூடி யிது பாசமென்றறிந்து மிரண்டுமெல்லாமற் பசுவென்றொருமுதல் றனியேயுண்டென் றறிவாயாக,—தானே தானுமானாற்பயனென் - இந்தப்பிரமந்தானே பிரமமானதானால் இந்தப் பிரமத்துக் குண்டாகிய பிரயோசனமென்னதான்,—தன்னிற்றன்னைத்தானே காணில். இந்தப்பிரமந் தன்னிடத்திலே தன்னுடையவியல்பைத் தானேகாணப்படுமாயின்,— கண்ணிற்கண்ணைக் காணவும்படுமே கண்ணானது தன்னிடத்திலே தன்னுடைய சொரூபத்தைக் காணுமென்று சொல்லவும்படுமே. அதுண்டாகாதாகையால் நீபிரமந்தன்னிலே தன்னைக்காணுமென்றுசொன்ன தத்தமன்று. இதன்றியும்,—தன்னலமதனைத் தானே நுகருமென்னின் - பிரமந்தன்னிடத்திலே யுண்டாகியசுகத்தைத் தானேயநுபவியா நிற்குமென்று நீசொல்லில்,— முன்னல் மெய்தாகிருந்ததென் கட்டிபோலெனக் கதறினை - பிரமமிந்தப்பேத முண்டாவதற்குமுன்னே தன்னிடத்திலுண்டாகிய சுகத்தைத் தானநுபவியாம லிருப்பானேனென்று நான்கேட்டதற்குக் கருப்புக்கட்டியானது தன்னிடத்திலுண்டாகிய விரதத்தைத் தானநுபவியாம லிருந்தாற்போலென்று நீ-கத்தினாய்,—இன்பம்வந்தொட்டிடும் வித்தையுடையையாயிடினே - அந்தப்பிரமத்தி லுண்டாகியசுக முனக்கிந்தமுத்தியிலே யநுபோகமானது நீதனியே பசுவென்றொரு முதலாயதிலே பாசபந்தியாயிருந்திப்பொழு தப்பாசநீங்கிப்பதியோடுகூடுகையினாலே யெனக்கொள்.—தத்துவமசியென வைத்த முப்பதத்திற்கு-தத் - அது—தொம்-நீ—அசி-ஆகி நின்றாயென்கிற மகாவாக்கியத்துக்கு உண்மை யத்தம் விசாரிக்குமிடத்து,— ஒன்றேபொருளென் றன்றேபகர்வது - நீயொன்றேயா யிருக்குமென்றது பொருளல்லவே, இதற் கத்தமொன்றல்லவென்றே யந்த மகாவாக்கியஞ் சொல்லுவது பின்னையெங்ஙனேயென்னில்,— நீ புலியாயினை யென்றாங்குணரில் - ஒருவ னொருவனுடைய வீரத்தைக்கண்டபோது நீ புலியாயினையென் றவன்சொன்ன சொல்

லை விசாரித்துப் பார்க்கில்.—ஆயினையென்றத தாகுவ மைத்தா
ன் - ஆயினையென்றதாகுவமைத்தென் றிலக்கணவிதியிற்சூத்தி
ரங்கள் சொல்லுகையினாலவன் புலியாகின்றானல்லன், இதன்றி
யும்,—நோயாயினமேலாயாய் - ஒருவனொருவனை ப்பார்த்து நீயி
ப்படிப்பொல்லா திருப்பானேனென்ன நாயேனாய்க் கிடந்தே
னென் றவன்சொன்னசொல்லுக் கத்தம்நீதானே யாராய்ந்து பா
ராய் அவன்கொண்ட வெப்பக்குளி ரவனாகிறதில்லையே,— என்
றால் - அப்படியிருக்கையினாலே.— அகமேபிரம மாயினதென
றால் – அகந்தானே பிரமமாகா நின்றதென்று மகா வாக்கியஞ்
சொல்லுகையினால்,—சகமேயறியத்தான் வேறன்றே - ஒருத்தா
ன்றி இந்தப்பிரபஞ்ச மித்தனையுமறியத் தக்கதாகவிவனந்தப்பிர
மத்துக்கு. வேறென்கிறது தப்பாதென்றறிவாயாக. அன்றியும்,
—உண்மையிற் சலமில உடற்சஞ்சலம் - நம்முடைய உண்மை
யைப் பார்க்குமிடத்திலே நமக்குச்சலநமில்லை இந்த வுடலினிடத்
துண்டாகிய சலநமுடலுக்காயிருக்கும். அதென்போல வென்னி
ல்,...சலமுறும் வெண்மதிபோல - ஜலத்தோடே கூடியிருக்கிற
பிரதிபிம்ப மதியந்தஜல் மசைந்தபொழுது தானு மசைந்தாற்
போலே யிருந்ததொழிந் ததனுடைய வுண்மையைப் பார்க்குமி
டத் தந்தமதிக் கசைதலில்லை யானாற்போல,— விளங்கிடுமென்ற
னை - இங்ஙனமந்த முத்தித்திசையில் விளங்கா நின்றோமென்று
நீ சொன்னாய்,—அசலனாகிச் சஞ்சலநலத்துச் சலநமே வினமெ
னமதிகாணவேண்டும் – நாம் சலநமில்லாமலிருப்பா னொருத்தன்
ஆற்றிலேயோடுகிற ஜலத்தினுடைய சஞ்சலங்கொண்டு நாமுஞ்
சஞ்சலித்தாற்போலேயிருந்த தொழிந்து நமக்கந்தச் சஞ்சலமில்
லையென்று கண்டாற்போல வாகாசத்திலிருக்கிற வந்தமதியானது
காணவேண்டும் அப்பொழுது நீ சொன்ன திருஷ்டாந்தமுமொ
க்கும்;—அதன்றிக் காண்பவர் பிறரேல் - அதொழிந்திந்தப்பிரதி
பிம்பமதிக் கசைவில்லை தண்ணீருக்கே யசைதலென் றந்தமதி
யையொழிந்து வேறேயொருத்தன் கண்டுசொல்லுஞ்சொல்லுண்

மைபோல வந்தப் பிரமத்துக்குச் சலனமில்லை யுடலுக்கேசலனமெ ன்று அந்தப் பிரமத்தையொழிய வேறேயொருத்தன் கண்டு சொ ல்லுகையினலே,— ஈண்டுனை தேகமென்செய்த தியம்புக - இவ் விடத்துப் பிரமமொன்றுமே யுள்ளதென்றுநீ சொன்னசொல் லே தாய் முடிந்தது சொல்லாய். (இஃதவனுடைய ஜீவன்முத்தியை மறுத்தது) (மேற்பரமுத்தியை மறுக்கிருர்)—உடல்விடக் கடத் துட்படுவெளிபோலெனில் - பரமுத்தியானதிந்தச் சரீரநீங்கின விடத் திந்தச் சரீரத்திலே நின்றவறிவு தன்னிலொன்றுபட்டு நி ன்றது கடத்துக்குள்ளே யகப்பட்டுநின்ற வாகாச மந்தக் கடமு டைந்த வவதரத் தந்தக் கடத்துக்குள்ளே நின்ற வாகாசமும் ப ராகாசமுந் தன்னி லொன்றுபட்டு நின்ருற் போலுமென்று நீ சொல்லின்,—விட்டென்பெற வுடற்பட்டென்பட'- ஆகாசங் கு டாகாசமாய் நின்ற காலத்தொரு துக்கத்தை யநுபவித்தது மில் லை குடமுடைந்த காலத்தொரு சுகத்தையநுபவித்தது மில்லை ய துபோலப் பிரமமுடலுக்குள்ளே யகப்பட்டுநின்ற காலத்தொரு சுகத்தை யநுபவித்தது மில்லையாக வேண்டும் இந்தவுடல்விட்ட ட காலத்து மொருசுகத்தை யநுபவித்தது மில்லையாகவேண்டும் இதன்றியும் இந்தவுடலிலே நிற்கிறவறிவுபிரத்தியக்ஷமாக விப் பொழுது துக்கத்தை யநுபவித்துவிட்ட காலத்துச் சுகத்தை ய நுபவித்து நிற்கையால் நீ குடாகாச வாகாசம்போலுமென்ற தத் தமன்று. திருஷ்டாந்த விரோதம்,—மற் றிகலறவொருவனிவ்வ கைதெளியி லகிலமுமுத்தி யடைந்திடவேண்டும்-இஃதொழிந் து நீ சொன்ன சாத்திரப் பிரமாணத்திலே மாறுபாடறவொருத் த னுன்பிரமமென்று தெளிந்தகாலத் தெல்லாவறிவு மொன்றெ ன்று சொல்லுகையாற் சர்வான்மாக்களுமுத்தியடையவேண்டும். —அறிந்தோர் முத்தி யடைந்தோராயின் - பிரமஞானமுண்டா னவர்கள் முத்தியடைவர்கள் இல்லாதவர்கள் முத்தியை யடை யார்களாயின்,—பிறிந்தோ ருயிர்பல பேதத்தன்றே - இறிந்தவர் களென்று மறியாதவர்களென்றுஞ் சொல்லுகையா லந்தப்பிரம

த்தையொழிந்து சொல்லப்பட்ட ஜிவான்மவர்க்கமும் பலபேத மாயிருக்குமென்று கொள்வாயாக. (இதுபரமுத்தியை மறுத்தது) (மேலிந்த விவேகத்தன்மை கூடாதவர்களுக்குச் சாதந சதுஷ்டயங்களினாலே பிரமஞான முண்டாமென்பதனை மறுக்கிறார்.) —கன்மகாண்டங் காரணமாகமன்னும் விவேகமென்னில் - இத்தன்மை கூடாதவர்கள் யாகாதிகளாயுள்ள கன்மகாண்டங்களைய நுஷ்டிக்க வதுகாரணமாக வவர்களுக்குப் பின்பு விவேகஞான முண்டாமென்று சொல்லில்,—அவித்தைக் கேதுகாரண மோதினையில்லை - பிரமத்தை மாயாவித்தைகள் வந்தோ ரவதரத்திலேபொருந்தி யத்தை மயக்கிக்கொண்டு நிற்குமென்று நீசொன்னதற்கு இன்னதுகாரணமாகப் பிரமத்தைவந்து பொருந்திற்றென் றொன்றைச் சொன்னாயில்லை,— இதற்குங்காரணம் விதித்தல் வேண்டின்றே - கன்மகாண்டங் காரணமாக விவேகமுண்டா மென்றதுபோலப் பிரமத்துக்கு முன்னேயிப்படி யிருப்பதொரு குற்றமுண்டு அதுகாரணமாக விந்த வவித்தைகள் வந்திப்பொழுது பொருந்திற்றென் றொன்றை நாட்டவேண்டும். இப்போது,—அரணியிலுதித்த கனலவைகவர்வென விரதத்துதித்த விவேகமழித்தல் - திக்கடைக்கோலை மரத்தில்வைத்துக் கடைந்தந்தத் தொழிலினாலே யுண்டாகிய வக்கினி யந்தவிரண்டுகோட்டத்தையுஞ்சுட்டுப் போட்டதென்று சொல்லலாமாகக் கன்மங்களைச் செய்வதனாலே யுண்டாகிய விவேகமந்தக் கன்மங்களை யில்லையாக்கிப் போடுமென்கிறது,—வருந்தியாயினுந் திருந்தியவேத நீதியெல்லா நீத்து - சதாசாரங்களையு நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிற வேதவொழுக்க மெல்லாத்தையும் வருந்தியுங் கைவிட்டு, —போதமொன் றறியோர்தாமு மவ்வழிநடத்தல் - பிரமஞான மென்கிற தேகதேசமுங்கூடி யறியாதவர்களும் ஓர் பிரமஞான முண்டாயிற் றெங்களுக் காசாரம் வேண்டுவ தில்லையென் றநுசாரங்களைச் செய்துகொண்டு திரிகிறது,—பொறியோ போதநெறியோ - இவர்களுடைய தலையி லெழுத்தோ வல்ல தறிவீனந்தா

ஞே,—இதுபவநீங்கிடு நெறிதருபாங்கினைப் பழித்தல் - இவனை விட் டொருகாலத்திலு நீங்காமற் றொந்தித்துக்கொண்டு வருகிற பிறவித்துன்பங்க ணீங்குகைக் கேதுவாயுள்ள விந்தக் கன்மத்தி ன் பகுதிகளையெனக் காகாதென் றிதனைக் கைவிட்டு விடுகிறது,—நன்றி கொன்றலன்றே - "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண் டா முய்வில்லை, செய்ந்நன்றி கொன்றமகற்கு,, என்றுசொன்ன செய்ந்நன்றி கொன்றதிதுவாயிருக்கும், விரதத்துதித்த விவேகமெ ழித்தல் நன்றிகொன்றலன்றே என்று பொருள்கூட்டுக,— அன் றியு ஞாலநீதியு நான்மறைநீதியும் - இதன்றியு முலோகாசாரங்க ளும் வேதஞ்சொல்லப்பட்ட வாசாரங்களுமிவை,—பாலருன் ம த்தர் பசாசரிலெனவு முறங்கினேன்கை வெறும்பாக்கெனவுந் தானேதவிராது - யாதொன்றினையும் விகற்பியாமல் நிருவிகற்ப மாய்க்கொண்டு காண்கிற பாலரைப்போலவும் வைதாரையும் வாழ்த்தினாரையுஞ் சுட்டியறியாத மதுபானஞ்செய்த வர்களைப் போல்வும் ஆகாரமுதலில்லாத பசாசரைப்போலவும் நித்திரை செய்கிறவன்கையிலே தனியேபிடித்திருந்த பாக்குப் போல்வும் உனக்குப் பிரமஞான மில்லாதபடியாலே யந்தவாசாரங்களுந்தா னாகப்போக வறியாது,—ஆனாற் புரியாதொழிந் திடி னிரயத்தழு ந்துதறிடமே - அவைதானே போகாதென்றால் அவன்றானே யெனக்கந்த வாசரங்கள் தேவையில்லையென்று விட்டுவிடிற் றே காந்தத்திலே மீளாநரகத்திலே போய்க்கிடந்து துக்கங்களையநுப விப்பானென்கிறது தப்பாது,—உய்த்தோனன்றி முத்தி யுரைத் தல் பித்தோ-நீயந்தவாசாரத்தினாலே பிரமஞானமுண்டா மென் னாமல் நான்முத்தனென்று சொல்லுகிறவிது பித்து மேலிட்டுக் கொண்டோ,—பிரமஞ் செத்தோபெறுவது-இவனிருக்கையிலே பிரமஞானமுண்டாக வேண்டுவதொழிந்து இவன்செத்துபோய்ப் பிரமஞானத்தைப் பெறப்போகிறதில்லை, அதே னென்னில்,—உடலையு நீயே சடமெனச்சாற்றினை - இந்தவுடலை நீதானேஜ டமென்று சொல்லிவைத்தாய்,—கையினுஞ் வாழ்த்தினுங்கொய்

யினுங் கொளுத்தினும் வணங்கினு முதைப்பினும் பிணங்குதல் செய்யாப் பிரமத்தன்மை பெறுவ தெக்காலம் - ஒருவனிவனை வைதவிடத்து மொருவனிவனை வாழ்த்தினவிடத்து மொருவனிவனுடைய கைகாலைத்தறித்த விடத்து மொருவ னிவன்மேலே நெருப்பைக் கொளுத்தினவிடத்து மொருவன் தண்டம்பண்ணினவிடத்துங் கால்கொண்டு மிதித்தவிடத்து மிதமகிதப்படாமலிருக்கிற பிரமஞான மிவனிடத் திற்றைவரையாகக் காணப்பட்டதில்லை யந்தப்பிரமஞான மெந்தக்காலத்திலே யுண்டாகப்போகுது,—இருக்குநாள்சில - புருடாயிற்று நூறு, இதிலேபாதி நித்திரையிலேபோம், நின்றவைம்பதிலே வாலிபமாய்ப் பதினைந்து போம், விருத்தனாய்ப்போம் பதினைந்து, நின்ற விருபதிலேநோயாய்ப்போஞ் சிலநாள், இதிலே யிடையிலே யிறந்துபோகிற காலமுமிகுதி, இதற்குநடுவே.—எண்ணினால் கதறித் தருக்கம் பேசித் தலைபறியுற்று - எண்ணிறந்த சாத்திரங்களை யெல்லாங்கற்று அதுகொண் டெல்லார்களோடுந் தருக்கங்கள்பேசி யதனாலே தலைபறியுண்டு, கண்டோரீய்ந்த பிண்டமுண்டலறி - இவர் நல்லவத்தியான்மியென்று கண்டவர்க ளிடப்பட்ட வசனங்களையும் புசித்தும் பிரமஞானஞ் சொல்லுகிறே னென்றவர்க ளிடங்களிலே சிவனவயிற்றைக் கூப்பிட்டு,— பன்னேயாக்கை தன்னேயுற்றுடல் விடவருமென்றநடுநடுநடுங்கி - பலநோய்களுங்கூடி யொன்று யெடுக்கப்பட்ட சரீரத்துக்கடைத்த வியாதி யிவனை வந்து பொருந்தினபோதிலிதனாலே நமக்குச் சாக்காடுவருமென்று பதைபதைபதைத்து,—விட்டோர் தெய்வத்தொட்டின் றன்றியும் - உடல்விடுகிற காலத்து நீ-பயப்படாதே நானுண்டென்று சொல்லி யுன்னை யிரக்ஷித்துக்கொள்ளுகைக்கு ஒருதெய்வதொந்தனையு மில்லையா யிருக்கிறதன்றியும்,—யானே யெவருமானே னென்றலின் - நான்முனே பிரமாவும் விஷ்ணுவும் உருத்திரனும் இந்திரனும் இயமராஜா மற்றுமுள்ளவர்க ளெல்லாருமா யிருந்தேனென்று சொல்லுகையால்,—அவ்வவர்சிறிய வவ்வவர் வானாட்

செவ்விதினிரயஞ் சேர்த்துவர் — அந்தத்தேவதைகள் நம்மையிவ
ன்ருனென்று சொன்னனென் றுன்னேடே கோபித்துக்கொண்
டு தங்களுக்குச் செல்லாநிற்கிற காலங்களெல்லா நன்ருகக்கொ
ண்டழுந்த நரகங்களிலே தள்ளிவிடாநிற்பர்கள்,—அதனுல் மா
யாவாதப்பேயா வுனக்குத் தேவரிலொருவருண்டாகமே வருநாக
ம் விடுத்தலோ வரிதே - அங்ஙனமிருக்கையால் மாயாவாதமென்
கிற பேய்ச்சமயத்தை யுடையவனே யுனக்கெல்லாருஞ் செத்துப்
போய்த் தேவவர்க்கத்திலே யொருத்த ரிருந்தாராயினு மொருவ
ராலுங் கிட்டுதற்கரிதா யிருக்கிற நரக முனக்கு நீங்குதலுண்டா
கா தென்றறிவாயாக. (உ)

மாயாவாதிசங்கற்ப நிராகரண-முற்றிற்று.

ஐக்கியவாதிசங்கற்பம்

அரிதேர்ந்துணராப் பெரியோனுரைத்த
பதிபசுபாச விதிமுறைகிளக்கி
லீசனேகனெண்ணிலபசுக்கள்
பாசமிருவகைப் பரிசினதலகத்
தாயவனுயிர்க்குமாயையினருளா
லிருவினைத்தொகை யிலுருவினைதருமாற்
கருமுகிலடாவிரிதருகதிர்போன்
றரிவாமுயிரிற்பிறியாதேயு
மீட்டுமிருபயனூட்டிடுநியதிக்
கொருபொழுதிருபய னுகர்வுறமருவுத
லின்மையாதன் முன்னியகாலைச்
சத்திநிபாத முற்றிறையருளா
லுருவுகொடுலகு தெரிவுறமருவி
மாசுறுந்தாசு தேசுறவிளக்குந்

தன்மையிலுணர்த்துப் புன்மைகணீங்கி
நீருநீருஞ் சேருந்தகைமைய
னறிவினோடறிவு செறிவுறப்பொருந்தி
யொன்றுமென்பதையுலகோர்
நன்றுமுத்தி யெனநவின்றனரே,

அரிதேர்ந் துணராப் பெரியோனுரைத்த பதிபசுபாச விதி முறைகிளக்கில் - விஷ்ணுவானவன் பூமியைக் கீண்டா ராய்ந்து பார்த்தவிடத் திப்படியிருக்கு மிவனுடைய சொரூப மென்றறிய ப்படாத பெரியவனென்று சொல்லப்பட்டிருக்கிற சிவனாலேயரு ளிச் செய்யப்பட்ட பதியினுண்மையினையும் பசுவினுண்மையி னையும் பாசத்தினுண்மையினையு முள்ளபடி சொல்லுமிடத்து— ஈசனேகனெண்ணிலி பசுக்கள் பாசமிருவகைப் பரிசினது - பதி யென்று சொல்லப்பட்ட பரமேஸ்வரனொருமுதலா யிருப்பதொ ன்று, பசுவென்று சொல்லப்பட்ட வான்மாக்கள் பலமுதலாயி ருப்பதொன்று, பாசமென்று சொல்லப்பட்டது மாயையென்று ங் கன்மமென்று மிருவகைப்பட் டிருப்பதொன்று,—உலகந்தா யவனுயிர்க்கு மாயையினருளா லிருவினைத் தொகையி லுருவினை த்தருமால் - பிரபஞ்சத்திற்கு மாதாபிதாவுமாயுள்ள சிவன்றனது காருண்ணியத்தினாலே யான்மாவுக்குப் புண்ணிய பாவங்களுக்கீ டான சரீரங்களை மாயையிலே நின்றுங்கொடாநிற்பன், (ஆல் அ சை,) கருமுகிலடர விரிதருகதிர்போன் றறிவாமுயிரிற் பிறியா தேயும் - கறுத்தமேகமானது பிரகாசத்தினையுடைய வாதித்தனி டத்திலேசென்று பொருந்தினவிடத் தந்த வாதித்தனுடைய கிர ணங்களெல்லா நீங்கினதன்மைபோல முதலே சுத்தமாயறிவாயி ருக்கிற வான்மாவினிடத்திலே யந்தமாயாதேக மொருக்காலுநீ ங்காமற் பொருந்திவாராநிற்கும்,—மீட்டுமிருபயனூட்டிடு நியதி - முன்னேசெய்த புண்ணியபாவங்களை இந்தச் சரீரத்திலே கந் தாவானவ னிவனுக்கெக்காலும் புசிப்பியாநிற்பன்.—ஒருபொழு திருபய னுகர்வுறமருவுத லின்மையாதன் முன்னியகாலை - புண்

ணிபபாவங்களிரண்டுந் துலையொத் தொருஜநநத்திலே யெல்லா க்கன்மங்களும் புசித்துத் தொலையத்தக்கதாக வேதெனினு மொ ரு சிவபுண்ணியம்வந் தெதிர்ப்பட்ட வவதாரத்து,—சத்திநிபாதமு ற்று - இவனுக்குச் சத்திநிபாதமென்ப தொன்றுண்டா யந்தவவ தாரத்திலே,—இறையருளா லுருவுகொடுல்குதெரிவுற மருவி - க த்தாவானவன் றனது காருண்ணியமேதனக்குத் திருமேனியாகக் கொண்டருளி யுல்கத்திலுண்டானவர்க ளெல்லாருங் காணத்தக் கதாக வாசாரியனாக வெழுந்தருளி வந்து,—மாசறுந்தூசு தேசுற விளக்குந் தன்மையிலுணர்த்தும் - அழுக்கினாலே மிகுத்திருக்கி றபுடவையை நன்றாகவெள்ளாவிவைத் தந்தவழுக்கை நீக்கித் தூ ய்தாக வெள்ளையாக்கின தன்மைபோல் இவனிடத்தி லுண்டாகி ய பாசங்களைத் தீக்ஷைகளைச்செய்து கிரமத்திலே போகத்தக்கதா கவுபதேசங்களை யருளவே,—புன்மைகணீங்கி நீருநீருஞ் சேருந் தகைமையி னறிவினோடறிவு செறிவுறப் பொருந்தி யொன்றும்; இவனிடத் துண்டாகிய குறைகளெல்லா நீங்கச்சுத்தனாகித் தண் ணீருந் தண்ணீருந் தன்னிலேகூடி யைக்கியமா யொன்றுபட்டுநி ன்றதன்மைபோலச் சிவனுடைய வறிவோடே தன்னுடையவறி வுகூடியைக்கியம்பிறந் தொன்றுபட்டு நிற்கும்,— என்பதை யுல கோர் நன்றாமுத்தியென நவின்றனரே - என்றிங்ஙனஞ்சொல்ல ப்பட்டதை யுயர்ந்தோரா யுள்ளவர்கள் முத்திக ளெல்லாத்திலும் வைத்துக் கொண் டிதுவே நல்ல முத்தியென்று சொல்லா நிற்ப ர்கள். (௰)

ஐக்கியவாதி சங்கற்ப முற்றிற்று,

——()——

ஐக்கியவாதி சங்கற்ப நிராகரணம்.

———

முத்தியென்பதெவனோசுத்த
வறிவெனிற்பாசஞ் செறியாமாயை

யுருவிருவினையால் வருமிருவினையு
முருவாலன்றி மருவா திவற்றின்
முந்தியதேதோ வந்தணைவதற்கோ
ரேதுவேண்டும தானியல்பென்னின்
வீடுற்றவரினுங்கூடக்கூடு
மீங்கிவைநிற்கநீங்காக்கருவிகள்
கொண்டறிவறியக்கண்டதுமன்றி
மருவியவுருவுதயில்பெறுங்காலைச்
சிறுபொறித்தறுகட்கறையணற்சுடிகைத்
துத்திக்கடுவுட்டுளையெயிற்றுரகக்
கொத்தயல்கிடப்பினுங்குவைதருநவமணி
யொருபாற்றுதையினும் பொருகார்வத்தினோ
டச்சமுமணுகாக்கொச்சமையென்னே
கருவியாவும் பிரிவுறுநிலையேற்
பொறிபுலனுதி குறைவறநிறைந்து
காட்சியதளிக்கு மூட்சியின்முன்னர்க்
கொடுத்தோராழிவிடுத்தவர்நாடிக்
கொள்வோர்க்காணு துள்கிமீண்டுழித்
தந்தவர்க்கண்டாங் கந்தமில்தனைத்
தருகவென்னும் பெருமதிபிறங்கும
தறிவிலாமையென்றனையதுமலமாக்
குறிகொளாளரறைகுவரன்றே
யறிவிற்கறிவுசெறியவேண்டின்றே
யுண்மையிலிருமையுமொளியேயெனிலொரு
தன்மையாகமுன்சாற்றினரிலரே
முன்புநன்றுடனென்றியகாலை
யின்பமெய்துதற்கிலதுயிராதலி
னியலைபொருதமாயாவாதி
யாயினையமையுமருணிலைகேண்மதி.

இ-ள். முத்தியென்பதெவனே - இதை நீ முத்தியென்று சொன்ன தென்னைகாண். அது பின்சொல்லுகிறோம்—சுத்தவறிவெனிற் பாசஞ்செறியா - ஆன்மா வநாதியிலே சுத்தமாய்அஃதறிவுமாயிருக்குமென்று சொல்லின் நடுவே யோரவதரத்திலேசுத்தமாயிருக்கிற வான்மாவைப் பாசம்வந்து பொருந்துகைக்குவழக்கில்லை—மாயையுருவிரு வினையால்வரும் - இந்தமாயாசரீரமானதிவனைவந்து பொருந்துமிடத்திவன் செய்த புண்ணிய பாவங்களுக்கீடாகவந்து பொருந்துவ தொழிந்து தானுகவந்து கூடமாட்டாது - இருவினையு முருவாலன்றி மருவாது - அந்தப்புண்ணியபாவங்க டானுண்டாமிடத் தொருமாயா சரீரமுண்டாயதிலுண்டாகிய திரிவித கரணங்களினலே யிவன்செய்ய வுண்டாவதொழிந்து தானேயுண்டாகா தாகையால், —இவற்றின் முந்தியதேதோ - இந்த மாயாமலங் கன்மமல மிரண்டினும் வைத்துக்கொண் டிவனைமுந்தி வந்துகூடின பாசமெதுதான். இதன்றியும்—வந்தணைவதற்கோ ரேதுவேண்டும் - இந்தப்பாசங்கள் நடுவே யோரவதரத்திலே யிவனைவந்து பொருந்துமென்கிறதற் கநாதியிலேயிவனுக்கு மலமென்ப தொன்றுண்டா யதுகாரணமாகவந்து கூடிற்றென்று சொல்லவேண்டும்—தானியல்பென்னின்- அப்படிமலமென்ப தொன்றில்லை இந்தப் பாசங்கடா னடுவேவந்திவனைப் பொருந்தினது வெள்ளைப்புடவைக் கழுக்கேறினற்போலே யியல்பாகவந்து பொருந்துமென்று நீசொல்லில்...வீடுற்றவரினுங் கூடக்கூடும் - மாயாகன்மங்கணீங்கி மோக்ஷத்தைப் பெற்றிருக்கிறவர்களிடத்திலு மாயாகன்மங்க ளியல்பாகவந்துபொருந்தப்படும்— ஈங்கிவைநிற்க - இவ்விடத்து நான் சொன்னதற்கோருத்தர முனக்குச்சொல்லப்பட்ட தில்லையாகையா லிவைநிற்க—நீங்காக் கருவிகள்கொண் டறிவறியக் கண்டதுமன்றி- அநாதியிலே யுன்னைவிட்டு நீங்காமனிற்கிற மலசம்பந்தத்தையிந்த மாயாகருவிகள்வந்து நீங்கவந்தக் கருவிகளைக்கொண் டுன்னுடையவறிவு சத்தாதிவிடயங்களை யறிந்துவருகிறது பிரத்தியக்ஷ

மாகக்கண் டிருக்கையிலேயு மலமென்ப தொன்றில்லை யென்று ய். இதன்றியும்—மருவிய வுருவு துயில்பெறுங்காலை- அநாதியே யிவனுக்கு மலமென்பதொன்றில்லை நடுவேயியல்பாகவர்தபொ ருந்திற்றென்று நீசொன்னவிந்தவுடம்பில் நித்திரைசெய்கிறவவ தரத்து —சிறுபொறித்தறுகட் கறையணற்சுடிகைத்துத்திக் கடுவு ட்டுளையெயிற் றரகக்கொத் தயல்கிடப்பினும்- உடம்பிலே சிறி தாயிருக்கிற பொறிதனையுமுடையதாய்த் தறுகண்ணினையுமுடை யதாய்த் தலையிலே துத்தியினையு முடையதாயுள்ளே துளையாயிரு க்கிறபல்லுகளிலே நஞ்சினையுமுடையதாயிருக்கிற பாம்பினது கூட்ட மொருபக்கத்திலேவந்து கிடந்ததாமாயினும்,— குவைத ருநவமணி யொருபாற் றுதையினும் - கூட்டங் கூட்டமா யிருக் கிற நவரத்தினங்க ளொருபக்கத்திலே மிகவுங் கிடந்ததாயினும் —பெருகார்வத்தினோ டச்சமுமணுகாக் கொச்சமையென்னே இ ந்த விரத்தினங்க ளிருக்கிறதைக் கண்டுமிகவும்பிரியம் வாராமலு ம் இந்தப்பாம்புகள்கிடக்கிறதைக் கண்டுமிகவும் பயம்வாராமலு மிருந்த வறியாமையென்னதான்—கருவியாவும் பிரிவுறு நிலையே ல் - எல்லாக்கருவிகளு நீங்குகையினாலே யவ்விடத்துவிருப்புவெ றுப்புக் காணப்பட்டதில்லையாலோ—பொறிபுலனாதி குறைவறநி றைந்துகாட்சியதளிக்கு மூட்சியின் - பொறியும்புலனு மாதியா யுள்ள கருவிகளெல்லா மொன்றிற்குறைவற நிறைந்தநின் றிவ னுக் கறிவைக்கொடுக்க விவனுடையவறிவு சத்தாதிவிடயங்களி லேமூண்டு ஜீவியாநிற்கிற வவதரத்திலே,— முன்னர்க் கொடுத் தோராழிவிடுத்தவர் நாடிக்கொள்வோர்க் காணாதள்கி மீண்டுழி த்தந்தவர்க் கண்டாங்கந்தமிலதனைத் தருகவென்னும் பெருமதி பிறங்கும். அனாநாழிகைக்கு முன்னாக வொருத்தன் கையிலே யொருமோதிரத்தைக் கொடுத் திந்தமோதிரத்தை விற்றுக் கொ ண்டுவாருமென்று சொல்விப் போகவிட அந்த மோதிரத்தைக் கொள்வோ ரொருத்தரையுங் காணும்லிந்தமோதிரத்தை நீர்மு டையகையிலே வைத்துக்கொண் டிருக்கக்கடவோ மல்லவென்

று விசாரித்துன்னிடத்திலே மீண்டவன்றந்த மோதிரத்தை வாங்
கிவைத்துக்கொண்டு பின்னையு மரைநாழிகைக்குள்ளே யந்த
மோதிரத்தைத் தந்தவரைக்கண்டு நான்முன்னே யும்முடைய
கையிலே விற்கத்தந்தவிலைமதிக்க வொண்ணாத மோதிரத்தைத்
தருவீராகவென்று சொன்ன யுத்திப்பெருமை மிகவுமுண்டான
தென்னதான். (பெருமதியென்ற தாக்ஷேபச்சொல்.)—அதறிவி
லாமையென்றனை - அப்படியவனுக்கு மயக்கம்வந்த தறியாமை
கொண்டென்று சொல்வில்—அதுமலமாக் குறிகொளாள ரறை
குவரன்றே - அப்படியறியாமையென்று நீசொன்னது தன்னை
க்காணும் மலமாகக்கொண்டு திரிபதார்த்த நிண்ணயம்வந்த பெ
ரியோர்கள் சொல்லுவார்கள். (அன்றென்ற தாமெனக்கொள்க)
(ஈதைக்கியவாதியுடைய பெத்தநிலைமையை மறுத்தது.) (மேல்
முத்திநிலைமையை மறுக்கிறார்,)—அறிவிற் கறிவுசெறிய வேண்டி
ன்றே - ஆன்மா வறிவேயாயிருக்கில் வேறொற்றிவோடே சென்
று கூடவேண்டுவதில்லை. இதன்றியும்,— உண்மையி லிருமையு
மொளியேயெனில் - முத்தியில் நீருநீருங் கூடினாற்போலப்பதி
யும்பசுவு மிரண்டுங்கூடிப் பிரகாசமாயிருக்குமென்று நீசொல்வி
ல்,—ஒருதன்மையாக முன்சாற்றினரிலரே - அவன்சர்வஞ்ஞன்
இவன்கிஞ்சிஞ்ஞன் அவன்பரிபூரணன் இவனேகதேசி அவனி
ன்மலன் இவன்மலசகிதன் அவன்பதி இவன்பசு இப்படி யிருக்
கையாற் சிவனையுமான்மா மாவையு மொருதன்மையாகக் கொ
ண்டிதற்குமுன் யொருவருஞ் சொல்லுவார்களிலர்;—முன்பு நன்
றுடனொன்றியகாலை யின்பமெய்துதற்கில துயிராதலின் - அநா
திபிற் சுத்தமாயிருக்கிற வான்மாவைப்பின்பு கூடின வசுத்தங்க
ணீங்க முத்தியிற்சிவனோடேகூடி யின்பத்தை யநுபவிக்குமென்
றாய். இந்தமாயாகன்மங்கள் கூடுவதற்குமுன்னே யான்மா சிவ
னோடேகூடி நிற்கையிலே யின்பத்தையநுபவிக்கக் கண்டோமி
ல்லையே ஆகையால்,—நீ யலைபொருத மாயாவாதியாயினை யமை
யுமருணிலைகேண்மதி-நீயும் பிரமந்தானே குடாகாய மாகாயம்

போல நிறைந்துட னிங்கினவவதரத் திரண்டுபிரமமு மொன்
முய்நிற்கு மென்றுன்னுடேயடித்துக்கொள்ளப்பட்ட மாயாவா
திதாளுய் விட்டாயாகையால் நீசொன்னதெல்லாமமையும் மேற்
றிருவருணிலைமையை நான்சொல்லுகிறேன் கேட்பாயாக - மதி
வயறன்சதசைச்செல். (ச)

ஐக்கியவாதி சங்கற்பநிராகரண-முற்றிற்று.

——()——

பாடாணவாதி சங்கற்பம்.

மூலமலத்தாற் சாலுமாயை
கருமத்தளவிற் றருமுருவிறைவன்
செறிந்திருபயனு நுகர்ந்திடுமுயிர்க
ளிருளுறுமலத்திற் பருவரற்படுதலி
னிடையிருநோக்குந் தடைபட்டோரிற்
றயருறுமதனாற் செயிருறுதுன்பங்
கொத்தைமாந்த ருய்த்துறுந்துயில்போற்
காட்சியென்னக் காணுத்துயர
மாட்சியைமுத்தி யெனவகுத்தனரே.

இ-ள், மூலமலத்தாற் சாலுமாயை - அநாதியே யான்மாக்
களுக் காணவமலமென்பதொன்றுண்டு அந்த மலத்தைப்போக்
குவது நிமித்தமாக மாயையிவனைவந்து பொருந்தும்,—கருமத்த
ளவிற் றரு முரு விறைவன் - ஆன்மாமுன்னே செய்த கன்மங்க
ளுக்கீடான சரீரங்களைக் கத்தாவானவன் கொடுப்பன்,— செறிந்
திருபயனு நுகர்ந்திடு முயிர்கள் - அந்தச்சரீரங்களைப் பொருந்தி
த்தங்களுக்குண்டான புண்ணியபாவங்க ளிரண்டையு முயிர்கள்
புசித்துவாராநிற்கும் —இருளுறுமலத்திற் பருவரற்படுதலின்-இ
ப்படியநுபவித்து வருமிடத் தாணவமலத்தினுலே மறைப் புண்
ணகயினுலே,—இடை யிருநோக்குந்தடை பட்டோரிற்று யருறு

ம் - முன்புகண்டுவந்த கண் ணடுவே காசமேலிட்டதினாலே கா ணாமலிருந்த கண்ணினையுடையவர் களைப்போல வவத்தைப்படு ம்,—அதனாற் செயிருறுதுன்பம் - அப்படியவத்தைப்பட்டு வரு கையினாற் குற்றத்தையுடைத்தாகிய பிறவித்துக்கம் மேன்மேலே யுண்டாகாநிற்கும், (இதுபெத்தம்,) (மேன்முத்தி) கொத்தை மாந்த ருய்த்துறுந் துயில்போல் – அஞ்ஞானிகளாயிருக்கிறவான் மாக்க ளெல்லாவவத்தைகளுநீங்கி யதீதத்திலே யழுந்தி கிடக்கு ந்தன்மைபோல,-காட்சியென்னக்காணாத் துயரமாட்சியை முத் தியெனவகுத்தனரே - அவ்விடத்துச் சுட்டிக்காண்கைக் கொரு காட்சியுமில்லையாய்ச் சுகதுக்கங்களினுடைய வநுபோகங்களுமி ல்லையாயிருக்கிற வவதாரத்தை முத்தியென்று சொல்லாநிற்பர்கள்,

பாடாணவாதிசங்கற்ப-முற்றிற்று.

—()—

பாடாணவாதிசங்கற்ப நிராகரணம்.

வகுத்துரைபெருகத் தொகுத்திடுமுத்தி
நன்றுநன்றிரு ளொன்றியமலத்தா
முளத்திற்குறுபொறி செறிபுலநுகர்தல்,
விளக்கிற்றிகழு மேன்மையதன்றே
கருவிகளகல்வுழி மருவியதுயரமு
மன்றெனலாகுந் துன்றியபடலத்
திடைதடைப்பட்ட சுடர்விழிமாந்தர்
படலநீங்குதல் கடனாதலினே
காட்சியென்னக் காணாத்துயர
மாட்சியைமுத்தி யெனவகுத்துரைக்கிற்
கராணுபாவ மாணங்கருமற
மேய்ந்தவர்முத்தி சேர்ந்தவரன்றே
யனையகதிக்கோர் முனைவரும்வேண்டா

தனிதருதுயர மெனுமிதுதிடமே
பாடாணத்திற் கூடாமுத்தி

இ-ள், வகுத்துரைபெருகத் தொகுத்திடு முத்திநன்றநன் றிருளொன்றியமலத்தாம் - சொல்லைப் பலவாகவகுத்துச் சிலதிருஷ்டாந்தங்களையுஞ் சொல்லிமுடிவில் யான்மலத்தோடுங் கூடிநிற்கிற கேவலக்கிடையை முத்தியென்று நீ சொன்னது நல்லது இப்படியொருத்தருஞ் சொல்வாரில்லை, (நன்றென்ற தாக்ஷேபச்சொல்) உளத்திற்குறபொறி செறிபுலனுகர்தல் விளக்கிற் றிகழு மேன்மையதன்றே - சகலத்தி லான்மாவுக்குப் பொருந்தப்பட்ட விந்திரியங்கள்காட்டாக வந்தவான்மா செறிந்திருக்கிற சத்தாதிவிடயங்களைப் புசித்துக்கொண்டு வருகிறதுகண்ணுக்கு விளக்கினது காட்டாகக்கண்டுவருகிற தன்மைபோலுமாகையாற்சகலங்குற்றமாகச் சொன்னாய்,—கருவிகளகல்வுழி மருவிய துயரமுநன்றெனலாகும் - விளக்குப்போல விவனுக்குக் காட்டாநிற்கிற கருவிகணீங்கினவிடத் தாணவமலத்திலே யழுந்திக்கிடக்கிற கேவலமு முன்னேசொன்ன சகலம்போல நன்றென்றுசொல்லலாமாகும், அஃதெதுகொண்டெனில்,—தன்றியபடலத் திடைத்தடைப்பட்ட சுடர்விழிமாந்தர் படலநீங்குதல் கடனுதலினே - மிக்கபடலத்தினலே நடுவேசாக்ஷி தடைப்பட்ட கண்ணினையுடைய வான்மாக்களுக்குப்பின் போரவதாரத்திலே யவுஷத பிரயோகங்களினலே யந்தக்கண்ணிற் படலநீங்குகிறது முறைமையாயிருக்கையினு லெனக்கொள்க, (இது பெத்தத்தைமறுத்தது) (மேன்முத்தியை மறுக்கிறார்)— காட்சியென்னக்காணுத் துயரமாட்சியை முத்தியென வகுத்துரைக்கில் - சுட்டிக் காண்கைக் கொருசாக்ஷியுமின்றிச் சுகதுக்கங்களினுடைய வநுபோகமுமின்றியிருக்கிற விந்தவவதரத்தை முத்தியென்று நீ-பலவாகவகுத்துச் சொல்லில்,—கரணுபாவ மரணங் கரு மர மேய்ந்தவர் முத்திசேர்ந்தவரன்றே - கரணங்களினுடைய பிரிவினைப்பொருந்தினவான்மாக்களில் மாணத்தைப் பொருந்தினவர்களுங் கருவைப்பொ

ருந்தினவர்களு மரவர்க்கங்களைப் பொருந்தினவர்களு மிவர்கள
த்தனைப்பேரு முத்தியைப் பொருந்தினவர்க ளாகவேண்டும்,—
அனையகதிக்கோர் முனைவரும்வேண்டா - அப்படிக்கொத்தமுத்
தியைப் பெருகைக்கொராசிரியனும் வேண்டுவதில்லை,— தனித
ருதுயரமெனுமிது திடமே. - இந்தமுத்தி யெல்லாக்கருவிகளுநீ
ங்கி யாணவமலத்தோடுங்கூடி யொன்றுமறியாமற் கிடக்கிற கே
வலத்துயரமென்பது தப்பாதாகையால்,—பாடாணத்திற் கூடா
முத்தி - கல்லுப்போலே யொன்றுமறியாமற் கிடக்கிறது முத்தி
யென்று சொல்லப்படாது.

பாடாணவாதிசங்கற்ப நிராகரண-முற்றிற்று.

பேதவாதிசங்கற்பம்.

—()—

ஈசனதருளாற் பாசத்தொகுதி
செறிவுறுசெம்பிற்களையுறுகளிம்பு
குளிகைதாக்க வொளிபெற்றுங்கு
நித்தசுத்த முத்தராக
வைத்தனருகிலன் மறைவல்லோரே.

இ-ள். ஈசனதருளாய் பாசத்தொகுதி செறிவுறு செம்பிற்க
ளையுறுகளிம்பு குளிகைதாக்க வொளிபெற்றுங்கு. (அநுவயம்.)
செறிவுறுசெம்பிற் களையுறுகளிம்பு குளிகைதாக்க வொளிபெற்
றுங்கு ஈசனதருளாற் பாசத்தொகுதி - குகைக்குள்ளே செறிந்து
கொண்டிருக்கிற செம்பினிடத்துண்டாகிய கருமை பொருந்தியி
ருக்கிற காளிதமான திந்தக்குளிகைசென்று கூடினவிடத் தந்தக்
காளிதங்கெட்டுப் பத்துமாற்றுப்பொன்னுன தன்மைபோலப்ப
க்குவப்பட்ட வான்மாக்களுக்குக் கத்தாவினுடைய காருண்ணி
யத்தினலே ஆணவமாயை காமியமென்று சொல்லப்பட்டு வருகி
றமலங்களினது கூட்டங்கெட்டு,—நித்த சுத்த முத்தராக வைத்

தன ருலகின் மறைவல்லோரே - அழியாததாய் நின்மலமாயிருக்கிற முத்தியினைப்பெற்றுப் பெறுவானும் பேறுமாயிருப்பார்களென்று சொல்லிவைத்தன ருலகத்தின்கண்ணே வேதத்தினுண்மையை நன்றாகப்பொருந்தின பெரியோர்கள், (எ)

பேதவாதிசங்கற்ப-முற்றிற்று.

பேதவாதிசங்கற்ப நிராகரணம்.

—()—

மறைகளாகமத் துறைகண்மற்றெவையு
நாசமில்பதிபசு பாசமென்றுரைத்த
லயர்த்தோர்குளிகைச் சயத்தாற்றும்பிரக்
காளிதநாசம் பாசத்தேய்த்தல்
கூடாதன்றியங் குளிகைசெருண
நீடாதழித்த நிலைநிலையாதலிற்
பேதவாத மோதுதல்பிழையே
யின்னுமின்னுயி ரேமங்குளிகை
தன்னிலங்கியந் தருவதுதிடமே
வீடித்திறனிற் கூடக்கூடா

இ-ள். மறைக ளாகமத் துறைகண் மற்றெவையும் -நாலு வேதங்களு மாகமங்களு மதன்வழிநூலாகிய புராணங்களு மற்றுண்டான சாத்திரங்களும்,—நாசமில் பதிபசுபாச மென்றுரைத்தல் - பதிபசுபாசங்களுக் கழிவில்லையென்று சொல்லுகிறதை,—அயர்த் தோர்குளிகைச் சயத்தாற்றும்பிரக்காளித நாசம் - மறந்திப்பொழுதோ ரிரதகுளிகையின் சாமர்த்தியத்தினுலே செம்பிலுண்டான காளிதமானது கெட்டுப்போகிறதை;— பாசத்தேய்த்தல் கூடாது- பாசத்திற்குநீயுவமைசொன்னது சாத்திரவிரோதம்.—அன்றியுங் குளிகை செருண நீடாதழித்த நிலை நிலையாதவில்-அதுவல்லாமலு மிரதகுளிகையானது செம்மை நிலை நிற்க

வொட்டாம லதையழித்துப் பொன்னுக்கின திருஷ்டாந்த நிலையு னக்குத்தாஷ்டாந்த நிலையாகையால்,— பேதவாத போதுதல்பி ழையே - பசுமுதல்கெடாது பெறுவானும் பேருமாயிருக்குமென் று நீ முன்னேசொன்ன பேதவாதமும் பழுதாம்,—இன்னு மின் னுயிரேமங் குளிகைதன்னி லந்நியந்தருவது திடமே - இதுவல் லாமல் செம்பானது தன்னைச்சுத்தமாக்கின குளிகையுமாகாமற்ற ன்னுடைய தன்மையுங்கெட்டு நடுவேபொன்னான தன்மைபோ ல இந்தவான்மாவும் தன்னைச்சுத்தமாக்கின சிவனுடைய சொரு பமுமாகாமற் றன்னுடைய தன்மையுங்கெட்டு வேறொருசொரு பமாகவேண்டு மாகையாற் குற்றமுண் டென்கிறது தப்பாது,— வீடித்திறனிற்கூடக் கூடா - மோக்ஷம் செம்புமிரத குளிகையு ம்போலு மென்று சொன்ன வகையிற் கூடுமென்கிற துண்டா காது. (அ)

பேதவாதி சங்கற்ப நிராகரண-முற்றிற்று.

சிவசமவாதி சங்கற்பம்

பாசமும்பசுவு மீசனுமென்றிம்
மூவகையுணர்வு தான்முதன்மையவாய்ப்
பாசவைம்புலன் றேசுறவுணர்த்தப்
பசுத்தனிஞானம் புரித்திடுமன்றே
யினையஞானம் பிரிவுறவெரியாச்
செந்தழறருநெறி யந்தமிலுயிரு
மறிவாயொன்று மறியாதன்றே
யிவ்வாறுழுகு மேனையுயிர்க்கு
முன்னோன் றனது முதிரொளிஞான
மறியாப்பச்சைச் சிறுபுழுக்கவர்ந்த
வண்டெனவுயிரைக் கொண்டிடுமுயிரது

தன்னைநோக்கித் தானதுவாகி
யைவகைத்தொழிலு மெய்வகையுணர்வும்
பிரியாவாறு பெற்றுத்
திரியாப்பெரியோர் திரட்சிசேர்ந்திடுமே

இ-ள், பாசமும் பசுவு மீசனுமென்றிம் மூவகையுணர்வு தா
ன்முதன்மையவாய் - பதிபசுபாச மூன்றிற்கும்பதி ஞானமென்
றும் பசுஞானமென்றும் பாசஞானமென்றுஞ் சொல்லப்பட்ட ஞா
னங்களநாதியே தனித்தனியே முதன்மையாயிருக்கையால்,—பா
சவைம்புலன் றேசுறவுணர்த்த - பாசஞானமாகிய விந்திரியங்க
ள் விடயங்களை மயக்கமறவறிவிக்க,—பசுத்தனிஞானம் புசித்திடு
மன்றே - பசுவினதொப்பிலாத ஞானமான தந்தவிடயங்களைப்பு
சிக்கும்,—இனையஞானம் பிரிவுறவெரியாச் செந்தழறகுநெறி - இ
ந்தவிரண்டு வகைஞானமு நீங்கினவிடத்துக் கொழுந்துவிட் டெ
ரியாமற் கிடக்கிற சிவந்ததழலையொக்கு மென்றுசொல்லலாம் - அ
க்தமிலுயிருமறிவா யொன்றுமறியாதன்றே - அவத்தையிலழி வில்
லாமலிருக்கிற வான்மாவு மறிவாயிருக்கையிலே சுட்டி யறிவதற்
குண்டாகாது,—(இதுபெத்தம்,) (மேல்முத்தி)--இவ்வா றெழு
குமேனை யுயிர்க்குமேனை யுயிர்க்கு-இப்படி நாடோறுங்கே வலச
கலப்பட்டு வருகிறவான்மாவுக்கு.— முன்னேன்றனது முதிரொ
ளிஞானம்-மூன்று முதலுக்குள்ளே முந்தினபதியினுடைய மிகுந்
தவறிவாயிருக்கிற ஞானமானது,—அறியாப்பச்சைச் சிறுபுழுக்க
வர்ந்தவண்டென வுயிரைக்கொண்டிடும் - ஒன்றுமறியாமற் கிடக்
கிற பச்சைநிறத்தையுடைய சிறியபுழுவினை வந்தெடுத்துக் கொ
ண்ட வேட்டுவாளியைப் போல வொன்றுமறியாத வான்மாவை
வந் தெடுத்துக்கொள்ளும்,—உயிரது தன்னைநோக்கித் தானது
வாகி-புழுவான தந்தவேட்டு வாளியினை நினைந்திருந்த வேட்டு
வாளியினுடைய சொரூபமானாற்போல வான்மாவுமந்தச் சிவனை
த் தியானம்பண்ணி யந்தச்சிவனுடைய சொரூபமாகி.— ஐவகை
த்தொழிலு மெய்வகையுணர்வும் பிரியாவாறுபெற்று - வேட்டு

வாளியான புழுவந்தவேட்டு வாளிசெய்யுந் தொழிலுஞ்செய் ததனுடைய சொரூபமுநீங்கா ததனுடைய கூட்டத்தோடுங் கூடியிருந்த தன்மைபோல விந்தவான்மாவுஞ் சிவனுடைய பஞ்சகிருத்தியங்களுஞ் சர்வஞ்ஞயத்தையுந் தன்னைவிட்டு நீங்காதவாறுபெற்று,—திரியாப் பெரியோர் திரட்சிசேர்ந்திடுமே - முன்னே யிந்தவறிவுந் தொழிலும் பெற்று நீங்காமலிருக்கிற பெரியோர்கள்கூட்டத்தோடுங் கூடிநிற்கும், (கூ)

சிவசமவாதிசங்கற்ப முற்றிற்று,

—()—

சிவசமவாதி சங்கற்ப நிராகரணம்

சேர்ந்தமும்மை வாய்ந்தஞானமு
மொருகாலன்றித் தெரிவுறநிற்கி
லொண்பொருள்காணும் பண்பினுக்கொருகாற்
பரிதியுமதிரி மெரிதருவிளக்கும்
வேண்டலின்றே காண்டருகாலை
யொன்ருென்ருக நின்றறிவுறுமெனி
லந்நியமறியா மன்னுயிர்பொறிபுலன்
ருேனுவறியா தலைவர்க்குலகினை
யானுவறிவா லறியவேண்டின்றே
கொழுந்தழறருமெனி லழுந்திடுமவத்தையிற்
றிரியாத்தலைவர் தெரியாத்தன்மைவந்
தெய்தலாகா மெய்யுறுபொருட்கு
முன்னர்க்கிடந் தன்னெனவெடுத்த
வேட்டுவனியல்பு கூட்டல்பெருதே
வண்டிறும்பெடாவுட் கொண்டதுதனக்கு
மந்திரவாதந் தந்ததுமிலதே
யெடுத்திடுமெதனு லடுத்ததென்றறையிற்

கருமயிர்க்குட்டி யிருசிறைப்பறவை
யாயினதெடுத்த தாயர்சாற்றிலரே
பிறவிப்பேதத் துறையிவைகிடக்க
வேயுமித்திற னாயுங்காலை
யோகத்தகுதி யாகத்தகுமே
ஞானமின்மையென் றோதுவதெவனெனி
னுயிருமுணர்வும் பயிலுதலின்றி
வேட்டுவனுருவ மென்புழுவுணர்வு
கூட்டுதலாலுருக் கூடுதலானு
முத்தியிலிறையிற் பற்றுதலின்றித்
தன்னுருவணைந்த பின்னதனுணர்வு
மாறுதலானு மூறுடைத்தன்றே
யீசனதியல்பரு ளெய்துயிரியற்றல்
பேசுதறவறெனப் பெருமறையறைய
வைந்தொழிலுயிருந் தந்திடறகுமோ
யாவதென்முன்னா னாவலர்பெருமான்
பண்டொருமுதலை யுண்டமைந்தனை
வரவழைத்தனனென் றாய்பிழைப்பிலதனுந்
தந்திடவேண்டு மென்றனரன்றே
யின்னவைகிடக்க முன்னவன்றன்மை
யெய்தினரெல்லாச் செய்தியுஞ்செய்வ
ரிரும்பெரியெய்தித் தருஞ்செயறகவெனிற்
பொருணிலைகிடக்க வொருதிட்டாந்தப்
பேறேயாயிற் சீறாக்கதிவிய
புனலொருபுடைசேர் கனறகுமாயினும்
வேறொருபொருளை நீறாக்கிலதே
நெருப்பெனுமிதனி னுருத்தனிகாட்டுக
வங்கியுமொன்றிற் றங்கிநின்றலது
தன்றொழினடத்தா தென்றறியினிதீ

யிருப்பனற்செய்தி தரும்பரிசுளதோ
யதுவெனுரலகை பொதிதருங்காலே
யதன்செயலனைத்து மிவன்செயலாமா
லவனிவனகி லிவனவன்செய்திக்
கென்னவையென்னிற் பின்னுறுசெயலு
மதன்செயலன்றி யிவன்செயலாகி
லிவன்செயல்பேயின் றன்செயலாகி
யிருந்தவாவெனத் தெரிந்திடவேண்டுந்
தெரியாதாகித் புரியிற்கடுங்கன
லெரிந்ததென்னு மிதுதருமன்றியு
மவனிவனகி லிவனவன்செய்தி
யென்றுசெய்வா னென்றியமதத்தா
யெல்லாமறிதல் செல்லாதுயிர்கள்
சிற்றறிவெனுமிச் சொற்றவருரு
மென்பதெனலகை தன்பதமடைந்தோர்
கொண்டவாறு கண்டனமென்னின்
மூங்கையந்தருற் றேங்கியகுணங்குறி
செய்வதெனின்னும் பௌவமுற்றமுழ்கினு
ளாழிகொள்ளா தாழியினலைபுன
லதனுற்கருத்து முதலுளதாக
வேண்டுமென்றே யீண்டினியமையு
மெல்லாமினுமிச் சொல்லாற்படும்பொரு
ளனைத்துந்தாக்கா தனிப்பரத்துற்றவர்க்
கெவ்வகையுணர்வு செய்வதென்செப்புக
வொன்றினென்று மொன்றுதலகி
னின்றபோதுயிர் நேராமன்றே
முத்தியுற்ற நற்றவரவையிடை
சேர்வரென்றனை சார்தருமுத்தி
சாலோக்கியமோ சாயுச்சியமெனிற்

பந்தமுற்று கந்தலகழித்த
வறிவினேடறிவு பிரியாப்பெற்றி
வேண்டுமென்றதற் கீண்டிவரிவ்வா
றிருப்பரென்பதற் குருத்தான்வேண்டு
மண்ணலதருளி னண்ணியிருப்பினுஞ்
சீவன்முத்தரென் றேதினாகன்று
நீங்கியுமுருவ நீங்காதாயி
னேங்கியமுத்தி யாவதென்னுரைக்க
செடியுடலணுகாக் குடிலைகொடுக்குமென்
றேதினைநீயே பேதாய்பகட்டுர
லொளிர்சினைமுச்சித் தளிரெனுமிதுதகு
மிச்சாரூப நச்சினரென்னின்
மும்மலத்தேது மின்மையதன்றே
யிதுவளர்முத்திப் பதமெனவியம்புவர். (ஈங்கிவைநிற்க)

இ-ள, சேர்ந்த மும்மை வாய்ந்தஞானமு மொரு காலன்றித் தெரிவுறநிற்கில் - இங்ஙனங்கூடிவருகிற பதிபசுபாசமூன்றினுக்கும் பொருந்தப்பட்ட மூவகைஞானமு மொக்கக்கூடிநின்றே யொருமுதல்க ளறியப்பட வேண்டுமோயின்,— ஒண்பொருள் காணும்பண்பினுக் கொருகால் - கண்ணுன தழகியபதார்த்தங்களிலே யொன்றைக்காணவேண்டின வொழுங்கினுக்கு விசாரித்துப்பார்க்குமிடத்து.— பருதியுமதியு மெரிதருவிளக்கும் - ஆதித்தனுகுதல் சந்திரனுகுதல் எரிகிறவிளக்காகுதல்.— வேண்டலின்றே காண்டகுகாலை - ஒன்றுகாட்டக் காணுமதொழிற் திவைமூன்றுங்கூடி நின்றுகாட்டக் கண்ணென்றைக் காணவேண்டுவதில்லை, ஆகையால் மூன்றுஞானமுங்கூடி யறியுமென்ற தத்தமன்று.—ஒன்ருென்ருக நின்றறிவுறுமெனில் - அப்படியன்று காணும் ஒவ்வொன்ருகத் தனித்தனியே நின்ருெவ்வொரு விடயங்களை யறியுமென்று நீ-சொல்லில்,—அங்கிய மறியா மன்னுயிர் - நிலைபெற்றவான்மாவுக்குவிடயங்கள்வேருயிருக்கைகயினுலேபசுஞான

ந்தானுக் கொருவிடயங்களை யறியமாட்டாது,— பொறிபுலன்று ணே வறியா - பாசஞானம் ஜடமாகையினாலே யொரு விடயங்க ளையுமறியாது,— தலைவர்க்குலகினை யானுவறிவா லறியவேண்டி ன்றே - பதிஞான மநாதியே போறிவாயிருக்கையினாலே விடய ங்களைப் புதிதாகச் சுட்டறியவேண்டுவ தில்லை,— கொழுந்தழற குமெனி லழுந்திடுமவத்தையில் - கருவிகணீங்கி யாணவ மலத்தி னாலே மறைக்கப்பட்டிருக்கிற வவத்தையி லான்மாவெறியாமற் கிடக்கிற கொழுவியதழலை யொத்திருக்குமாயில்,— திரியாத் தலை வர் தெரியாத்தன்மைவந் தெய்தலாகா - ஒருகாலத்திலு மிவனை விட்டு நீங்காதகத்தாவை யிவனறியாமலிருக்கிற முறைமை பொ ருந்துத விவனுக் குண்டாகாது. (இது பெத்தத்தைமறுத்தது,) (மேலான்மா பஞ்சகிருத்தியஞ் செய்யுமென்பதை மறுக்கிறார்) — மெய்யுறுபொருட்கு முன்னர்க்கிடந் தன்னெனவெடுத்த - சிவ னோடொன்று பட்டிருக்கிற முத்தித்தன்மைக்கு முன்னே யொ ன்று மறியாமற்கிடந்த பச்சைப்புழுவைத் தன்னுடைய சொரூப மாக வேண்டுமென்றெடுத்த, - வேட்டுவனியல்பு கூட்டல்பெறு தே - வேட்டுவாளியி னதியல்புவமையாகக் கூட்டிச்சொல்லுகி றதுபெறுது,—வண்டிறும்பெடா வுட்கொண்டதுதனக்கு மந்தி ரவாதந் தந்ததுமிலதே - இவனிந்த வானமாக்களுக்கு மந்திரவு பதேசங்களைச்செய்து தற்சொரூப மாக்கினாற்போல வேட்டு வா ளியாலது புழுவையெடுத்ததற்கு மந்திரவுபதேசங்களைச்சொல்லி த் தற்சொரூபமாக்கினதாகச் சொல்லப்படாதாகையால் நீவேட் டுவாளியையும் புழுவையு முத்திக்குவமைசொன்ன தத்தமாகா து,—எடுத்திடுமதனு லடுத்ததென்றறையில் - அப்படியன்று கா ணும் அந்தவேட்டுவாளி சென்றெடுத்ததுதானே யுபதேசமாகவ ந்தப்புழுதற் சொரூபமானதென்று நீ-சொல்வில்,— கருமயிர்க்கு ட்டி யிருசிறைப்பறைவை யாயினது - கருமைபொருந்திய மயிர் க்குட்டிப்புழுவானது பெரியசிறகினையுடைய வண்டுப்பறவையா ய்ப்போனது,—எடுத்த தாயர்சாற்றிலரே - அதற்கொருதாயாய்வ

ங்கெடுத்த துபதேசமாய்ப் பறவையாய்ப்போன தென்றொருவரு ஞ்சொல்லுவாரில்லை-பிறவிப்பேதத் துறையிவைகிடக்க- ஆகை யால்பச்சைப்புழுவு மயிர்க்குட்டியுங் கன்மத்துக்கீடாக வச்சுமா றினது முத்திக்குவமை சொல்லப்படாது இவைகிடக்கட்டும்இத ன்றியும்,—ஏயுமித்திற னுயுங்காலை யோகத்தகுதியாகத் தகுமே - புழுவேட்டுவொளியானாற்போல வான்மாவுஞ் சிவசொரூபமான தை விசாரிக்குமிடத்து யோகத்திற்குச் சொல்லலா மொழிந்து ஞானத்திற்காகாது,—ஞானமின்மையென் றேதுவதெவனெனி ல் - இதுஞானமார்க்கமாகாதென்ற தெதினாலேயென்னில்,—உ யிருமுணர்வும் பயிலுதலின்றி - ஆன்மாவுஞ் சிவனுங்கூடியொன் றுபட்டிருக்கிறதே முத்தியென்றிருக்கையிலே வேறுபட்டிருக்கு மென்று நீசொன்னதன்றியும்,—வேட்டுவனுருவ மென்புழு வுண ர்வு கூட்டுதலா லுருக்கூட்டுதலானும் - வேட்டுவாளியி னுடைய சொரூபத்தை மெல்லியபுழுவினுடைய நினைவானது கூடுதலா லே யுனக்குமுத்தியிலொரு சரீரங்கூடுகையாலும்,— முத்தியி னையிற்பற்றுதலின்றி - மோக்ஷத்திற கத்தாவினிடத்துக் கூடியி ருத்தலன்றி வேறாயிருக்குமென்று சொன்னதோஷ மன்றியும்'— தன்னுருவணைந்த பின்னதனுணர்வு மாறுதலானும் - புழுவான து வேட்டுவாளியினுடைய சொரூபத்தைப் பெற்றபின்பு முன் னுண்டானவறிவதற் கில்லாதபடியினாலும்,—ஊறுடைத் தன்றே இத்தை ஞானத்தினாலுண்டாகிய முத்தியென்று சொல்லுகிறது குற்றமுடைத்தாம்,—ஈசனதியல்பரு ளெய்துயிரியற்றல் கத்தாவு க்குண்டாகிய பஞ்சகிருத்தியங்களைத் திருவருளைப்பெற்றவான்மா க்கள் செய்யுமென்று,—பேசுதறவறெனப் பெருமறை யறைய - சொல்லுகிறதங் குற்றமென்றுபெரியவேதமானது சொல்லுமிட த்து.—ஐந்தொழி லுயிருந்தந்திடறகுமோ - கத்தாவினாலேசெய்கி ற பஞ்சகிருத்தியங்களை யான்மாவினாலே செய்யப்படுமென்றதுத காது,—ஆவதென் முன்னு ணுவலர்பெருமான் பண்டொருமுத லையுண்டமைந்தனை வரவழைத்தனனொன்றாய்-அப்படிச்சொல்லு

கிறதென்னதான் முற்காலத்திலே நம்பியாரூரர் முன்னேயொரு முதலை விழுங்கின பிள்ளையை வரத்தக்கதாகவழைத்தாரில்லை போவென்றுசொன்னாய்,—பிழைப்பிலததுநீ தந்திடவேண்டுமென்றனரன்றே - அப்படிச்சொன்னது குற்றமில்லை அந்த முதலைவாயிலேநின்று பிள்ளைமீளவரவழைத்ததும் (திருப்பாட்டு.) "உரைப்பாருரையுகந் துள்கவல்லார்தங்களுச்சியா, யரைக்காடரவா வாதியுமந்தமுமாயினாய், புரைக்காடுசோலைப் புக்கொளியூரவிநாசியே, கரைக்கான்முதலையைப் பிள்ளைதரச்சொல்லுகாலனையே." இப்படித்தேவரீ ரந்தப்பிள்ளையைத்தந் திடவேண்டுமென்றுசொன்னதொழிந்து தாமாகவரவழைத்த தில்லையாதலாற் றிருவருளைப்பெற்றவான்மா பஞ்சகிருத்தியஞ் செய்யுமென்று நீசொன்னதுத்தமன்று,—இன்னவைகிடக்க முன்னவன்றன்மையெய்தினர் - இதுவெல்லா நீர்சொன்னது கிடக்கட்டும் கத்தாவினுடையதிருவருளைப்பெற்றவர்களே,—எல்லாச் செய்தியுஞ்செய்வர் - கத்தாசெய்கிற சிருஷ்டிமுதலான கிருத்தியங்களெல்லாஞ்செய்வார்கள். அதென்போலவென்னில்,—இரும்பெரியெய்தித் தருஞ்செயறகவென்னில்-இரும்பான தக்கினியைப்பொருந்தி யதனுடைய சொரூபத்தையும் பெற்றதனுடைய தொழிலையுஞ்செய்தாற்போல வென்று நீசொல்லில், பொருணிலைகிடக்க வொருதிட்டாந்தப் பேறேயாயின் - திருவருளைப்பெற்ற நம்பியாரூரராலே பஞ்சகிருத்தியங்களைச்செய்யப்பட்டதில்லையென்று பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கையிலே யதைப்போட்டிரும்பு மக்கினியும்போலேயென்று திருஷ்டாந்தத்தினாலே யுனக்குச் சாதிக்கலாமாகில்,—நீருக்கதுவியபுணலொருபுடைசேர்க னறகுமாயினும் - ஆரவாரித்துச் சொல்லுகிற தண்ணீரான தக்கினியைப்பொருந்தி யைக்கியமாயிருந்ததாயினும்,—வேறொருபொருளை நீருக்கிலதே - அக்கினியைச்சேர்ந்த விரும்புபோல விந்தவெந்நீர் வைக்கோல் முதலானவற்றைச் சுட்டுப்பொடியாக்க மாட்டாது, அதுதண்ணீரோடே நிற்கையாற்சுட்டதில்லைகாணும் தனித்துநின்றாற் சுடுமென்று நீ-சொல்லில்,—

நெருப்பெனுமிதனி னுருத்தனிகாட்டுக - நெருப்பென்று சொல்லுகிற விந்தப்பூதரூபந்தனித்துநின்று தன்னுடையதொழிலைச்செய்யமாட்டாது, எங்கேயாயினுந் தனித்துக்காரியப்பட்ட துண்டா காட்டுவாயாக,—அங்கியு மொன்றிற்றங்கி நின்றல்லது தன்றொழிலடத்தாதென் றறியினிநீ - அக்கினியுமொன்றைச்சார்ந்து நின்றல்லது தன்னுடையதொழிலைச் செய்யமாட்டாதென் றறிவாயாக, ஆகையால்,—இரும்பனற்செய்தி தரும்பரிசுளதோ - அக்கினியிரும்பைச்சார்ந்துநின்று தன்னுடைய தொழிலைச் செய்ததொழிந்து இரும்பக்கினியுடைய தொழிலைச் செய்ததுண்டோ? ஆகையாற்றிருவருளைப்பெற்ற வான்மாக்கள் பஞ்சகிருத்தியஞ் செய்வார்களென்று நீசொன்னதத்தமன்று,— அதுவெனேரலகை பொதிதருங்காலை - ஒருவனையொரு பசாசுபிடித்தவிடத்து.—அதன்செயலினைத்து மிவன்செயலாமால் - அந்தப்பசாசினுடைய செயலெல்லா மிவனுடையசெயலாக் காணப்பட்டதோ வில்லையோ? ஆகையால் அருளைப்பெற்றவர்கள் பஞ்சகிருத்தியஞ்செய்வார்களென்று நீசொல்லில்,—அவனிவனுகி லிவனவன்செய்திக்கென்-அந்தச்சிவனிந்த வான்மாவாயிருந்து தன்னுடையதொழில்களைச்செய்தானுமாகில் இந்தவான்மா வந்தச்சிவனுடைய தொழிலைச்செய்வதெதனுலே செய்யும்,—அவையென்னில் - அந்தத் தொழில்களைச்செய்தற் கிந்தவான்மாவுரித்தென்று நீசொல்லில்,— பின்னுஞ்செயலு மதன்செயலன்றி யிவன்செயலாகில்-ஒருவனைப்பேய்பிடித்துவிட்டு நீங்கினபோ திவன்செய்த செயல்களெல்லா மிவனுடையசெயலாமோ அந்தப்பேயினுடைய செயலாமோ அதெல்லாம் பேய்ச்செயலாகாதிவனுடைய செயலாமாகில்,—இவன்செயல்பேயின்றன்செயலாகியிருந்த வாவெனத்தெரிந்திடவேண்டும் அப்படியிவனுக்குப் பேய்பிடித்தபோது செய்த தொழில்களையுமறியவேண்டும் அறிடப்படாததென்னென்று நீ, சொல்லில் தெரியாதாகில்-அப்படியிவனுக்குப் பேய்பிடித்தபோது செய்ததொழில்களை யறியப்படாதாகில்,—புரியிற்கடுங்கன லெரிந்ததென்னுமி

துதகும்-புரியினிடத்துக் கடிதாயுள்ள வக்கினிகூடிநின்று தன்னு
டையதொழிலைச்செய்தாற்போலச் சிவனுமான்மாவினிடத்திலே
நின்றுதன்னுடைய தொழிலைச்செய்த தொழிற்தான்மாசிவனுடை
யதொழிலைச் செய்யமாட்டாது,...அன்றியுமவணிவனுகி லிவனவ
ன்செய்தி-இதன்றியுமந்தச் சிவனொருகாலத்திலும் ஜநந மரணமி
ல்லாதவன் இந்தவான்மா வொருகணப்பொழுதிலே ஜநநமரண
ப்படுகிறவன் இப்படிக்கொத்தவான்மா வப்படிக்சொத்த சிவனு
டையதொழிலைச் செய்தானுமாயினும்,..என்றுசெய்வானென்றி
யமதத்தாய்-எந்தக்காலத்திலேசெய்து நிறைவேர்றவான் உன்ம
தத்தொடே கூடியிருக்கிறவனே இதற்குத்தர முண்டாகிற்சொல்
(இஃதான்மாபஞ்சகிருத்தியஞ் செய்யுமென்பதைமறுத்தது,)(மே
லான்மாவிற்கு சர்வஞ்ஞத்துவ முண்டென்பதை மறுக்கிறார்,)—
எல்லாமறிதல் செல்லாதுயிர்கள்-இதுவன்றியும் சர்வஞ்ஞத்துவமா
ன்மாவுக்குண்டென்று சொன்னாய் எல்லாத்தையுமறியும்பகுதியா
ன்மாக்களுக் குண்டாகாது எல்லாத்தையுமறிந்திருக்கிற திருவரு
ளினிடத்திலே பதிகையினாலே யிவனுமெல்லாத்தையுமறிவனெ
ன்று நீசொல்லில்,...சிற்றறிவெனுமிச் சொற்றவராகும்- இந்தவா
ன்மா கிஞ்சிஞ்ஞனென்று சொல்லுகிறசொற் பழுதாம்,... என்ப
தெனலகை தன்பதமடைந்தோர் கொண்டவாறு கண்டனமென்
னில்-என்றுநீர் சொல்லுகிறதென்ன பேயினுடைய பதவியைப்
பெற்றவர்க ளந்தப்பேய்க்குண்டாகிய வருகாலத்தி னிகழ்ச்சிகளை
யெல்லாஞ்சொன்னது கண்டோமேயென்னில்,...மூங்கை யந்த
ருற்றோங்கிய குணங் குறி செய்வதென்-ஊமையுமாய்க் குருடனு
மாயிருக்கிறவ னொருவனை யிவையெல்லாங் குறைவற் றிருக்கிற
பேய்ப்பிடித்தவிடத் தவனுவழுங்கிச் சொன்னதுமில்லை கண்டெ
ரிந்தொன்றைக்கண்டதுமில்லை. ஆகையால் பேயின்றன்மையெ
ல்லாம் பிடியுண்டவனுக் குண்டாகாது இன்னும் பௌவமுற்றமு
ந்தினுநாழி கொள்ளாதாழியினைப்புனல் - இதன்றியு நாழியானது
சமுத்திரத்திலே பொருந்தியமிழ்த்தினாலு மிலையையுடையவந்தச்

சமுத்திரநீரையெல்லாங் கொள்ளமாட்டாது,...அதனாற் கருத்து முதலுளதாகவேண்டும் - அப்படியிருக்கையினாலே பொறியோடுங்கூடியிருந்தாலு மான்மாவுக்குள்ள வறிவுண்டாமொழிந்து கத்தாவுக்குள்ள வறிவெல்லாமுண்டாதாக வேண்டும்,... அன்றேயீண்டினியமையும் அநாதியிலே யிப்படியிருக்கையினாலே நீ யிவ்விடத்தருளோடுங்கூடின வான்மா வெல்லாத்தையுமறியு மென்ற சொல்லை யினிவிடுவாயாக. அதேனென்னில்,...எல்லாமெனுமிச்சொல்லாற்படும பொருளனைத்துந் தாக்கா தனிப்பரத்துற்றவர்க்கெவ்வகையுணர்வு செய்வதென்செப்புக - சர்வமுமென்றசொல்லைப்பட்ட சொல்லினாலுண்டாகிய பொருளனைத்திலுந் தோய்வறநிற்கிற வொப்பற்றசிவனிடத்திலே பொருந்தினவர்க்கெந்தமுறைமை சர்வஞ்ஞியமுண்டான தவ்விடத்துச்செய்யப் போகிற தொழிலேதுசொல்லுக. ஆகையால் சிவனைப்பெற்றவர்களுக்குச் சர்வஞ்ஞியத்துவ மென்பதுகூடாது. (இஃதான்மாவுக்குச் சர்வஞ்ஞியத்துவ முண்டென்றதை மறுத்தது.) (மேன் முத்தியைமறுக்கிறார்.) இதன்றியும்,...ஒன்றினொன்று மொன்றுதலகின்றபோதுயிர் நேராமன்றே - முத்தியிலான்மாவுஞ் சிவமுமொன்றுமென்னிலொரு முதலில்லையாம் அப்படிப்பரமுத்தியடையாமற்சரீரத்தைப்பெற்று ஜீவன்முத்தனா யிருக்குமென்னில் அப்படியிருந்தவான்மா சிவனுக்குச்சமமாகாதே. ஆகையாலீதத்தமன்று இதன்றியும்,...முத்தியுற்ற நற்றவரவையிடை சேர்வரென்றனை - முன்னே திருவருளைப்பெற்றவர்கள் முத்தியைப்பெற்றிருக்கிற நல்லதவத்தினையுடைய பெரியோர்களுடைய கூட்டத்திநடுவே சென்றிருப்பார்களென்று சொன்னாய்,...சார்தரு முத்தி சாலோக்கியமோ - இப்படிப்பொருந்தினார்களென்று நீ சொன்னமுத்தி சாலோக்கிய முத்தியைச்சொன்னாயோ,...சாயுச்சியமென்னில் அப்படியன்றாகாணும் நான்சாயுச்சியமுத்தியைச் சொன்னே னென்னில்,...பந்தமுற்றகந்தலகழித்தவறிவிலோடறிவு - ஆன்மாக்களைப்பொருந்தின மலங்களைப்போக்கின கத்தாவினுடனே யான்மா

கூடினவிடத்து,...பிரியாப்பெற்றிவேண்டு மென்றதற்கு - பிரியா
மலொன்று பட்டிருக்கவேணுமென்ற வியல்பினுக்கு,...ஈண்டிவ
ரிவ்வாரிருப்ப ரென்பதற் குருத்தான்வேண்டும் - இவ்விடத்தந்த
ப் பரமுத்தியைப்பெற்றவர்கள் முன்னேமுத்தியைப்பெற்றிருக்
கிற பெரியோர்களோடுங் கூடியிருப்பார்களென்றுநீசொல்லுகை
யா லிவர்களுக்குமொருசரீர முண்டாகவேண்டும். இதன்றியும்,
...அண்ணலதருளி னண்ணியிருப்பினுஞ் சீவன்முத்த ரென்றோ
தினர் - கத்தாவினுடையதிருவருளைப்பெற்றுப் பரமுத்தியையடை
யாமலிந்தச்சரீரத்தோடேயிருந்தார்களாயினு மவர்களைச்சீவன்மு
த்தரென்று நல்லோர்கள் சொன்னார்கள். அப்படி நல்லோர்கள்
சொல்லப்பட்டிருக்கையிலே,...அகன்றுநீங்கியு முருவ நீங்காதா
யின் - இந்தச்சரீரதொந்தனை விட்டுப்போய்ப்பரமுத்தியைப்பெ
ற்றவிடத்துஞ் சரீரதொந்தனை நீங்காமலிருக்குமாயின்,— ஒங்கி
யமுத்தியாவ தென்னுரைக்க - அதுமேலானபரமுத்தியாவ தெ
ப்படித்தான்சொல்லுக, அப்படியன்றுகாணும்.—செடியுடலணு
காக் குடிலைகொடுக்குமென் றேதினைநீயே - அந்தமுத்தியிந்தவ
சுத்தமாயா தேகம்பொருந்தாது சுத்தமாயா தேகத்தைக்கொடுக்
கவந்தச் சரீரத்தோடுங் கூடியிருப்பார்களென்று நீ சொன்னமு
றைமை,—பேதாய் பகட்டுர லொளிர்சினை முச்சித்தளிரெனுமி
துதரும்-வேம்பினதடிக்கட்டைக் கைக்குமென்றறிந்து விட்டுவி
ளங்காநின்றகொம்பினுனியிற்றளிரைக்கசவாதென்றுகொண்டத
ற்கொக்கும், இதன்றியும்,—இச்சாரூப நச்சினரெனில் - சுவே
ச்சையினாலேயெடுக்கிற சரீரத்தோடுங்கூடிப் பிரியப் பட்டிருந்
தார்களென்று நீசொல்லின்,—மும்மலத்தேது மின்மையதன்றே
- ஆகையாலேமுத்தியின் மலமாயாகன்மங்களி லொருமலமானு
லுநீங்கின்றில்லையாம்;— இதுவளர்முத்திப் பதமெனவியம்புவர்
—இப்படிச் சரீரத்தோடுங்கூடியிருக்கிற முத்தியைச் சாலோகா
தியாகிய பதமுத்தியென்று நல்லோர்கள் சொல்லுவார்கள்,—ஈங்
கிவைநிற்க - இவ்விடத்து நீபழுதாகச்சொல்லிவந்த பெத்த முத்
திகளைவிட்டு நான்சொல்லுகிறதைக் கேட்பாயாக. (௰)

சிவசமவாதிசங்கற்ப நிராகரண-முற்றிற்று.

சங்கிராந்தவாதிசங்கற்பம்

---()---

(நீங்காதொளிருயிர்)
விளக்கெனநிற்கு மளப்புறமறிவின்
றிறைவர்க்கேது மறியவேண்டின்றே
மன்னுமான்ம சந்நிதியளவிற்
காந்தபசாசத் தேய்ப்பவாய்ந்த
வுயிருடலியக்குஞ் செயலுறுபூட்டைப்
பலவகையுறுப்பு மிலகியதொழில்போ
லைம்பொறிபுலன்க ளின்புறமன்றே
யினையவாய்தலி னிகழ்தருபயனவை
யந்தக்கரண முந்தியுணர்ந்திடு
மிவையகல்வுழிஇவையம் பொறிபுலனிகழா
வுயிர்நீங்கிடி லுடல் செயலிலதன்றே
யிவ்வகைவினையின் செவ்விதிநடத்தும்
பழமலநீங்க நிகழுங்காலை
யேற்றோர்முகவொளி தோற்றுங்கலனெனத்
தலைவனதருளுயிர் நிலவிடுநிலவக்
காட்டத்தங்கி மாட்டத்தங்கிய
தன்மையுமளத்துப் புல்லையினிப்பும்
போன்றதுவாகித் தோன்றிடுமதனாற்
பசுகரணங்கள்சிவகரணங்க ளாகமாறியறிவு
மேகமாமுபி ரியானெனதின்றே,

இ-ள். நீங்காதொளிருயிர் விளக்கெனநிற்கு மளப்புறமறிவின்று - ஆன்மாவானது நீங்காத பிரகாசத்தையுடையவிளக்கைப்போலே சுட்டறநிற்கும். அதுவிதுவென்று சுட்டியறிகிறவறிவிதற்கில்லை,—இறைவற்கேது மறியவேண்டின்றே - கத்தாவிகாரமில்லாதவ ராகையாலே யவருக்கொன்றையு மறியவேண்டுவதி

ல்லே,—மன்னுமான்ம சந்நிதியளவிற் காந்தப்சாத்தேய்ப்பவாய் ந்தவுயிருடலியக்கும் - காந்தமானது விகாரமறநிற்க வதன்சந்நி தியிலே யிரும்புகாரியப் படுமாறுபோல நிலைபெற்ற வான்மாவி காரமறநிற்க வதன்சந்நிதியிலே பொருந்தப்பட்ட பிராண வாயு வான துடலைக்காரியப்படுத்தும்,—செயலுறு பூட்டைப் பலவகை யுறுப்பு மிலகியதொழில்போல்-சமைக்கப்பட்ட நீரிறைக்கிறபூட் டையினது பல்வகையாகிய வவையவங்களும் விளங்கப் பட்ட தொழில்களைச் செய்தாற்போல,—ஐம்பொறிபுலன்க ளின்புறும ன்றே - பஞ்சேந்திரியங்களுஞ் சத்தாதிவிடயங்களை யநுபவியாநி ற்கும்,—இனையவாய்தலி னிகழ்தருபயனவை யந்தக்காணமுந்தி யுணர்ந்திடும் - இந்தவிந்திரியங்கள் பொருந்தப்பட்ட விடயங்க ளையறிவதற்குமுன்னே யந்தக்கரணங்க ளறியாநிற்கும்,— இவை யகல்வழிஇ யைம்பொறிபுலனிகழா - இந்தவந்தக்கரணங்க ணீங் கினவிடத்துப் பஞ்சேந்திரியங்க ளோடுஞ் சத்தாதி விடயங்கள் பொருந்ாது, (இதுசகலம்,)—உயிர்நீங்கிடி னுடல்செயலிலதன் றே - பிராணவாயு நீங்கினனிடத்துடல் சேட்டையின்றி கிடக்கு ம். (இதுகேவலம்.)—இவ்வகைவினையின் செவ்விநடத்தும் - இப்படியான்மாவின் சந்நிதிமாத்திரத்திலே பிராணவாயு வான து பிராரத்துவத்தைப் புசிப்பித்துக்கொண்டு நிற்கும், (இஃதவ ன்பெத்தம்) (மேன்முத்தி.)—பழமலநீங்கி நிகழுங்காலை - இப் படிப்பிராரத்துவ மநுபவித்துவருமிடத் திவனுக்காதியாகியவா ணவமலநீங்க விருவினையொப்புஞ் சத்திநிபாதமும்வந்தவிடத்து, —ஏற்றோர்முகவொளி தோற்றுங்கலனென - எடுத்துப்பார்த்தவ ர்கள் முகத்தினது பிரதிபிம்பம் தோன்றுகிறகண்ணாடியைப்போ ல்,—தலைவனதருளுயிர் நிலவிடும் - கத்தாவினுடைய திருவருளா ன்மாவிடத்திலேபொருந்தும்.—நிலவக் காட்டத்தங்கி மாட்டத்த ங்கியதன்மையும் - இப்படித்திருவருள்பொருந்தவே விறகினிட த்துநெருப்பைக் கொளுத்தினபோ தந்தவிறகுகெட்டக்கினியான துபோலவும்,— அளத்துப் புல்லவயினீப்பும் போன்றது வாகித்

தோன்றிடும் - உப்பளத்திற்போட்ட புல்லும்வைக்கோலுங் கெட்டுப்போனதன்மைபோலவு மிந்தவான்மாவுந் தன்னுண்மைகெட்டுப்போன தன்மைபோலவு மிந்தவான்மாவுந் தன்னுண்மை கெட்டு அருட்சொரூபமாய்த் தோன்றாநிற்கும்,...அதனாற் பசுகரணங்கள் சிவகரணங்களாகமாறி யறிவுமேகமா முயிரியானெனதின்றே - அறிவிரண்டாய் நில்லாமலருளோடுங் கூடியொன்றாம் பின்னையிந்தவான்மா விற்கியானென தென்கிறதில்லை.

சங்கிராந்தவாதிசங்கற்ப-முற்றிற்று.

சங்கிராந்தவாதிசங்கற்ப நிராகரணம்.

——()——

இன்றனதுணையி னன்றியுயிரொளிர்
தீபம்போலத் தாபந்தரினிருள்
செறியுனதன்மையெ னறிவிலதாகி
லொளியெனவுரைத்த தெளிவதற்கேதாஞ்
சந்நிதியளவில் மன்னுஞ்செயலுடல்
காந்தம்போல வாய்ந்ததென்ற
தன்மையுமுணராப் புன்மையதன்றே
யுயிருடலியக்கிற் றுயில்பெறாங்காலைச்
செய்ததென் மனுநி யெய்துயிர்பொறிபுல
னடத்தவாவியுஞ் சடத்தனவாயிற்
பூட்டையிற்பூணி கூட்டல்பெறாதே
புலனைம்பொறியி னில்விடுமென்றனை
யஞ்சுமொருகாற் றுஞ்சாதறிதற்
கழிவென்றருச் செழுமலரிலைபலங்
கனிதருவதுபோ வினையவைவைர்து
மொன்றொன்றாக நின்றறிவுறுமெனி
லொன்றின்பயனனி யொன்றறியாதா

விதுவேயல்லது சுதமெனவிருசெவி
யிருகூற்றொருகாற் றெரியாத்தன்மைவர்
தெய்துமஞ்ஞிய மெய்யுயிர்ச்செயலுந்
தனக்கிலதொருவர்க் கெனத்தெளிகிலையே
நோக்குமுகவொளி நீக்காதானெனக்
கவருந்தன்மை முகுரம்போல
கொடுத்ததுகோடற் கடுத்துண்டன்றே
காட்டத்தங்கி கூட்டக்கூடு
மிந்தனத்தியற்கை வெந்தழலுங்கா
வுப்பளத்தடுத்த புற்பலாலங்கள்
சடத்தவேனுங் கொடுத்ததுகொள்ளுந்
தன்மையாயுண்டுனக் கின்மையதன்றே
யவமுறுகருவி சிவமயமாமெனக்
கூறினையாகம் வேறுருக்கவரா
தென்பதெனவைமுற் றுன்பந்துடைக்குந்
திருவருண்மருவ வுரியனவென்னி
லருளுறுமாயா விருளினதாங்கொல்
சத்தப்பரிச ரூபரசகந்த
யெத்திறத்தினதரு ளியம்புகவன்றியு
நிறைந்துநீயாய் நின்றனையேனு
மறைந்தைம்புலனும் வாராயென்றுங்
கரணமெல்லாங் கடந்தனையென்று
மரணமையைந்தி னப்புறத்தென்று
முன்னருட்டலைவர் பன்னினரெனவு
மினியவையொழிய வறிகுவதெவ்வா
றென்றநிற்கவிக் கொன்றியவின்பங்
கூறுதற்குமருட் பேறினையன்றே
யேகமுயிரறி வாகமொழிந்தனை
யிருபொருளொருமை மருவியதிலதே
யிவ்வகைகிடக்க மெய்வகைகேண்மதி.

27½

இ-ள், இன்றுனதுரையி னன்றி - இப்பொழுது நீபலவாக ச்சொல்லிவந்த பெத்தமுத்திநன்மையை விசாரிக்கு மிடத்து,— உயிரொளிர்தீபம்போலத் தாபந்தரின் - ஆன்மா பிரகாசத்தை யுடைய விளக்கைபோலத் தாவுதலைச்செய்யுமாயின், இருள்செறி யுந்தன்மையென் - அஞ்ஞானமாகிய விருள்பொருந்தினதன்மை யென்னைதான்,—அறிவிலதாகில் - அறிவில்லாமையாகில்,— ஒளியெனவுரைத்ததெளி வதற்கேதாம் - பிரகாசத்தைப் போல வென்றுசொன்னதிடப்பாடு அதெப்படியாகும் விசாரித்துப்பார், —சந்நிதியளவில் மன்னுஞ்செயலுடல் - ஆன்மாவினுடைய சந் நிதியிலே பொருந்தப்பட்ட பிராணவாயுவானது காரியப்படுத்த வுடல்காரியப்பட்டுவரும். அதென்போல வென்னில்,— காந்தம் போலவாய்ந்ததென்ற தன்மையுமுணராப் புன்மையதன்றே-கா ந்தத்தின்சந்நிதியிலே யிரும்புகாரியப்பட்டாற் போலவென்று நீ முன்னேசொன்ன தன்மையினையு மிப்போது விசாரியாத சிறு மையினையுமுடையது. அதன்றியும்.— உயிருடலியக்கிற் றுயில் பெறுங்காலைசெய்வதென் - பிராணவாயுவான துடலைக்காரியப்ப டுத்துமாயின் நித்திரைசெய்கிற வவதரத்துப் பிராணவாயுவுமொ க்க நிற்குமிடத்துடல் காரியப்படக்கண்டோ மில்லையே ஆகையா லான்மாவுடலைக் காரியப்படுத்துமதொழிந்து பிராணவாயுகாரிய ப்படுத்தமாட்டாது. ஆன்மாவவிகாரியா யிருப்பதொழிந் திவை யிற்றைக் காரியப்படுத்தமாட்டாதென்று நீசொல்லின்,— மனுறி யெய்துயிர் பொறிபுலனடத்த வாவியுஞ் சடத்தனவாயின் - மன முதலாகிய வந்தக்கரணங்கள் பொருந்தப்பட்ட பிராணவாயுவி ந்திரியங்கள் விடயங்களிவையெல்லாத்தையுங்காரியப் படுத்துதற் கான்மாவும் ஜடமாயிருக்குமாயின்,— பூட்டையிற்பூணி கூட்ட ல்பெறுதே-நீரிறைக்கிறபூட்டைபோலெனில் பூணியாகியவெருதி னலே பூட்டையினிடத்துண்டாகிய வவயவங்கள், காரியப்பட் டுவருகையால் நீசெயற்படுத்துகிறபூணியை யான்மாவிற்குவமை சொன்னது திருஷ்டாந்தவிரோதம், ஆகையா லீதத்தமன்று இ

தன்றியும்,...புலனைம்பொறியி னிலவிடுமென்றனை - சத்தாதிவி டயங்களைப் பஞ்சேந்திரியங்களானது பொருந்தியநுபவிக்கு மென்றுசொன்னாய்,—அஞ்சுமொருகாற்றுஞ் சாதறிதற்கழிவென்-சத்தாதிவிடயங்களைப் பஞ்சேந்திரியங்க ளநுபவிக்குமாயின் பஞ்சேந்திரியங்களு மெக்காலத்திலேயறியாம லொன்றறிந்தது மற்றநாலு மறியாலிருப்பதற்குக் குறைவென்;...தருச்செழுமல ரிலை பலங் கனிதருவதுபோல் - நல்லமரமான தொருகாலத்திலேயிலையையு மொருகாலத்திலே பூவையு மொரு காலத்திலே காயையு மொருகாலத்திலே பழத்தையுந்தோற்றுவித்து நின்றதன்மைபோல,—இனையவையைந்து மொன்றொன்றாக நின்றறிவுறுமெனில்-இந்தவிந்திரியங்களையு மொவ்வொருவிடயங்களாக வறியுமென்று சொல்லின்....ஒன்றின்பய னனியொன்றறியாதா லிதுவே யல்லது-ஒரிந்திரியத்தின்விடயத்தை மிகவுமோரிந்திரிய மறியாது; இதல்லாமலும்,—கதுமெனவிருசெயி யிருகூற்றொருகாற் றெரியாத்தன்மைவந்தெய்தும் - ஒரிந்திரியமாயிருக்கிற விரண்டு செவியிலுஞ்சடக்கென விரண்டுபேர்சத்த மொருகாலத்திலே சொல்லவொருவன் சொன்னதையறிந்து மொருவன்சொன்னதையறியாமலு மிருந்ததன்மைவந்து பொருந்துகையினாலே யந்த விந்திரியத்தின்றொழில்க ளதற்கின்றி யான்மாவிற்கானாற்போல,— மனாதியுமெய்யுயிர்ச்செயலுந் தனக்கில தொருவர்க்கெனத் தெளிகிலையே-அந்தக்கரணங்களுக்குஞ் சரீரத்திற்கும் பிராணவாயுவுக்குமுண்டானதொழில்களு மவையிற்றுக்கில்லை யான்மாவிற்கே யென்றறிவாயாக. எனவே யான்மாவவிகாரியல்ல விகாரியென்பதுகருத்து. (இஃதவன் பெத்தத்தைமறுத்தது.) (மேன்முத்தியை மறுக்கிறார்.) இதன்றியு நீமுத்தித்தன்மை சொல்லுகிறவிடத்திலே கண்ணாடியிலே பார்த்தவர்களுடைய முகத்தினொளி யந்தக் கண்ணாடியிலே தோன்றினாற்போலக் கத்தாவினுடைய திருவருளுமிந்தவான்மாவிலே பிரகாசிக்குமென்று சொன்னாய்,—நோக்குமுகவொளிநீக்கா தானெனக்கவருந் தன்மைமுகுரம்போல- கண்ணா

டியானது பார்த்தவர்களுடைய முகத்திலுண்டாகிய வொளியை த்தள்ளிவிடாமற் ருனேயென்னைத் தக்கதாகத் தன்னிடத்திலேக வசீகரித்துக்கொண்டு நின்ருர்போல,—கொடுத்ததுகோடற்கடு த்துண்டன்றே - கொடுத்தது கொள்ளுந்தன்மை யுனக்கடுக்கும தொன்றன்று. இதன்றியும்,—காட்டத்தங்கி கூட்டக்கூடுமிந்தன த்தியற்கை வெந்தழருங்கா - விறகினிடத்துண்டாகியநெருப்பைப் யான்மாவினேடுங் கூடிநிற்கிறவருளிற் குவமையாகச் சொல்லப் படுவது நெருப்புவிறகைச் சுட்டுப்போடாமற்கொண்டிருந்தாலா ம், அன்றி நெருப்புவிறகைச் சுட்டுப்போட்ட விகையினு லதத்த மன்று. இதன்றியும், உப்பளத்தடுத்த புற்பலாலங்கள் சடத்தவே னும் - அளத்திலேகூடின புல்லும்வைக்கோலும் ஜடமா யிருந்த தாயினும்,—கொடுத்தது கொள்ளுந்தன்மையுண்டு னக்கின்மைய தன்றே - அதுதற்சொரூபத்தைக் கொடுத்ததனுடைய சொரூப த்தை முன்னுருப்போலப் பெருந்தன்மையதற்குண்டு. உனக்கத னுடைய முறைமைதானுமில்லே. இதன்றியும்,— அவமுறுகருவி சிவமயமாமெனக்கூறினே - அஞ்ஞானங்களுக் கேதுவா யிருக்கி றகருவிகளைச் சிவரூபமென்றுன் மதத்திலேசொன்ஞய்,... யாகம் வேறுருக்கவராது - அதினந்தச் சரீரத்தோடுண்டாகிய வாசை நீ சொன்னதொழிந் திந்தச்சிவசொரூபஞ் சுத்தநின்மலமாயுமிந்தமா மாசொரூப மசுத்தமலமாயுமிருக்கையா லிதுவதுவாகாது,—என் பதெனவை முற்றுன்பந்துடைக்குந் திருவருண்மருவ வுரியனவெ ன்னில்- என்றுநீர்சொன்னதென்ன அந்தமாயா கருவிகடொன்று தொட்டுவருகிற பிறவித்துன்பத்தைநீக்கித் திருவருளேப் பொருந் தியதனுடைய சொரூபமாகைக் குரியதென்று நீசொல்லில்,...அ ருளுரு மாயாவிருளினதாங்கொல் - அப்பொழுதுதிருவருளு மா யையாகிய வஞ்ஞானமாகவேண்டும், (கொல்அசை) சத்தபரிசரூ பரச நறையெத்திற தினதருளியம்புக சத்தப்பரிசரூப ரகாசகந்த ங்களோடுங்கூடி யறிந்துவருகிற மாயாகருவிகளுக்குத் திருவரு ளெத்தனேதூரம் இதற்குத்தரமுண்டாகிற் சொல்வாயாக:...அன்

றியுநிறைந்து நீயாய்நின்றனையேனு மறைந்ததைம்புலனுய் வாரா யென்றுங் கரணமெல்லாங் கடந்தனையென்று மரணமையைந்தி னப்புறத்தென்று. முன்னருட்டலைவர் பன்னினரெனவு மினைய வையொழிய வறிகுவதெவ்வாறென்ற நிற்கலிக்கொன்றியவின்ப ங்கூறுதற்கும் - இதன்றியும் காளத்தியந்தாதி, "நிறைந்தெங்கு நீயேயாய் நின்றாலுமென்று, மறைந்தைம்புலன்காண வாராய்,— சிறந்த, கணியாருந்தண்சோலைக் காளத்தியாள்வாய், பணியாயே லென்னுண்பரிசு., என்றும். திருவாசகம். "கரணங்களெல்லாங் கடந்து நின்றகறைமிடற்றன். சரணங்களேசென்று சார்தலுமே தானெனக்கு மரணம்பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்த கருணைக்கடலுக்கே சென்றூதாய்கோத்தும்பி,, என்றும். தேவா ரத்திருப்பாட்டு, "பையஞ்சுடர்விடுநாகப் பள்ளிகொள்வா னுள த்தானுங், கையஞ்சுநான்குடையானைக் கால்விரலா லடர்த்தானு ங், பொய்யஞ்சிவாய்மைகள்பேசிப் புகழ்புரிந்தார்க்கருள் செய்யு மையஞ்சினப்புறத்தானு மாரூரமர்ந்தவம்மானே.,, என்றும் முற் காலத்திலே திருவருளைப்பெற்ற பெரியோர்களருளிச் செய்தார்க ளென்று நான்சொல்லவு மிந்திரியங்களைவிட்டா லிவனுடைய வறி வு ஜீவியாதாகையாலிந்த விந்திரியங்களன்றித் திருவருளையறியும் பகுதி யெப்படியென்றுகேட்கிற வுனக்குச்சொல்லுகிறது ஒருவ னுமொருத்தியுங் கூடியநுபவித்த வின்பத்தைத் தானநுபவியாத வலியாயுள்ளவனுக்குச் சொல்லுகிறதையொக்கும்,— அருட்பேறி னையன்றே-மாயைக்குள்ளே மயக்கப்பட்டுவருகிற பொருள்களை யறிகிறதுதானே பெருகக்கொண்டா யாகையாலிது வுத்தமன்று. இஃதன்றியும்,—ஏகமுயிரறிவாக மொழிந்தனை - அருளு மான் மாவுங் கூடினவிடத் திரண்டுமொன்றாய் விடுமென்றுசொன்னாய் —இருபொரு ளொருமை மருவியதிலதே - இரண்டுமுதல் கூடி யொருமுதலாய் நிற்குமென்பதுண்டாகாது. இவ்வகைகிடக்கமெ ய்வகைகேண்மதி–இங்ஙனம் பலவாகச்சொன்ன வத்தங்களைப் போட்டு நாம்சொல்லப்போகிற சத்தியத்தைப் புத்திபண்ணிக்கே ட்பாயாக. (மதி-அசை.) (கஉ)

சங்கிராந்தவாதி சங்கற்ப நிராகரண-முற்றிற்று.

ஈஸ்வரவவிகாரவாதிசங்கற்பம்

பஃறுளைக்குடத்தி னுள்விளக்கேய்ப்ப
வறிவுளதாகு முருவுருமுயிர்கள்
கண்ணோலோசையுங் கந்தமுங் கருத
வொண்ணுதென்னு முணர்வுடைமையினு
லவ்வப்புலன்கட் கவ்வப்பொறிகள்
செவ்விதினிறுவிச் சேர்ந்தவைநுகரு
மூலமலத்தின் பாகம்வந்தவழி
யிருடருமிற்புக் கொருபொருள்கவரத்
தீபம்வேண்டு மானவர்போல
மோகமாமலம் போகஞான
விளக்கரனருளாற் றுளக்கறப்பொருந்தி
நீர்நிழலனைய சீர்பெறுகடவுளைச்
சலமிலனுகிச் சார்ந்தவர்க்கென்று
மலமிகல்கு நாதனையணைந்து
பூழிவெம்மை பொருந்தாதயர்ந்த
நீழல்வாழு நினைவினர்போலத்
திருவடிநீழல் சேர்ந்து
கருவுறுதுயரங் களைந்திருந்திடுமே,

இ-ள். பஃறுளைக் குடத்திலுள் விளக்கேய்ப்ப வறிவுளதாகுமுருவுமுயிர்கள் - பலத்துவாரங்களையுடைய குடத்துக்குள்ளிருக்கிற விளக்கைப்போன்ற நவத்துவாரங்களை யுடைய சரீரத்திலே நிற்கிறவான்மாக்களு மறிவாயிருக்கும்,—கண்ணு லோசையுங்கந்தமுங் கருதவொண்ணு தென்னுமுணர்வுடைமையினுல்-கண்ணைக்கொண்டு ரூபத்தையறிவதொழிந்து சத்தபரிசகந்தங்களையறியவொண்ணு தென்கிறவறி விந்தவான்மாக்களுக்குள்ளதா யிரு

க்கையில்,—அவ்வப்புலன்கட் கவ்வப்பொறிகள் - இந்தவான்மா தனக்குக்கொள்ளவேண்டின விடயங்களுக்குற்ற வந்தவிந்திரியங்களை,—செவ்விதினிறுவிச் சேர்ந்தவைவறுகரும்-மாறுபாடறநிருத்தி யவையிற்றிலே பொருந்தப்பட்டுவருகிற விடயங்களைப் புசியாநிற்கும், (இதுபெத்தம்) (மேன்முத்தி.)மூலமலத்தின் பாசம் வந்துதவுழீஇ - இப்படிக்கன்மத்தைப் புசித்துவருமிடத்துவாணவமலநீங்கிப் பாகம்வந்தவிடத்து,—இருடருமிற்புக் கொரு பொள்கவர-இருட்டுவீட்டிலே விளக்கைமுன்னிட்டுக் கொண்டொருபதார்த்தத்தை யெடுக்கவேண்டினவிடத்து,—தீபம்வேண்டுமாணவர்போல - ஒருவிளக்கை முன்னிட்டுக்கொண்டு சென்றந்தப் பதார்த்தத்தை யெடுத்ததன்மைபோல மோகமாமலம்போக-அஞ்ஞானவிருளாகிய வாணவமலநீங்க,—ஞானவிளக் கரனருளாற் றுளக்கறப்பொருந்தி-ஞானமாகியதீபத்தைச் சிவனுடையவநுக்கிரகத்தாலே யசைவறப்பெற்று,—நீர் நிழலனைய சீர்பெறுகடவுளை - தண்ணீரைப்போலவு நிழலைப்போலவு மொருவரளவிலும் பக்ஷப்பிரதிபக்ஷ மின்றியிருக்கிற சிறப்பினையுடைய கத்தாவை,—சலமிலனுகிச் சார்ந்தவர்க்கென்றும் - அப்படிப்பக்ஷ மில்லாதவனுயிருக்கையிலேயுந் தன்னையடைந்தவர்களுக் கெப்பொழுதும் —நலமிக நல்கு நாதனையணைந்து - நன்மைப்பகுதிகளை மிகவுங் கொடுக்குஞ் சுவாமியைக்கூடி,—பூழிவெம்மை பொருந்தா துயர்ந்தநீழல் வாழுநினைவினர்போல - மத்தியாநத்திலே வழிநடந்தவர்களுக் கந்தவழியிலேயுண்டாகிய பொடிச்சூடு நீங்கத்தக்கதாகவுயர்ந்த மரத்தினிழலிலேவந்து பிரியப்பட்டிருக்கிற, நினைவையுடையவர்களைப்போல,—திருவடிநீழல்சேர்ந்து கருவுறுதுயரங்களைந்திருந்திடுமே-இந்தவான்மாவுங் கத்தாவினுடைய திருவடிநிழலைப்பொருந்தித் தனக்குண்டாகிய ஜநநதுக்கங்களை யெல்லாநீக்கிக் கொண்டிருக்கு மென்றறிவாயாக, (கரு)

ஈஸ்வரவிகாரவாதி சங்கற்ப முற்றிற்று,

——()——

ஈஶ்வர வவிகாரவாதி சங்கற்ப நிராகரணம்

இருந்தின் கேள்வி திருந்திடுமுயிர்க
ளறிவெனில்வாயிற் பொறிபுலனென்னை
மற்றவைபற்றி யுற்றறிந்திடுதலி
னறிவெனவழங்கு முயிரெனவுரைத்தல்
காணுங்கண்ணினன் கைகொடுதடவிப்
பூணும்பொருளின் பெயர்பலபுகற
லென்னுங்கிளவி தன்னொடுதகுமே
யவ்வப்புலன்கட் கவ்வப்பொறிகளைச்
செவ்விதினிறுவலி னறிவினைச்செப்பினை
யறிவிலாமைகண் டனமனைபுலற்குப்
பொறிகளேவலி னறிவொடுபொருந்தில்
கண்டதோர்பொறியாற் கொண்டிடவேண்டு
முதவியதொன்றாற் கதுமெனவியற்றின
ருண்டோவென்னிற் கண்டனமேனாட்
கடவுளிர்கடிமலர் முடுகியமதன
னங்கமநங்கந் தங்கிடக்கிடந்தது
வையின்றிரளிற் செய்யசிறுபொறி
மாட்டிமூட்டின தன்றேமீட்டுந்
தேனமர்தவிசி னான்முகனுச்சி
யறுத்ததுங்கருவி பொறுத்தோவன்றே
யீசனதியல்பு பேசுதறவிர்க
காழிமாநகர்க் கவுணியர்கடவுண்
ஞானமாகிய நற்பதிகங்க
ளெழுதுறுமன்பர்த மின்புறுமொழியாற்
களிறெனவணைந்த கன்மனப்புத்தன்
முருட்டுச்சிரமொன் றுருட்டினரன்றி

வாய்ந்தவாளொன் றேந்தினரிலரே
யென்றதுமிர்வாள் கொன்றதென்பதுபோற்
றனித்துணையருளாற் றணித்தனரென்ப
வாதலின்வாயி லளவினிலறிதலி
லேதமிலறிவுயிர்க் கெய்துதலிலதே
யிருட்குவிளக்கொன் றேந்தினர்போல
மருட்குஞான மன்னுதலுளதே
யென்றனைகருவிக ளியாவுமசேதனந்
துன்றியவுயிருந் துரியத்தன்மைய
ஞதலினந்த ரனைவருங்கூடித்
தீதறவருநெறி தெரியுமென்றற்றே
நீர்நிழலனைய சீர்பெறுகடவுளைச்
சேர்ந்தவர்க்கின்பம் வாய்ந்திடுமென்றனை
பாதவமென்றுஞ் சேதனமின்மையி
னிளைத்தோர்வம்மி னென்பதுந்துன்பம்
விளைத்தோர்தம்மில் வெறுப்புமொன்றிலதே
பொடித்திடுகொப்புள் வெடித்திடுபாதம்
மெய்யபூழியி னுள்ளுறவழுங்கி
யாற்றுதலின்றி யாறியங்கினர்முன்
ளூற்றிடுமென்று சொல்லவுமிலதா
லிவ்வகைகடவுட் கியம்புதறவறே
பாசஞானப் பழிவழியொழிக
வீசனதருள்வழியயம் புவன்கேண்மதி,

இ ள், இருந்துன்கேள்வி - இப்படியிருந்தது நீகேட்டகேள்வி நான்சொன்னதற்குக் குற்றமென்ன,—திருந்திடுமுயிர்களறிவெனில். வாயிற்பொறிபுலனென்னை - திருத்தமுண்டாகிய வான்மாக்கள் அறிவோடுங்கூடி யிருந்ததாமாயிற் சத்தாதி விடயங்களை யறிதற்கிந்திரியங்கள் வேண்டுவதில்லை, இந்த விந்திரியங்களைக் கொண்டறிகையினலே யான்மாவுக் கறிவில்லையென்பதவ

ன் கருத்து,—மற்றவைபற்றி யுற்றறிந்திடுதலின் - அந்தவிந்திரிய
ங்களை யான்மாபொருந்தி யொருவிடயங்களை யுற்றறிந்துவருகை
யினுலே,—அறிவெனவழங்கு முயிரெனவுரைத்தல் -ஆன்மாவை
யறிவென்று சொல்லப்படுமென்று நீசொல்லுகிறது,-கடணுங்கண்
ணினன் கைகொடுதடவிப்பூணும் பொருளின்பெயர் பல புகற
லென்னுங் கிளவிதன்னெடுதருமே-கண்ணிரண்டுங் கெறிகிறவ
ன்கண்ணைக்கொண்டு பதார்த்தங்களைக்கண்டு சொல்லாமற் கை
களைக்கொண்டுதடவி கைகளினுலே தட்டினபண்டங்களுடைய
பல்பெயர்களைச் சொன்னனென்கிற சொல்லோடொக்கும். ஆன்
மாவறிவாயிருக்கையிலே தானுயறியாம லிந்திரியங்களைக் கொ
ண்டறிந்ததென்று சொல்லுகிறது. இதன்றியும்,— அவ்வப்புலன்
கட் கவ்வப்பொறிகளைச் செவ்விதினிறுவலி னறிவெனச் செப்பி
னை-ஆன்மாவிற்கறிய வேண்டினவந்த விடயங்களுக்கேற்ற வந்த
விந்திரியங்களைச் செவ்வையிலே மாறுபாடற நிறுத்திக்கொண் ட
றிகையினுலே யான்மாவை யறிவென்று நீசொன்னய்,— அறிவி
லாமைகண்டனம் - இதுகொண்டே யான்மாவுக் கறிவில்லை யெ
ன்கிறதுகண்டோம்,—அனைபுலற்குப் பொறிகளேவலி னறி வொ
டுபொருந்தில் – தன்னேடுபொருந்த. வேண்டின விடயங்களுக்
கேற்ற விந்திரியங்களையேவிக் கொள்ளுகையினுலே யான்மாவறி
வோடுங் கூடியிருக்குமென்று நீசொல்லில்,— கண்டதோர்பொ
றியாற் கொண்டிடவேண்டும் - ஆன்மாவறிவேயாகி லிந்தவவத
ரத்திற்குக் கிட்டினதோ ரிந்திரியத்தைக்கொண்டுதனக்குவேண்
டினவிடயத்தைப் புசிக்கவேண்டும், அதில்லாதபடியாலே யான்
மாவறிவன்று. பின்னும்,—உதவியதொன்முற் கதுமென வியற்
றின ருண்டோவென்னில் - சோத்திரத்தைக் கொண்டு சத்தத்
தையறிவதொழிந்து யாதொன்றுகிட்டின விந்திரியங்களைக் கொ
ண்டு சடக்கெனவோர் தொழிலைச்செய்தவர்களு மிந்த பூமிக்குள்
ளே யுண்டோவென்னில், கண்டனம் - அப்படிக்காணப்பட்டது
ண்டு, அஃதெங்ஙனேயென்னில்,— மேனுட்கடவுளிற் கடிமலர்

முடுகிய மதனன் - முற்காலத்திலே கத்தாவினுடைய யோகத்தைத் தவிர்க்கவேண்டி மன்மதன் மணம்பொருந்தின புஷ்பபாணத்தைக்கொண்டு கிட்டினபோது,—அங்கமநங்கந் தங்கிடக்கிடந்தது - அவனுடைய சரீரமானது அசரீரமாகிப் பொருந்தத்தக்கதாகச் சாம்பராய்ப்போய்விட்டது,—வையின்றிரளிற் செய்ய இறுபொறிமாட்டி மூட்டினதன்றே - கண்கொண்டு பார்த்த தொழிந்தவன்மேலே வைக்கோற்றிரளையைக் குவித்துச்சிவந்த சிறிய நெருப்புப்பொறியைமாட்டி யூதியெரித்ததல்லவே,—மீட்டும் -இதன்றியும்,— தேனமர்தவிசி னன்முகனுச்சி யறுத்ததுங் கருவி பொருத்தோவன்றே - வண்டுகள்பொருந்திய தாமரைத்தவிசின் மேலேயிருக்கிற பிரமாவினுடைய நடுவிற்றலையை கைநகங்கொண்டு கிள்ளிப்போட்டத தொழிந்து ஒருவாட் கொண்டறுத்துப் போட்டதில்லை,—ஈசனதியல்பு பேசுதறவிர்க - நானுன்மாவுக்குச் சொல்ல நீ கத்தாவைக்கொண்டுவந்து சொல்லுவானேன் அதைவிட்டான்மாக்களிலே யுண்டாகிற்சொல்,...காழிமாநகர்க் கவுணியர்கடவுள் - சீர்காழியாகியபெரிய நகரிடத்துண்டாகிய கவுணிய கோத்திரத்திற்கெல்லாந் தலைவராகியசம்பந்தராலே,— ஞானமாகிய நற்பதிகங்க ளெழுதுறுமன்பர்த மின்புறுமொழியால் – அருளிச்செய்யப்பட்ட ஞானமாகிய நல்லதிருப்பதிகங்களை யெழுதப் பட்டவண்மையுடைய சம்பந்த சரணாலயருடைய வினிய வாக்கினால்,—களிறெனவணைந்த கன்மனப்புத்தன் முருட்டுச் சிரமொன்றுருட்டினரன்றி - மத்தயானையைப்போ லெதிர்த்துவந்த புத்தனுடைய மொட்டைத்தலையை யுருண்டுவிழத்தக்கதாகச் செய்ததல்லது,—வாய்ந்தவாளொன் றேந்தினரிலரே - கூர்மைபொருந்திய வாளை யெடுத்துக்கொண்டல்லவே, ஆகையாலே யான்மாக்கள்கண்டதோர்பொறியார் கொண்டிட வல்லார்களென்று சொன்னது,—என்றது மீர்வாள்கொன்றதென்பதுபோற் றனித்துணைமருளாற் றுணித்தரென்ப-ஈர்வாள்கொன்றதென்றால் அவ்வாள்கொன்றதாகாம லந்தவாளைக்கொண் டொருத்தன் கொன்றாற்போல

வொப்பில்லாத கத்தாவினுடைய வநுக்கிரகத்தினாலே புத்தனு டைய தலையைத்துண்டித்துப் போட்டார்களென்று பெரியோர்க ள்சொல்லுவார்கள் - ஆதலின் வாயிலளவினிலறிதலி லேதமிலறி வுயிர்க்கெய்துதலிலதே - ஆகையாலிந்த விந்திரியங்களுடையவெ ல்லேயிலே நின்றறிந்துவருகையினாலே குற்றமற்றிருக்கிறவறிவா ன்மாவிற்குண்டாகாது, திருவருளறிவிக்க வேண்டும். (இது பெத்தத்தைமறுத்தது.) (மேன்முத்தியை மறுக்கிறார்.)— இருட் கு விளக்கொன்றேந்தினர்போல - இருளினிடத்திலே யொருப ண்டத்தை யெடுக்கவேண்டினவர்கள் கையிலே விளக்கைப்பிடி த்துக்கொண்டந்தப் பண்டத்தை யெடுத்தாற்போல,— மருட்கு ஞானமன்னுதலுளதே யென்றனை - இவனுடைய வஞ்ஞானமா கிய விருணீங்குகைக்கு ஞானவிளக்குநிலைபெற்று நிற்கத்தக்கதா கக் கத்தாவநுக்கிரகஞ் செய்யுமென்று நீசொன்னாய்,— கருவிக ளியாவு மசேதனந்துன்றியவுயிருந் துரியத்தன்மையன் - தத்துவ ங்கள்முப்பத்தாறும் ஜடம் ஆணவமலத்திலே செறியப்பட்ட வா ன்மாவுந் துரியத்திலே நிற்பானொருத்தன்,- ஆதலி னந்தரனைவ ருங்கூடித் தீதறவருநெறி தெரியுமன்றற்றே- ஆகையால் இதுத ன்னிற்கூடித் திருவருளைப்பெற்றது தமக்குக்காட்டாகச் சிவனை ப்பெறுமென்றது அநேகங்குருடர் தம்மிற்கூடிக் குற்ற மற்றிருக் கிறதொருபெரிய வழியைக்கண்டந்த வழியேபோயோ ரூரிலே சென்றார்களென்று சொல்லுதற்கொக்கும், இதன்றியும்,— நீர்நி ழலனைய சீர்பெறுகடவுளைச் சேர்ந்தவர்க் கின்பம்வாய்ந்திடு மென் றனை- நீரைப்போலவு நிழலைப்போலவும்பக்ஷப்பிரதிபக்ஷமில்லா மலிருக்கிற சிறப்பினையுடைய கத்தா தன்னைவந்துகூடின பக்கு வான்மாக்களுக்குப் பேரின்பமுண்டாக வநுக்கிரகஞ்செய்வனெ ன்றுநீசொன்னாய்,...பாதவமென்றுஞ் சேதனமின்மையின் - மர மானதெப்பொழுதும் அறிவில்லாமல் ஜடமாயிருக்கையினாலே, —இளைத்தோர் வம்மினென்பதுந் துன்பம்விளைத்தோர் தம்மில் வெறுப்புமொன்றிலதே - வெயிலினாலே யிளைத்துப்போகிறவர்க

ஊ வாருங்களென்று பிரியபட்டழைத்ததுந் தன்னை வெட்டிட போட்டவர்கள்பேரிலே யகிதப்படுத்துவது மில்லை. இதன்றியும் —பொடித்திடு கொப்புள் வெடித்திடுபோதம் வெய்யபூமியி னுள்ளுறவழுங்கி யாற்றுதலின்றி - பொடியினாலே யுள்ளங்காலிலே கொப்பளங்கொண்டதுடைந்து சுடுகிறபுழுதியுள்ளே பட்டழுந்தியதனாலே யாற்றமாட்டாமல்,—ஆறியங்கினர்முன்றேற்றிடுமென்றுசொல்ல வுமிலதால் - வழிநடந்துவருகிறவர்கள் முன்னேமரமானதுசென்றுதோன்றி யவர்கள் விதனத்தைத்தீர்த்ததென்கிற சொல்லு மதற்கில்லாதபடியாலே,—இவ்வகை கடவுடக்கியப்புதறவறே - நீருநிழலும்போலுமென்கிற அவிகாரவாதங்கத்தாவிற்குநீசொன்னது மிகவும்பழுதாம். ஆதலால் —பாசஞானப் பழிவழியொழிக வீசனதருள்வழி யியம்புவன் கேண்மதி - இனி சரீரசம்பந்தமுநீங்காமற் கத்தாவையும் அவிகாரவாதஞ்சொன்ன குற்றத்தையுமுடைத்தாய் முத்திநெறியைவிட்டுக் கத்தாவினுடைய திருவருளின்வழி சொல்லுகிறேன் புத்திபண்ணிக் கேட்பாயாக (மதி - அசை.) (கச)

ஈஸ்வரவவிகாரவாதிசங்கற்பநிராகரண-முற்றிற்று.

——()——

நிமித்தகாரண பரிபூரணமவாதி சங்கற்பம்.

புவனமியாவையும் புனிதனதுருவாஞ்
சிவமுஞ்சத்தியு மெனத்தெளியவற்று
ளசேதநமென்றொன் றறைதற்கிலதது
சேதனனுகர்பொரு ளிரண்டுமோர்திறத்தே
யிதுவெனுமொன்றை யதுவாய்ப்படுத்துப்
பொதுமையினிற்கும் போதமென்றறிக
பொற்பணிப்பேதம் புரைவழியொருவழி
நற்பொனிற்றிகழ்வென நயப்பதொன்றன்று

லாவதுமாகா தொழிவதுமெனுமிப்
பாவகமுண்மை பாராதோர்க்கே
பாராதோரெனம் பல்லுயிர்பகர்தலி
னாராய்ந்துணைக்கி னவைபிறவல்ல
பலபலபேத மிலவென் போருமில்
கண்ணினதொளியைக் கண்ணினதெனிலது
திண்ணியவிருளிற் செறிபொருடெரித்தனு
மின்மைமின்மினி யெனவிருகண்மணித்
தன்மைதானுந் தாவிலததனாற்
கண்ணினதுருவு மதிற்கதிரொளியு
நண்ணருஞ்சத்தி சத்தர்கணடிப்பே
யுலகேழெனத்திசை பத்தெனவொருவன்
பலவாய்நின்ற படியிதுவென்று
மூனுயிரா யுணர்வாயென்று
மானக்கண்ணே மணியேயென்றுந்
தாமேதானாய் செய்தனரென்று
நாமேசிவமாய் நண்ணினமென்றுங்
காயாய்ப்பழமாய்ச் சுவையாய்நுகர்வு
மோயாதுண்போன் முனேயென்று
மறிவோன்முனு மறிவிப்போனு
மறிவாயறிகின் றோனுமறிவுறு
மெய்ப்பொருடானும் வியந்திதுவெனப்படு
மப்பொருளியாவு மவனேயென்றுந்
தாய்தலைப்பட்டங் கொன்றாய்த்தென்று
மேதமதறநான் கெட்டேனென்று
மின்னுமின்னு மிறையோனளித்தவை
பன்னிலெண்ணரும் பான்மைத்தாதலிற்
றருபொருள்கொள்பொரு டருவோன்கொள்வோ
னெருபொருளிவ்விய லுவப்பெனவுணர்க

நுகர்பொருள்சத்தி நுகர்வோன்சத்தனென்
றிகலறமுணர்வுந் தெய்தலரிதே
நானவனெனுமிது நவைவழிசல்வழி
தானவனகை யிதுசாயுச்சியம்
மித்திரன்றெளிய வுய்த்திடுமளவு
மிபாதொருவகையி னீதியதாகத்
தானறிவழியே தலைநின்றென்று
மூனுயிர்சிவத்தி லொடுங்கிடநடத்தி
மூடுமுழுமலம் வீடுங்காலக்
கருவிகளளவிற் புரிதருமறிவு
சாக்கிரங்கனவு நீக்கமில்சுழுனை
துரியமென்றவை பயிறருமறிவு
துரியதீதந் திரியாத்தன்மையி
விறையருளுதவுங் கறையறமாறி
யறிவேயாகும் பிறியாக்கருவிக
ணிறைமுதலவத்தையி லறிவிலதாகத்
துரியாதீதத் தோற்றந்
திரியாததுநற் சிவகதித்திறனே.

(இ-ள்) புவனமியாவையும் புனிதனதுருவாஞ் சிவமுஞ்சத்தியுமெனத்தெளி - இந்தப்பிரபஞ்சமெல்லாஞ் சிவசொரூபமாயிருக்கும் இதிலருவமாயிருக்கிறது சிவமு முருவமாயிருக்கிறது சத்தியுமென்று தெளிவாயாக,—அவற்று ளசேதநமென் றொன்றறைதற்கிலது - அந்தவிரண்டுவகைக்குள்ளு மசேதமாகச் சொல்லப்பட்டதொரு பொருளுமில்லை,...அதுசேதநனுகர் பொழுதிரண்டுமோர்திறத்தே - அரூபமாயறிவாயிருக்கிற வனநுபவிக்குமிடத்தந்த விரண்டுபகுதியு மொன்றாயிருக்கும்.... இதுவெனுமொன்றை யதுவாய்ப்படுத்துப் பொதுமையினிற்கும் போதமென்றறிக - இதுவென்றுசுட்டப்பட்ட தொருவிடயத்தையநுபவிக்குமிடத் தந்தவிடயந்தானேயாய் அந்தவறிவென்றும், விடயமென்று

மிரண்டாகாமற் பொதுமையிலே நிற்குமென்றறிவாயாக. இதன்றியும்,...பொற்பணிப்பேதம் புரைவழியொருவழி - பொன்னொன்ருயிருக்கையிலே பொன்னுக்கும் பணிக்கும் பின்னஞ்சொன்னுற்போலவறிவிக்கும் பிரபஞ்சத்திற்குமொருபக்ஷ மிப்படியுஞ் சொல்லலாம்.—நற்பொனிற்றிகழ்வென நயப்பதொன்றன்ருல்-நல்லபொன்னினுண்டாகிய மாற்றுப்பணியிடத்துங்காண்கையாற் பொன்னும்பணியுமொரு தன்மையாகவிருக்கப் பொன்னையும் பணியையு மறிவிக்கும் பிரபஞ்சத்திற்கு முவமையாகச் சொன்னதென்னதானென்று கேட்கில்,—ஆவது மாகாதொழிவது வெனு மிப்பாவகமுண்மை பாராதோர்க்கே-இந்தவுவமையாம்பகுதி யிந்தவுவமையாகாப் பகுதியென்று சொல்லுகிற விந்தப்பாவக முண்மையைத் தரிசியாதவர்களுக்காயிருக்கும், உண்மைபார்த்தவர்களென்றும் பாராதவர்களென்றுஞ் சொன்னதுகொண்டே யறிவிலே பின்னமுண்டென்னில்,— பாராதோரெனப் பல்லுயிர்பகர்தலின் - உண்மையைத் தரிசியாதவர்களென்று நான் சொன்னதுகொண்டே நீயான்மாக்களைத் தனித்தனியே யொருமுதலென்றசொல்லில் பலவாகச் சொல்லப்பட்டிருக்கிற வான்மாக்கள்,—ஆராய்ந்துரைக்கினவை பிறவல்ல-அத்தன்மையை விசாரித்துச் சொல்லுமிடத் தந்தவான்மாக்கள் சிவனுக்கு வேருயிருப்பதொன்றன்று எல்லாஞ்சிவமுதலேயென்றறி, இதன்றி,—பலபல பேதமிலவென்போருமில் - சிவமுமான்மாக்களும் பிரபஞ்சமுந்தனித்தனி யொவ்வொருமுதலென்று பலபேதங்களாகச் சொல்லுவார்களுமுண்டு அதுநித்தியமன்று, கண்ணென்ருெருமுதல் கண்டு வருமாபோல வான்மாவென்ருெருமுதல் தனித்தறிந்து வருமிடத்திதனையில்லை யென்பானேனென்னில்,— கண்ணின தொளியைக் கண்ணினதெனிலது-கண்ணென்றைக்கண்டுவருகிறகாக்ஷியந்தகண்ணுக் குண்டாயினபடிக் காண்கிறகண்,—திண்ணியவிருளிற் செறிபொருடெரித்தலுமின்மை-நெருங்கியிருக்கிறவிருளுக்குள்ளே பொருந்தியிருக்கிற பொருளின்ன பொருளென் ருென்

றைக்காணும்ப்குதி யுண்டோவில்லையோ. இதன்றியு,... மின்மி
னியென விருகண்மணித்தன்மை தானுந்தாவிலது -ஒருமின்மினி
யிருளை நீக்கினமரியாதியிரண்டு கண்மணியுங்கூடி யிருளை நீக்கிக்
கண்டோமில்லை,... அதனாற் கண்ணினதுருவு மதிற்கதி ரொளி
யு கண்ணருஞ் சத்திசத்தர்கண்டிப்பே - கண்ணுடையவடிவு மத
னிடத்தாதித்தப் பிரகாசத்தாலுண்டாகிய காக்ஷியுமிவையெல்லா
மனதினாலே யெட்டுதற்கரிய சிவசத்திகளுடைய நாடகமென்றறி
வாயாக. ஈதெங்கே காணப்பட்டதென்னில்.—உலகேழெனத்தி
சைபத்தென வொருவன்பலவாய்நின்ற படியிதுவென்றும் - திரு
வாசகத்தில். "நிலநீர்நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன் பு
லனாயமைந் தததனெண்வகையாய்ப் புணர்ந்துநின்றா, னுலகே
ழெனத்திசை தெனத்தானொருவனுமே, பல்வாகிநின்ற வாதோ
ணோக்கமாடாமோ, என்றும்....ஊனாயுயிரா யுணர்வாயென்றும் -
தேவாரத்தில். "ஊனாகி யுயிராகியதனுணின்ற வுணர்வாகிப்பி
றவனைத்து நீயேநின்றாய், நானேதுமறியாமே யென்னுள்வந்துந
ல்லனவுந் தீயனவுங்காட்டாநின்றாய், தேனாருங்கொன்றையனே
நின்றியூராய் திருவானைக்காவி லுறைசிவனேஞான, மானாய் நின்
பொற்பாதமடையப் பெற்றாலல்ல கண்டங்கொண் டடியேனெ
ன்செய்கேனே., என்றும்,—மானக்கண்மணியே யென்றும்-திரு
வாவடுதுறை தேவாரத்தில். "திருவேயென் செல்வமேதேனே
வானோர்செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற்சோதிமிக்க, வுருவேயெ
ன்னுறவேயென்னூனே யூனின்னுள்ளமே யுள்ளத்தினுள்ளேநின்
ற, கருவேயென்கற்பகமே கண்ணேகண்ணிற் கருமணியே மணி
யாடு பாவாய்காவா, யருவாயவல்வினை நோயடையாவண்ணமாவ
டுதண்டுறை யுறையுமமரரேறே. ;. என்றும்,...தாமேதானாய் செ
ய்தனரென்றும் - திருக்களிற்றுப்படியில். "பத்திப்போர் வித்திட்
டுப்பரந்த வைம்புலன்கள். என்னும் திருத்தாளச்சதியில், "தா
மேதானாகச்செயுமவன்., என்றும்,— நாமேசிவமாய் நண்ணின
மென்றும்- திருவாசகத்தில், "அவமாய தேவரவகதியி லழுந்தா
மே,, என்கிறதிருப்பாட்டில் "நாமொழிந்துசிவமான,, என்றும்;

—காயாய்ப்பழமாய்ச் சுவையாய் நுகர்வுமோயாதுஞ் போன்று
னேயென்றும் - தேவாரத்தில். "தீயாகி நீராகித் திண்மையாகி,,
திருப்பாட்டில் "காயாகிப்பழமாகிப் பழத்திினின்ற விரதங்களு
கர்வானுந்தானேயாகி.,, என்றும்,—அறிவோன்றானு மறிவிப்
போனு மறிவாயறிகின்றோனு மறிவுறுமெய்ப்பொருடானும் விய
ந்திதுவெனப்படு மப்பொருளியாவு மவனேயென்றும்—அந்தாதி
யில் அம்மைவாக்கு. "அறிவானுந்தானே யறிவிப்பான்றானேய
றி வாகின்றான் றானே - யறிகின்ற: மெய்ப்பொருளுந்தானே விரி
சுடர்ப்பாராகாயம், அப்பொருளுந்தானேயவன்.,, என்றும்,—தா
ய்தலைப்பட்டங் கொன்றாய்த்தென்றும்-திருவிசைப்பாவில். "மோ
தலைப்பட்டகடல்.,, என்னும்திருப்பாட்டில், "தாய்தலைப் பட்ட
ங்குருகியொன்றாய்.,, என்றும்,—ஏதமதறநான் கெட்டேனென்
றும் - திருவாசகத்தில், "வான்கெட்டுமாருதம்.,, என்னும் திருப்
பாட்டில், நான்கெட்டேன்,, என்றும்,—இன்னு மின்னுமிறை
யோனளித்தவை பன்னிலெண்ணரும் பான்மைத்து - முதலே
சொல்லிவந்த திருவாக்குகளன்றிபின்னமு மேலுமநுக்கிரகம்பெ
ற்றதம்பிரான்க ளருளிச்செய்த செயல்களைச்சொல்லுமிடத்தெண்
ணிறந்த பகுதியினையுடையது,— ஆதலிற் றருபொருள் கொள்
பொருடருவோன்கொள்வோ னொருபொரு ளிவ்விய லுவப்பெ
னவுணர்க - ஆகையாலே யொருவனொருத்தனுக்குக் கொடுக்கிற
பொருள் தான்கொள்கிறபொரு ளொருபொருளினைக் கொடுக்கி
றவ னந்தப்பொருளைக் கொள்கிறவ னெல்லாமொருபொருளாயி
ருக்கு மிந்தமுறையுள்ளதாகிய வத்தமென்றறிந்து பிரியப் படுவா
யாக, ஆகையால்,—நுகர்பொருள் சத்தி நுகர்வோன் சத்தனென்
றிகலறுமுணர்வு வந்தெய்துத லரிதே - இதனுற்புசிக்கப்பட் டிரு
க்கிற சத்தாதிவிடயங்களு மந்தவிடயங்களைப் புசிக்கிறவிவனுஞ்ச
த்திசிவமாகிய சைதன்னியம் இவையிரண்டும் வேறல்ல வென்று
மாறுபாடறவறிகிற வறிவொருவனுக் குண்டாகிறது மிகவுமரிது.
(இதுபெத்தம்,) (மேன்முத்தி) நானவனெனுமிது நவைவழி-ஆ

ன்மாவுந்தனியே யொருமுதல் சிவமுந்தனியே யொருமுதலாமென்றிவ்வனந் துவிதபாவகமாகச் சங்கற்பித்துக்கொண்டு நிற்கிறது குற்றத்தையுடைத்தாகிய வழியாயிருக்கும்,... நல்வழி தானவனுகையிது சாயுச்சியம் - நல்வழியானது தானொருமுதலறச் சிவமுதலேயாய் நின்றுவருகைச் சாயுச்சியமென்று சொல்லப்படும்— இத்திறன் றெளியவுயர்த்திமௌவும்-இப்படியவனுக் குண்டாகத் தக்கதாக விவன்போதஞ்செலுத்துமளவும், — யாதொருவகையினீதியதாகத் தானறிவழியே தலைநின்று - சஞ்சாரத்தோடுங்கூடியிருந்தவன் அவற்றைவிட்டுத் தானின்றது நீதியாக விதுதமக்கு முத்திக்குவழியென்று தன்னுடைய போதத்துக்குத் தோன்றின வழியிலே தலைநின்று,—என்று மூனுயிர் சிவத்தி லொடுங்கிடநடத்தி - கனவினுநனவினு மித்தவுடம்பையுமுயிரையுஞ் சிவத்திற்குள்ளே பொருந்தத்தக்கதாகச்செலுத்தி,—மூடுமுழுமலம் வீடுங்காலை-ஒன்றையுமறியவொட்டாமற்பொருந்திக் கொண்டுநிற்கிறவாணவமல நீங்குமவதரத்து,—கருவிகளளவிற் புரிதருமறிவுசாக்கிரங் கனவு நீக்கமில்சுழுனை துரியமென்றவைபயிறருமறிவு - சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியமென்றுசொல்லப்பட்ட நாலவதரத்திலு மறிகிறவவதரம் அறிகருவிகளிந்தவவத்தைகடோறு மேற்றக்குறைச்சல்களாக நிற்கிறதாகவிருக்கும். ஆகையால் இந்தக்கருவிகளெல்லாங்கழன் றொன்றுமறியாமற்கிடக்கிற வவதரந் துரியாதீதம், (இதுகேவலம்)— துரியாதீதந் திரியாத்தன்மையிலிறையருளுந்தவும் - இந்தத்துரியாதீதத்தை விட்டுநீங்காமனிற்கிறவவதரத்திலேகத்தாவினுடைய திருவருளானது கருவிகளைகூட்டியிவனுடையபெத்தத்தைஜீவிக்கப்பண்ணும்பொழுது,—நறயறமாறியறிவேயாகும் ஆணவமல நீங்கிகருவிகளோடுங்கூடியறிவாகிநிற்குநீ (இதுசகலம்(மேற்சுத்தாவத்தை,)—பிறியாக்கருவிகளிறை முதலவத்தையில் - இவனைவிட்டுநீங்காமனிற்கிற கருவி முப்பத்தாறும் நிறைந்துநிற்கிற சாக்கிராவத்தையிலே,—அறிவிலதாகத் துரியாதீதத்தோற்றந்துரியாதநற்சிவதத்திறனே-எல்

லாக்கருவிகளுங்கழன்றிருக்கிற துரியாதீதந்தோன்றினவிடத் தந்தவவதா ரீங்காமனில்லை பெற்றுநிற்கிறதே யிவனுடையசிவகதி, எ-று. ()

நிமித்தகாரண பரிணாமவாதி சங்கற்ப-முற்றிற்று.

நிமித்தகாரண பரிணாமவாதி நிராகரணம்.

திறம்பெறநீயிங் கறைந்தமைகருதிற்
புவனமியாவையும புனிதனதருவெனி
லவன்முதற்காரண மன்றுமென்னி
னிமித்தகாரண நிகழ்த்துகவென்னி
யவனேகாரண மனைத்துமென்றறைந்தனை
மண்டனிக்குலாலன் றண்டசக்கராதி
காரணமூன்று மோர்பேரணைந்த
தித்தாரணிதனிற் கண்டதுசாற்றுக
வத்தனியற்று மித்தொழில்பிறர்க்கோ
தனக்கோவீணே வெனக்கீதியம்புக
வீணெனிற்பித்தர் மாண்பறுந்தொழில்போற்
றலைமையுமறிவு மிலதெனவிகழ்வர்
தனக்கெனிலவ்ஃதுமு னிற்பதொன்றன்றே
தன்போலறிஞருந் தலைவருமிலரான்
மின்போனிலையை வேண்டலும்பழுதே
பிறர்க்கெனிற்பிறரும் பிறர்க்காம்பொருளும்
பொருட்கமைகருவியு மதற்குபாதாநமுஞ்
செய்கையுமென்றே ரைவகைத்தாநெடு
மாறுச்சைவர் கூறுரென்று
ளிச்சித்தாந்த மவசித்தாந்த
மென்சித்தான்ற வசித்தைமற்றீறு

நசித்திலதென்னி லசித்ததென்னுல்கில்
உலகாயிதனும் பூதக்கூட்டஞ்
சலமேற்கொப்புட் டகுமெனச்சாற்றினன்
றியகருமச் சினர்சாவகர்பிறர்
ஞேயமில்லென நிகழ்த்தினரிலரே
காண்டல்விரோத நிற்பிறர்கணித்தில
ரீண்டுனெதுரைக்குமற் றியார்கரியுடலுஞ்
சித்தோசித்தின் சேர்வாற்சித்தெனிற்
கடப்டாதியுமுடற் கட்சிதைவென்
தாபரவுயிற்போற் றனுவொழிந்திவற்றின்
மேவியவுணர்வு விரவிடுமென்னிற்
சடத்துயிர்போலெனச் சாற்றினையாகலி
னுடற்குயிரிறையை யொழிந்துண்டன்றே
தருதிட்டாந்தமுந் தாட்டாந்திகமு
மொருபொருளாகி லுவமைபெறுதே
யொன்றேயாகி லுடற்கிறைதாபரத்
தொன்றியநிலையில் விசேடமென்னுரைக்க
பூதச்சேர்வைப் பேதமென்றறையிற்
சேர்வைப்பேத மென்கொடுசெப்புக
கருமத்தளவில் வருமெனிற்பித்த
ருரையிற்றிகழு முணர்வொழிந்தனையே
கருமஞ்செய்வோன் கடவுளன்றுடலு
மருவிநின்றிருவினை வளராநுகரா
கடவுளுமுடலின் கண்படறஞ்ச
விடர்நல்முறாத விறங்குதலேறுத
லெவ்வகையேனுஞ் செய்கையின்முதலும்
பலகலையுலகி னிலவுதலானு
மெண்ணருட்பொருளு மிரவியுமொழியக்
கண்ணெனவொன்று காண்கையிஞலும்

பாசப்பகுதியு மீசனுமொழியப்
பசுவுமுண்டென் றிசையவேண்டின்றே
யிதுவெனுமொன்றை யதுவாய்ப்படுத்துப்
பொதுமையினிற்கு மாயையின்பொற்பெனப்
பொற்பணியாவும் பொன்னாந்தன்மையி
னிட்களசகளத் திருவுருநிலையு
மீசனேயெனப் பேசுவரன்றி
யருவுருவாகி வருமுலகென்னி
லனைத்துமாயை யெனத்தெளிகிலையே
யாவதுமாகா தொழிவதுமிலதெனு
பாவகமுலகா யிதனதுபான்மை
கட்கொலைவெகுளி காமங்களவுக
ளுட்படுமிவைவிட மொழியாதாரிலர்
சோமபானஞ் சுராபானங்க
ளாமெனமறைக ளார்செவிப்பறைந்தன
மறையோன்புலைச்சியை மருவுமென்பது
முறையோவெனிலது புனைமொழியென்னிற்
சாதிபேத நீதிநீதவறினு
மேதியையேறு விழையாவிரும்புங்
கண்ணினதுருவு மதிற்கதிரொளியு
நண்ணருஞ்சத்தி நாடகமெனிலதற்
கேதுவும்பயனு மோதவேண்டு
நின்மொழிவிரோதமு நீடுலகியற்கையுந்
தன்மசாத்திரமுஞ் சகலமுமெஞ்செயு
முலகேழெனவிறை பலவாந்தன்மை
கடமொடுசார்வங் கலசமாதிக
ளடலுறுகுயவ னாயினனென்றாற்
றானேயாகா வவைதானாகா
னாயினனென்ப தாக்கினனெனவே

யானாமென்ப தனைத்துமவ்வகை
தானாகாமையைச் சாற்றிடுமென்க
தாமேயெனுமித் தனியேகார
மழிந்திலரதுவே யாய்த்தில்லாதுவிட்
டொழிந்திலர்பிரிவில ரெனுமிவையுணர்த்துங்
காயும்பழமுஞ் சுவையுநுகர்வ
தாயவன்றானு மவன்முதற்றென்னு
மகிலமுந்தெளிய வறிவோன்றானு
மகிலமுமறிஞரை யறிவிப்போனு
மறிஞர்க்கறிவா யறிகின்றோனு
மறிவிற்கறிபொரு ளாவோன்றானு
மகிலமுமேனி யானவனென்னுந்
தருபொருள்கொள்பொரு டருவோன்கொள்வோ
னொருபொருளாயி னுவப்புண்டென்க
நுகர்வோன்றனக்கு நுகர்பொருள்வேண்டிற்
றிகலறக்கிடையா திருந்ததெனிரையமும்
வேண்டாராயினு மெய்யுறவியாதிக
ளீண்டாதொழியா திறைக்கிவையீடல
சத்தியுஞ்சிவமுந் தாமேநுகருமென்
றித்திறனுணர்வுந் தெய்துவதெவர்க்கோ
தமக்கேயென்னிற் றாமுணராமையு
மமைப்பறவுணர்தலு மவர்க்கடைவன்றே
நானுமவனு நவையுநலனுந்
தானவனாகையு நின்சாதனத்தில்
சகயோகத்தைச் சாயுச்சியமெனப்
பகர்வதுபதிபசு பாசத்தவர்க்கே
யாதொருவகையென வோதியதிறைநூல்
சொன்னவற்றொன்றன் றென்னில்வீடெளிதே
தானறிவழியே தலைப்பொருள்பிடித்து

மேனிகழ்பலமும் வீடளித்திடுமே
நிலையாக்கருவியை நிலையாக்கருதிப்
புலைபாடுதலு முலகாயிதன்பொருள்
குட்டியமின்றிநற் கோலமெழுதாத
விட்டமதாயிற் கருவியுமிடங்களுங்
கருத்துறவுரைக்கத் தெரித்திடுமெதித்
தறிவொன்றில்லோர்க் கிறையருளுதவுதல்
பிறிவறிவரியச் செறியிருளிடத்தோ
ரந்தகர்காண வந்தோரெம்மை
நீவிருங்காண வேணுமென்றுங்
கெடுத்தோர்தீபங் கொடுத்ததைபொக்கு
மிச்செயற்கிறைவன் கொச்சயனன்றே
கருவிவசத்திற் றெரிவறக்காண
வேண்டுனரிலரா லீண்டறிவியாவுஞ்
சிவமேயென்று செப்பினையவமுறு
பொறிபுலனறியா வறிவதுபிரம
மென்றோர்க்குன்போ லிடர்ப்படலிலதே
யேற்றங்கருவி யிருபதோடிரண்டும்
போற்றுமைந்தவத்தையும் புகறிரிமலமு
மீசனுமுயிரும் பேசினையஃதொழிற்
றொன்றேயாகு மென்றநின்னியல்பு
தாயர்மனைவியர் தாதியர்தவ்வைய
ராயவரெவரையு மோர்மையிற்காணுங்
கோகழிதூர்த்தர் கொடுந்தொழிறகுமே
யாகமற்றத னருணிலைதன்னிலை
யேகநாயக னுகியவிறைநிலை
நாசயில்பாசம் வீசியவியனிலை
யினையவையொன்று நினைவினுமின்றி
யுண்டெனுமுணர்விற் கண்டதுசுருதி

விழக்கெனும்புலன்வழி யொழுக்கமுமதுவாக்
கொண்டபெண்டையி லெண்டருமடங்கு
வந்தவர்செய்த தந்தையையன்றே
புன்மைகணீங்க வுண்மைகேண்மதி,

(இ-ள்,) திறம்பெற நீ யிங்கறைந்தமை கருதின்-நீ நன்றாக விவ்விடத்திற் பெத்தமுத்திகளைச் சொன்னவையிற்றை விசாரிக்குமளவி லெப்படியிருந்தது. இதற்குக்குற்றமென்ன,—புவனமியாவையும் புனிதனதுருவெனில் - பிரபஞ்சமாகக் காணப்பட்டிருக்கிறதெல்லாங் கத்தாவினுடைய சொரூபமென்று நீசொல்வில்,—அவன்முதற்காரணம் - விசுவாதீதனாயுள்ள வந்தச்சிவன் இந்தப்பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாக வேண்டும்,— அன்றாமென்னில்-அவன்முதற்காரணமல்ல வென்றுநீசொல்லில்,— நிமித்தகாரண நிகழ்த்துகவென் - அவனை நிமித்தகாரணமென்றுசொல்லென்று நான்சொல்ல,...நீயவனேகாரணமனைத்துமென்றறைந்தனை - நீபின்னையு மந்தவிசுவாதீதனாயுள்ள சிவன்றானே நிமித்தகாரணமுந் துணைக் காரணமு முதற்காரணமு மெல்லாமென்றுசொன்னாய்,...மண்டனிக்குலாலன் றண்டசக்கராதி காரணமூன்றும் - மண்ணாகியமுதற்காரணமு மொப்பில்லாத குயவனாகிய நிமித்தகாரணமு மவனுக்குக் கருவியென்றுசொல்லப்பட்டதண்டசக்கரமாதியாகிய துணைக்காரணமு மிவைமூன்றும் மூன்றுகாரணமாயிருப்பதொழிந்து,—ஓர்பேரணைந்த தித்தாரணியதனிற் கண்டது சாற்றுக-மூன்றுமொருகாரணமாயிருக்கிற இந்தப் பூமியினிடத்துக் கண்டதுண்டாகிற் சொல்லுவாயாக. (நிமித்த காரணமென்றது சிவனை, துணைக்காரணமென்றது சத்திகளை, முதற்காரணமென்றது விந்துமோகினிமானென்கிற வுபாதா னத்திரயங்களை.) இதன்றியும்,—அத்தனியற்றுமித்தொழில் பிறர்க்கோ தனக்கோ வீணோ வெனக்கிதியம்புக - கத்தாசெய்கிறபஞ்சகிருத்தியம் பிறர்நிமித்தமாகச்செய்து வருகிறானோ வல்லது தன்னிமித்தமாகச் செய்துவருகிறானோ யவைவிரண்டுமின்றிச் சும்மாபயன

ற்றதாகச்செய்து வருகிருனே இதனையெனக்குத் தெளியச்சொல் வாயாக, சொல்லமாட்டாயாயின் நான்சொல்லக்கேட்பாயாக— வீணெனிற் பித்தர்மாண்பறுந் தொழில்பொற்றலைமையு மறிவுமி லதென விகழ்வர்-சும்மா பயனற்றதாகச்செய்தானுமாகிற்பித்தரா யுள்ளவர்கள்செய்கிற மாக்ஷிமையற்ற தொழில்போல விருக்கை யாற்கத்தாவிற்குச் சர்வமுதன்மையுஞ் சர்வஞ்ஞத்துவமு மில்லை யென்றுசொல்லிப் பெரியோர்களிகழ்வார்கள். ஆகையால்வீணு கச்செய்தானென்று சொல்லவொண்ணுது,—தனக்கெனி லஃது முனிற்பதொன்றன்றே-தன்னிமித்தமாகச் செய்தானென்னிலது வுமுன்சொன்னது போலப்பொருந்துவ தொன்றன்று அதேதென் ன்னில்,—தன்போலநிஞருந்தலைவருமிலரான் மின்போனிலைமை யைவேண்டலும்பழுதே - தன்னைப்போலச் சர்வஞ் ஞத்துவமு ஞ் சர்வமுதன்மையும் பிறரொருவருக்கு மில்லாதபடியினலே மி ன்போலத்தோன்றி மறைந்துபோகிற பிரபஞ்ச வியற்கையைத் தனக்குவேண்டிச் செய்தானென்னுமிது மிகவும்பழுதாம் ஆகை யாற்றன்னிமித்தமாகச் செய்தானென்று சொல்லவுமொண்ணுது —பிறர்க்கெனிற் பிறரும் பிறர்க்காம்பொருளும்-இந்தத் தொழி ல்கத்தா பிறர்நிமித்தமாகச் செய்தானென்னில் தன்னை யொழிந் துபிறரென்ருெருமுதலும் அந்தப்பிறரென்று சொல்லப்பட்டவ ர்களுக்கு வேண்டினவிடயமும்.—பொருட்கமைகருவியு மதற்கு பாதாநமும் - அந்தவிடயங்களைப் புசிக்கத்தக்கதாக வதற்கேத்த கருவியு மந்தக்கருவிகடோன்று கைக்கோருபாதாநமும்,—செய் கையுமென்ருரை வகைத்தாஞெடு மாருச்சைவர்கூருர்- இந்த வுபாதாநத்திலேநின்று பிரபஞ்சத்தைத் தோற்றுவிக்கிற சிவனே டுங்கூட விந்தவைந்துவகைக்கு மாறுபாடாகச் சைவராயுள்ளவர் கள்சொல்லார்கள்,—என்ரு னின்சித்தாந்த மவசித்தாந்தமென்- என்றிப்படியிருக்கையால்நீகொண்டிருக்கிறசித்தாந்தஞ்சித்தாந்த மல்லவென்று நீதானேசொல்-இதன்றியும்,—சித்தான்றவசித்தை மற்றீனுதுசித்தாயுள்ளசிவம்அசித்தாயுள்ளபிரபஞ்சத்தைத்தன்னி

டத்திலேநின்றுந்தோற்றவியாது அசித்தில்தென்னில் அசித்தென்கிறவசாம்பிரபஞ்சத்திற்கில்லை.எல்லாஞ்சிற்சொரூபமே யென்னில்;அசித்ததென்னுலகில்இந்தவுலகத்தின்கண்ணேபிரபஞ்சம்ஜடமாயிருப்பதென்று சாத்திரங்கள்சொல்லுவானேன். இதன்றியும் —உலகாயிதனும் பூதக்கூட்டஞ் சலமேற்கொப்புட்டகு மெனச் சாற்றினன்-உலகாயிதன்முதலாய்ப் பூதக்கூட்டமாயிருக்கிற பிரபஞ்சத்தை நீர்மேற்குமிழிபோலு நிலைநிற்பதல்லவென்று சொன்னுன். அப்படியிருக்கையிலே நீயிந்தப்பிரபஞ்சத்தைச் சிற்சொரூபமென்றுசொன்னது வுண்மையன்று. (மேலவனுன்மாவில்லையென்னவுண்டென்கிருர்.)—நேயகருமச் சீனர் சாவகர் பிறர்ளேய மில்லென நிகழ்த்தினரிலரே-பொல்லாத தொழிலுக் கேதுவாயிருக்கிற புத்தர்கள் சமணர்கள் மற்றுண்டான சமயிகளனைவருமிந்தச்சரீரத்திலே யோரறிவுண்டென்று சொல்லுவார்கள், அதனையொழிந் துன்னைப்போல வான்மாவில்லையென்று சொல்லுவார்களில்லை,—காண்டல்விரோதநிற்பிறர்கணித்திலர் - பிரத்தியக்ஷவிரோத நீநாட்டினுற்போலப் புறச்சமயத்திலுள்ளவர்களு மிப்படிச்சொன்னவர்களில்லை.—ஈண்டினதுரைக்கு மற்றியார்கரி-இவ்விடத்து நீயான்மாவில்லையென்று சொல்லுகிறதற் கியார்தான்சாக்ஷி. இன்னுரென்ருெருவரைநாட்டு இதன்றியும்,...உடலுஞ்சித்தோ - இந்தச்சரீரமு மறிவோவறிவல்லவோ,—சித்தின்சேர்வாற் சித்தெனில் - அறிவோடுங்கூடி வாதனைப்பட்டு வருகையினுலேயிந்தவுடலுமறிவென்று நீசொல்வில்,...கடபடாதியு முடற்கட்சினைவென்-கடபடாதிகளு மிந்தவுடலைப்போல வவையுமோருடல்களாயிருக்கையிலே யிந்தவுடலைப்போலச் சஞ்சாரமின்றிக் கிடப்பானேன்.—தாபரவுயிற்போற் றனுவொழிந்திவற்றின் மேவிய வுணர்வுவிரவிடுமென்னில் - அந்தக்கடபடாதிகளிலே பொருந்தி நிற்கிறபேரறிவு எல்லாரூபங்களினுங் கலந்து நிற்குமிடத்துயிர் கூடிநிற்கிறவுடம்பிலே தாக்கினுற்போல மற்றக்கடபடாதி களிலேதாக்கி நில்லாதென்று நீசொல்லில்,—சடத்துயிர் போலெனச்

சாற்றினையாகலி னுடற்குயி ரிறைமையொழிந் துண்டன்றே-உ யிர்நிற்கிறவுடம்புபோல் வுயிரில்லாத வுடம்புகளிலிந்தப்பேரறிவு பொருந்தாதென்று சொன்னயாகையா லிந்தவுடற்குக் கத்தாவை யொழிந் தோருயிண்டாகவேண்டும். நான் திருஷ்டாந்தஞ் சொ ன்னதுகொண்டே னப்படிச்சொல்லுகிறீரென்று நீசொல்லில்—தருஷ்டாந்தமுந் தாட்டாந்திகமு மொருபொருளாகி லுவமைபெ ருதே - ஒன்றிற்குவமையாகச் சொல்லப்பட்ட திருஷ்டாந்தமு முவமைப்பற்றிநின்ற தாஷ்டாந்திகமு மொருபொருளா யிருக்கு மாயின் பொன்போலுங் கொன்றையென்கிற வுவமையிந்த வுல கின்கணுண்டாகாது,—ஒன்றேயாகிய லுடற்கிறை தாபரந்தொ ன்றிய நிலையில்விசேடமென்னுரைக்க பசுமுதலின்றிப் பதிமுத லொன்றுமேயாகி விந்தப்பதிமுதலெங்கு நிற்குமிடத்துத் தாபரங் களைப்பார்க்க விந்தவுடலிற்கு விசேடமுண்டானதென்ன நீசொ ல்லு,—பூதச்சேர்வைப் பேதமென்றறையில்-பூதக்கூட்டுறவினே ற்றக்குறைச்சலென்று நீசொல்லில்,—சேர்வைப்பேதமென்கொ டுசெப்புக - பூதங்கள் கூடுகிறவிடத்திலேபேதந்தான்வந்ததேது கொண்டென்று சொல்லுவாயாக,-கருமத்தளவில் வருமெனில் - கன்மத்துக்கீடாகப் பேதமுண்டாமென்று நீசொல்லில்,—பித்த ருரையிற்றிகழு முணர்வொழிந்தனையே - நீகன்மத்துக்கீடாய்வ ருமென்றுசொன்னது பித்தர்சொல்லுகிற சொல்லைப்போல விள ங்காநின்றது நீயுமறிவுகெட்டு விட்டதாயிருந்தது.— கருமஞ்செ ய்வோன் கடவுளன்று - யாதொருகருமத்தைச் செய்து வருகிறவ னைக் கத்தாவென்று சொல்லப்படாது ஆகையா லிந்தக்கன்மஞ் செய்தது சிவமல்ல,-உடலுமருவி நின்றிருவினைவளரா நுகராஉட லும் ஜடமாகையாலோ ரேதுவுமின்றிக் கன்மத்தை யுண்டாக்கி க்கொள்ளவுமாட்டாது பிராரத்தகன்மத்தைத் தானுகப் புசிக்கவு மாட்டாது, சிவன்கூடிநின்று புசித்தாரென்னில்,—கடவுளு முட லின்கண்படறுஞ்சல் - வாக்குமனதீதனுயிருக்கிற சிவன் கன்மத் துக்கீடாக வோருடலினிடத்துவந்து பொருந்துதல் பிராரத்தந்

தொலைந்தவாறேயந்தவுடலைவிட்டுவிடுதல்,— இடர் நலமுறுதலிற ங்குத லேறுதல்·இந்தவுடலோடுங்கூடிநின்று புண்ணிய பாவங்க ளைப்புசித்துக் கொண்டுவருதல் சாக்கிராதியவத்தைகளிலே யிறங் கிய திரப்பட்டுக்கிடத்தல்மீண்டுமுணர்த்துமுறைமையிலேயேதிச் சாக்கிரத் தானத்திலே வருதல். — எவ்வகையேனுஞ் செய் கையின்றுதலும் - இவையெல்லா மெந்தப்பிரகாரத்தாலுங் கட வுளுக் கிந்தத்தொழிலில்லாதபடியாலும்.—பலகலையுலகினிலவுதா லானும் - கத்தா சர்வஞ்ஞனைகையாலும் பாசஞ்சடமாகையாலும் இவையிற்றைக்கற்க வேண்டுவதில்லை இந்தவிரண்டுவகைக்குமி ன்றிப்பலசாத்திரங்க ளிந்தப்பிரபஞ்சத்திலேயுண்டாய்வருதலினு லும்,—எண்ணரும்பொருளு மிரவியுமொழியக் கண்ணெனவொ ன்று காண்கையினுலும் - எண்ணிறந்தபேதமாயிருக்கிற பிரபஞ் சங்களு மிவையிற்றைவிளக்கஞ் செய்கின்றவாதித்தனுமின்றிக்க ண்ணெனவொருமுத னடுவேநின்றுகண்டுவருகையினுலும்,—பா சப்பகுதியு மீசனுமொழியப் பசுவுமுண்டென் றிசையவேண்டின் றே-பாசத்தினுடையவகையும் பதியினுடையவகையுமின்றிபேப சுவினுடைய வகையுமுண்டென்று நீபொருந்தவேண்டும்.—இது வெனுவென்றை யதுவாய்ப்படுத்துப் பொதுமையுனிற்குமாயை யின்பொற்பென - இதுவென்று சுட்டப்பட்டவொருவிடயத்தை விடயந்தானயந்த வறிவானது பொதுவிலே நிற்குமென்றது மா யாமயக்கத்தினுடைய பெருமையென்றறிவாயாக,...பொற்பணி யாவும்பொன்னுந்தன்மையின், பொன்னிலேயுண்டான பணிக ளெல்லா மந்தப்பொன்போல விருந்ததன்மைபோல்,— நிட்கள சகளத்திருவுரு நிலையுமீசனேயெனப் பேசுவர் - நிஷ்களமாகியவ ருவமுஞ் சகளமாகியவுருவமு மிவையிரண்டுங் கத்தாவினுடைய சொரூபமாயிருக்குமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்,—அ ன்றியருவாயுள்ள சிவமுமுருவாயிருக்கிற பிரபஞ்சமா யிருக்குமெ ன்று நீசொல்லில்,—அனைத்துமாயையெனத்- தெளிகிலையே-பிர பஞ்சமாயையாயிருக்கையா லிந்தப்பிரபஞ்சத்திற் குபாதாநமாயி

ருக்குமென்றசிவமு மாயையென்றுதெளிகின்றாயில்லையே. (என வேபிரபஞ்சத்திற் குபாதானஞ்சிவமல்லமாயையென்பதுகருத்து) இதன்றியும்,—ஆவதுமாகாதொழிவது மில்லெனும்பாவகமுலகா யிதனதுபான்மை - இதாம்பகுதி இதாகாப்பகுதி இவையிரண்டு மில்லையென்கிற பாவகமுலகாயிதனுடைய பக்ஷமாயிருக்கும். அந்தமுறைமைகள் ஞானவான்களுக் கில்லையென்னில்,—கட்கொலை வெகுளி காமங் களவுக ளுட்படுமிவைவிட மொழியாதாரிலர் -மதுபானஞ்செய்கிறது கொன்றுபறிக்கிறது கோபித்துச்சொல்லுகிறது பரதாரகமநஞ்செய்கிறது பிறது கோபித்துச் சொல்லுகிறது பாதாரகமநஞ்செய்கிறது பிறருடையபொருளைக் களவுகொள்ளுகிறது இப்படிப்பின்னையுஞ் சொல்லுகிற பொல்லாங்குக ளெல்லாத்தையுமாகாது இவையிற்றைவிட்டு விடுங்கோளென்றுசொல்லாதிருப்பா ரொருவருமில்லை இப்படிக்கொத்தவையெல்லாஞ் செய்தாலும் ஞானவான்களுக்குத்தேவையில்லை தோஷமேறாதென்று சாத்திரஞ்சொல்லுமென்னில்,— சோமபானஞ் சுராபானங்களாமென மறைகளார்செவிப்பறைந்தன - சோமபானஞ் செய்கிறது சுராபானஞ்செய்கிறது இவையிரண்டுங் கொள்ளலாமென்றொருத்தருமறியாமல் வேதங்களாருடைய செவியிலே சொல்லிற்று இதன்றியும்,— மறையோன்புலைச்சியை மருவுமென்பது முறையோ - பிராமணன் பறைச்சிக்காசைப்பட்டவளோடே கூடுகிறது முறைமையோ முறைமையீனமோ,—எனி லதுபுனைமொழியென்னில்-பிராமணன் பறைச்சியைப் பரிசிக்கலாகாதென்று சொல்லுகிறது ஒருவரம்பு கூடிச்சொன்னதொழிந்து அவளிடத்திலேகூடினவிடத் தின்பம்விளைந்த தில்லையோவென்று நீசொல்லில்,—சாதிபேதநீதி நீதவறினுமேதியை யேறுவிழையா விரும்பும்-பிராமணனென்றுஞ் சண்டாளனென்றும் வழங்கிவந்தசாதித்தன்மையை நீயிப்போது தவிர்ந்துவிட்டாயினு மெருமையை விருஷபமானதுவிரும்பாது பசுவைவிரும்பும். ஆதலால் ஞானவான்களுக்கெல்லாமா மென்கிறதத்தமாகாது,—கண்ணினதுருவு மதி

ற்கதிரொளியு நண்ணருஞ்சத்தி நாடகமெனில்- கண்ணினுடைய பிரகாசமு மதிற்கூடிநிற்கிற வாதித்தனுலுண்டாகிய சாக்ஷியும் பொருந்துதற்கரிய சிவசத்தியினுடைய நாடகமாயிருக்குமென்று நீசொல்வில்,—அதற்கேதுவும் பயனு மோதவேண்டும்-அப்படிச் சிவனொரு வுருவத்தைக்கொண்டானுகில் அவனுக்கிப்படி யொரு குற்றமுண்டென்று மதுநீக்கிக்கொள்ளுகைக்குப் படிப்பு சித்தா னென்றுஞ் சொல்லவேண்டும்,...நின்மொழி விரோதமுநீடுலகி யற்கையும் - விசுவாதீதனுயிருக்கிற சிவனிப்படிப் புசித்துவருவா னென்று நீசொல்லுகிறசொல் விரோதமு நல்லவனின்ஞன் பொ ல்லாதவனின்ஞனென் றுலகிலுள்ளவர்களெல்லா மங்கீ கரித்துக் கொண்டுவருகிற முறைமையும்,—தன்மசாத்திரமுஞ்சகலமுமெ ன்செய்யும் - புண்ணியபாவங்களின்னதென்றும் பாவஞ்செய்தவ ர்களை ராஜாதண்டஞ்செய்யக்கடவனென்றுந் தன்ம சாத்திரங்களி ற்சொல்லுகிற முறைமையுமிப்படிச் சொல்லப்பட்டவையெல்லா மான்மாவொன்றில்லையாமாயி னவையெல்லா மென்னபிரயோஜ னத்தைச்செய்யும். இதன்றியும்,—உலகேழெனவிறை பல்வாந்த ன்மை - '' உலகேழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே.,; என்ற திருவாசகத்தின் றன்மை,—கடமொடு சார்வங் கலசமாதி களடலுறு குயவனுயினனென்றால் - குடங்கள் சட்டிகள்கலசங்க ளிவையாதியாகச் சொல்லப்பட்ட பாத்திரங்களெல்லாம் விரை விலேபொருந்திச் செய்யப்பட்ட குயவனுயினனென்று சொன்னு ல்,—தானேயாகா வவைதானுகான் - அந்தக்குயவனந்தப்பாத்தி ரங்களாகான் அந்தப்பாத்திரங்க ளிந்தக்குயவனுகாது,—ஆயின னென்பதாக்கின னென்பதாக்கின னெனவே-ஆயினனென்னதா க்கினனென் றிலக்கணங்களிற் சூத்திரஞ்சொல்லுகையினுல்,...ஆ னுயென்பதனைத்து மவ்வகைதானுகாமையைச் சாற்றிடுமென்க வானுனுய்மண்ணுனுயென்று சொல்லப்பட்டதெல்லா மந்தச்சிவ னந்தவாறு மண்ணுமாகா னென்பதைச் சொல்லுமென்றறிக,— தாமேயெனு மித்தனியேகாரம் - தாமேதானுகச்செய்யு மென்கிற

வொப்பில்லாத வேகாரத்தோடுங் கூடியிருக்கிற திருவாக்கு,— அழுந்தில் ரதுவேயாய்த்திலர்-தாங்களழிந்தார்களுமில்லை யந்தச் சிவமுதலானார்களுமில்லை,— அதுவிட்டொழிந்திலர் பிரிவிலரெ னுமிவையுணர்த்தும் - அந்தச்சிவமுதலையின்றிக் காரியப்பட்டா ர்களுமில்லை யந்தமுதலிற்கு வேறாயிருந்தார்களு மில்லையென்றிப் படியிருக்குமென்று சொல்லும்,—காயும் பழமுஞ் சுவையுநுகர்வ தாயவன்றானு மவன்முதற்றென்னும் - "காயாகிப் பழமாகிப் பழுத்தினின்ற விரதங்கணுகர்வானுந் தானேயாகி,, என்றதிருவாக் கு காயும் பழமுமவற்றுணின்ற விரதமு மவையிற்றைப்புசிக்கிற வனு மந்தக்கத்தாவாலே யுண்டாகையா லிவையெல்லாஞ்சிவமு தலாகவுண்டான தென்றுசொல்லும்.... அகிலமுந் தெளிய வறி வோன்றானும் - பிரபஞ்சமெல்லாத்தையு மாக்கமற வறிகிறவனு ம்,...அகிலமுமறிஞரை யறிவிப்போனும் – அறியும்பகுதியுள்ளவ ர்களுக் கெல்லாத்தையு மறிவிப்போனும்,—அறிஞர்க்கறிவாயறி கின்றோனும் - அறியும் பகுதியுள்ளவர்களுக் கவர்களுடைய வறி வாய்நின்றறியும் பகுதியையுடையவனும்,— அறிவிற்கறி பொரு ளாவோன்றானும்-முத்தான்மாக்களுக் கறிபொருளா யிருக்கிறவ னும்....அகிலமுமேனியானவனென்னும் - பிரபஞ்சமெல்லாமவ னுக்குத் திருமேனியாகையா லிந்தமுறைமைகளை யுடையவனெ ன்று சொல்லாநிற்கும்,—தருபொருள் கொள்பொரு டருவோன் கொள்வோன் - ஒருவன்கொடுக்கப்பட்ட பொருள்தான் கொள் ளப்பட்டபொருள் ஒருவன்பொருளைக் கொடுக்கிறவன் அந்தப் பொருளை வாங்கப்பட்டவன் இவையெல்லாம்,...ஒருபொருளாயி னுவப்புண்டென்க - ஒருபொருளாயிருக்குமாயின் மிகவும்பிரியம் வருமென்க: இப்படியுஞ் சொல்லுவார்களோ,— நுகர்வோன்றனை க்கு நுகர்பொருள்வேண்டிற்று புசிப்பானொருவனுக் கொருபொ ருளைப் புசிக்கவேண்டினவிடத்து,... இகலறக்கிடையா திருந்த தெனிரையமும் - அந்தப்பொரு ளிவனுக்கு மாறுபாடின்றி வந் துபொருந்தாதிருப்பானேன், எல்லாமொருபொருளா யிவனினை

த்தபொழுது புசிக்கக்கண்டோமில்லையே ஆகையா லெல்லாமொ ன்ருயிருக்குமாயின் நரகமுண்டாகாது. அதேனெனில்,—வே ண்டாராயினு மெய்யுறவியாதிக ளீண்டாதொழியாது - குன்மகு லைமுதலானவியாதிகளை யநுபவிக்கவேண்டா மென்றவர்களிருந் தாலுஞ் சரீரத்திலேயுண்டாயிருக்கிற வியாதிக ளிவர்களை வந்து பொருந்தி யநுபவியாமல்விடாது, ஆகையா லெல்லா மொன்றெ ன்றுசொன்ன தத்தமன்று. ஆன்மாவில்லை யெல்லாஞ் சிவமநுப விக்குமென்ருய்,—இறைக்கிவை யீடல - வேண்டின பொருள் கிட்டாமலும் வேண்டாதவியாதிகள் கிட்டியும் இவையிற்றிலுண் டாகியவருத்த மான்மாவுக்கேயல்லது சிவனுக்குண்டாகாதுஇப்ப டியிருக்கையிலே,...சத்தியுஞ் சிவமுந் தாமேநுகருமென்றித்திற னுணர்வு வந்தெய்துவதெவர்க்கோ-ஆன்மாவில்லை சத்தி சிவங்க ளே யெல்லாச்சுகதுக்கங்களையு மநுபவிக்குமென்று சொன்னவி ந்தப்பகுதியி லுண்டாகிய ஞானமிந்தப்பிரபஞ்சத்திற்குள்ளே யா ர்க்குத்தான் வந்துண்டாவது. (என்றதாக்ஷேபம்,)— தமக்கே யென்னிற் ருமுணராமையும் - சத்திசிவங்களுக்கேயிந்தவநுபோ கமென்னில் அந்தச்சத்திசிவங்க ளிந்தப்பிரபஞ்சத்தை யறியா தபடியாலும்;—அமைப்பறவுணர்தலு மவர்க்கடைவன்றே- அறி யமிடத்துச் சுட்டியறியாமற் றடையறவெல்லாத்தையு மொக்கவ றிகையாலுஞ் சுகதுக்கங்களான்மா விற்கொழிந்துசிவசத்திகளுக் குண்டாவதல்லவே, (இதுபெத்ததை மறுத்தது.) (மேன்முத்தி யைமறுக்கிருர்,) நானெருமுத லவனெருமுதலென்கிறது குற்ற த்தையுடைய வழியென்று மிவனவனல்விடுகிறது நல்லவழியாகிய சாயுச்சியமென்றுஞ் சொன்ஞய்,—நானுமவனு நவையு நலனும்- நானென்கிறவான்மாவும் அவனென்கிற சிவமு நவையென்கிறகு ற்றமு நலனென்கிறநன்மையும்,— தானவனுகையு நின்சாதனத் தில் - இந்தவான்மா வந்தச்சிவனுகவேண்டு மென்கையும் நீயெ ல்லாமொன்றென்கிறவ னுகையாலுன்னுடைய சாதனத்திற்குட் பட்டதல்ல, இதன்றியும், சகயோகத்தைச் சாயுச்சியமெனப்பக

ர்வது பதிபசுபாசத்தவர்க்கே - சிவனோடொன்றாய்க்கூடிப்போ
கிறதைச் சாயுச்சியமென்று சொல்லுகிறவிது திரிபதார்த்த நிண்
ணயம் வந்தவர்கள் கொள்ளும்பகுதியாமே. இதன்றி,... யாதொ
ருவகையெனவோதிய திறைநூல் சொன்னவற்றொன்றன்று -இ
ந்தமுத்தித்தன்மை கூடுமௌவுஞ் சஞ்சாரத்தோடே கூடியிருக்கி
றவ னவையிற்றைவிட்டு நின்றதே நிலையாகக்கொண் டுபசரித்து
வரக்கடவனென்று நீசொன்னது சிவாகமம் மோக்ஷத்துக் கேது
வாயுள்ளவர்கள் சரிக்கவேண்டியமுறைமை பலவழியுஞ்சொல்லு
ம் அவையிற்றிலே யொருவழியுங் கூடப்பட்டதல்ல,... என்னில்
வீடெளிதே - அப்படிச்சரிக்கிறதுதானே முத்திசாதனமென்னி
ன் மோக்ஷத்தையரிதென்று சொல்லவேண்டுவதில்லை, எல்லார்க்
குமெளிதாய்ப் பெற்றுவிடலாமென்றசொல். இதன்றியும்,...தா
னறிவழியே தலைப்பொருள்பிடித்து - ஆசாரியர் கற்பித்தவழியே
யொழுங்கில்வாராமல் தன்னுடைய போதத்திற்குத் தோன்றின
வழியே தலைபானவழியாகப்பிடித்து;...மேனிகழ்பலமும் வீடளி
த்திடுமே - அந்தவழியே யொழுகிவர வதனாலுண்டாகிய பலமும்
வீட்டின்பத்தைத் தருமேல்,—நிலையாக்கருதி நிலையில்லாமைக்கு
ச்சாக்ஷியான தேகாதிபிரபஞ்சத்தை நிலை நிற்குமென்றுகருதி—
புலையாடுதலு மூலகாயிதன்பொருள் - செய்யாத காரியத்தைச் செ
ய்துகொண்டுவருகிற துலகாயிதன்கொள்ளும் பொருளாமொழிக்
து சைவர்கொள்ளும் பொருளல்ல, குட்டியன்மிறி நற்கோலமெ
ழுதுத விட்டமதாயில் - சுவரில்லாமற் சித்திரமெழுதுகிற தொரு
வருக்குங்கூடாதது உனக்கிஷ்டமா யிருக்குமாயின்,— கருவியுமி
டங்களுங் கருத்துறவுரைக்க - தனுகரண புவனபோகங்க ளான்
மாவிற்கேயென்று சாத்திரஞ்சொல்லுமிடத்து,—தெரித்திடு மதீத
த்து. அநுவயம். அதீதத்துதெரித்திடும் - சிவன்விசுவா தீதனாயி
ருக்கையினாலே யவனுக்கிவை வேண்டுவதில்லை இவையெல்லா
மான்மாவிற்கு வேண்டியிருக்கையிலே யான்மாவிற்கில்லைஇவை
யந்தரத்தே நிற்குமென் றன்னுடையபோத மென்றுங் கூசாமனி

னைத்துச்சொல்லிடும், இதன்றியும்,—அறிவொன் றில்லோர்க்கி றையருளுதவுதல் - சற்றுமறிவில்லாத வான்மாக்களுக்குக்கத்தா வினுடைய வருளறிவைக் கொடுக்குமென்றாய் அங்ஙனமதுசெய் தல்.-பிறிவறிவரியச் செறியிருளிடத்து - ஒருசற்று நீக்கங்காணும ற்செறிந்த விருளிடத்திலேயிருக்கிற,—ஓரந்தகர்காணவந்தோரெ ம்மை நீவிருங்காணவேணுமென் றாங்கெடுத்தோர்திபங்கொடுத் ததையொக்கும் - அந்தகரைக்காணவந்த வொருவர்விளக்கை க்கொண்டுவந்து கண்டந்தவிளக்கையந்தகர்கையிலே கொடுத்தெ ன்னை நீவிருங்காணவேண்டுமென்று சொல்லவவரை யந்தகர்க ண்டாரென்கிறதற்கொக்கும் அறிவில்லாத வான்மாக்களுக்குக்க த்தா வறிவைக்கொடுக்க வந்ததென்றும் நீசொன்னது....இச்செய ற்கிறைவன் கொச்சயனன்றே - அறிவில்லாத வான்மாவிற்குத்த ன்னுடைய வருளைக்கொண் டறிவைக்கொடுத்தா னென்கிறதுக த்தாவு மிந்தவான்மாவைப்போல வறிவில்லாதவ னாகவேண்டும். இதன்றியும்,—கருவியசத்திற் றெரிவுறக்காண வேண்டுன ரிலரா ல் - கருவிகளைக்கொண்டு தேகாதிபிரபஞ்சத்தை நன்றாகக்காண் கிறசாக்ஷியை சிவஞானிகளொருவரு மத்தைவேண்டி யிருப்பாரி ல்லை அப்படியிருக்கையிலே - ஈண்டறிவுயாவுஞ் சிவமேயென்று செப்பினை - இவ்விடத்துக் கருவிகளைக்கொண்டறியு மறிவெல் லாஞ் சிவமேயென்று நீசொன்னாய்,—அவமுறுபொறிபுல னறியா - இந்திரியங்கள் ஜடமாகையினாலே விடயங்களை யறிய மாட்டா து,..,அறிவது பிரமமென்றோர்க் குன்போ லிடர்ப்படவிலதே - எல்லாத்தையுமறிகிறது பரப்பிரமமென்றுசொன்ன மாயாவாதிக் குமுன்னைப்போலக் குற்றஞ்சொல்லத் தக்கதில்லை. அதேதெனென் னில் அவன்பிரமத்தையறிவென்றும் பிரபஞ்சத்தை ஜடமென்று ஞ்சொன்னான். நீயெல்லாத்தையுஞ் சித்தென்றுசொல்லுகையினா லே குற்றம். இதன்றியும்,...எற்றங் கருவியிருபதோ டிரண்டும்- அந்தமாயாவாதி பதினாலுகருவியு மூன்றவத்தையுஞ் சொன்னான் நீயவனிலும்பார்க்க வேறிருபத்திரண்டு கருவியும்,,,போற்றலை

ந்தவத்தையும் புகறிரிமலமு மீசனுமுயிரும்பேசினை - சைவருப்
சரித்துக்கொண்டுவருகிற வஞ்சவத்தையு மவர்களாற்சொல்லப்ப
ட்ட மூன்றுமலமுங் கத்தாவு மான்மாவுமுண்டென்றுசொன்னாய்
...அஃதொழிந் தொன்றேயாகுமென்றநின்னியல்பு - அவையிற்
றையெல்லாம் விட்டிப்பொழுதெல்லா மந்தச்சிவமொன்றுமேயெ
ன்று நீசொல்லுகிறவியல்பு எத்தோடொக்குமென்றால்,...தாயர்ம
னைவியர் தாதியர் தவ்வையர் - தாயையுந் தன்னுடைய பெண்சா
தியையும் வெள்ளாட்டியையுந் தமக்கையையும், ஆயவரெவரை
யுமோர்மையிற்காணும் - அப்படிச்சொல்லப்பட்ட வெல்லாரை
யும் விடயப்பார்வையாய்ப் பார்க்கும்,...கோகழி தூர்த்தர் கொ
டுந்தொழிறகுமே - கோவினாற்கழியுண்டு போர்த்தொழிலைக்கொ
ண்டு அவர்களைக்கண்டு தன்னெல்லையிலே நில்லாமலப்பாற் பட்
டுக்கண்டுவருகிற தூர்த்தனுடைய கொடுந்தொழிலையொக்கும்...
ஆக மற்றதன்-நீ சொல்லிவந்த ஞானத்தினது தன்மை இப்படித
வறாகக்கிடக்க,—அருணிலைதன்னிலை யேகநாயகனாகிய விறைநி
லை - அருளான்மாக்களை யுபகரித்து நிற்கிறமுறைமையான்மாவி
ற்குத் தனக்கெனவோர் சுதந்தரமில்லாமலே நிற்குமுறைமைகத்
தா சர்வத்திலுநிறைந்த நிற்குமிடத் தொன்றிலுந்தாக்கற்று நிற்கி
றமுறைமைநிலை, நாசமில்பாசம் வீசியவியனிலை-அழிவின்றியிரு
க்கிறபாசஞ் சர்வான்மாக்களையும் பந்தித்துநிற்கிற முறைமை,—
இனையவையொன்று நினைவினுமின்றி - இப்படிச்சொல்லப்பட்
டவையொன்று முன்னுடைய நினைவிலுங்கூடவில்லாமல்,... உ
ண்டெனுமுணர்விற் கண்டது கருதில் - ஆன்மாவிற் கறிவில்லை
அறிகிறது சிவனேயென்று நீ நாட்டப்பட்டவறிவினாலே நீ யநா
சாரமாகச்சொன்னதை விசாரிக்கில்,—இழுக்கெனும் புலன்வழி
யொழுக்கமு மதுவாய்க்கொண்டு - இந்திரியவாதனை பொல்லா
தென்றுசொல்லுமிடத் தந்தவிந்திரிய வாதனையை நீயாசாரமாக
க்கொண்டு,—பண்டையி லெண்டருமடங்கு வந்தவர்செய்தந்தை
யையுன்றே - பெத்தநிலையிற்செய்து வந்தநாசாரத்திலும் பார்

க்க முத்தத்திசையி லெட்டுமேடங் கநாசாரஞ்செய்ய மயக்கத்தை த்தர்த வஞ்ஞானத்தை வெறுக்கிறதல்லது உன்னைவெறுக்க வழ க்கில்லை,—புன்மைக ணீங்க வுண்மை கேண் மதி-இப்படிக்கொ த்தவஞ்ஞான முனக்கு நீங்கத்தக்கதாக நான்சத்திய ஞானத்தை ச்சொல்லுகிறேன் அதைபுத்தி பண்ணிக்கேட்பாயாக, எ-று. (ம தி-அசை,) (கசு)

நிமித்தகாரணபரிணாமவாதிசங்கற்பநிராகரணமுற்றிற்று

சைவவாதி சங்கற்பம்,

அறிவாயறியு மறிவுயிர்கேவலத்
தருவிலனிருளொடும் பிரிவிலனண்ணல்
கலைமுதலாக நிலவியகருவிகள்
விளக்கெனவுதவுந் துளக்கறப்பொருந்தி
யிருவினைநுகர்வில் வருவினைசெய்து
மாறிப்பிறந்து வருநெடுங்காலத்
திருண்மலபாகமுஞ் சத்திநிபாதமு
மருவுழியருளுருமன்னவனணைந்து
செல்கதியாய்ந்து பல்பிணிபடுத்திக்
கருவியுமலமும் பிரிவுறப்பிரியா
ஞானநல்கலுந் தானதுநோக்கித்
தன்னையுமதனையுந் தன்முதற்பொருளையு
மின்னவென்றறியா விருவருமுயங்கி
யொன்றாயுறுபயனுவப்பு
மின்றாய்நிற்கு மிதுசிவகதியே.

(இ-ள்) அறிவாயறிவு மறிவுயிர் - அநாதியே சகலத்திலறி வாயறிந்து கொண்டுவருகிற வறிவாயிருக்குமான்மா,— கேவலத்

தறிவில னிருளொடும் பிரிவிலன் – கேவலாவத்தையிலே யொன்றையுமறியான் அறிவில்லாம லவ்விடத் தாணவமலத்தையும் விட்டுநீங்கான்,—அண்ணல் கலைமுதலாக நிலவிய கருவிகள் விளக்கெனவுதவும் - இப்படிக்கேவலப் பட்டுக்கிடக்கிறவவதரத்திலே யான்மாவிற்குக் கத்தாவானவர் கலைமுதலான தத்துவங்களைக்கண்ணுக்குக் காட்டான விளக்கினது தன்மைபோலக் காட்டாகக்கூட்டுவன்;...துளக்கறப்பொருந்தி யிருவினைநுகர்வில் வருவினைசெய்து - அந்தக்கருவிகளோடு மசைவறக்கூடிப் பிராரத்தகன்மமான புண்ணியபாவங்களைப்புசித்துவருமிடத் தாகாமியத்தையார்ஜித்துக் கொள்ளும்.—மாறிப்பிறந்துமரு நெடுங்காலத்து-இந்தக்கன்மத்துக்கீடாக நெடுங்காலமச்சுமாறிப்பிறந்துவருமிடத்துச் சிவபுண்ணிய முண்டாய் அதனாலே,—இருண்மலபாகமுஞ் சத்திநிபாதமுமருவுழி - மலபரிபாகமுஞ் சத்திநிபாதமும்பொருந்தினவிடத்து,(இதுபெத்தம்.)(மேன்முத்தி.)—அருளுருமன்னவணைந்து - அருளேதிருமேனியாகிய கத்தாவாசாரியமூர்த்தமாகவந்து,—செல்கதியாய்ந்து பல்பணிபடுத்தி - இவன்பொருந்தப்பட்டமோக்ஷத்திற்கேதுவையாராய்ந்து பல்பணியாகியசரிதைகிரியாயோகங்களிலே நிறுத்தி — கருவியுமலமும்பிரிவுறப் பிரியாஞானநல்கலும் – அந்தச் சரிதைகிரியாயோகங்களை முற்றச்செய்கையினாலே கேவலசகல மிரண்டையுநீக்கி யநாதியே யிவனையுபகரித்துக்கொண்டு வருகிறவுண்மை ஞானத்தைக்கொடுப்பன். அப்படிச்செய்த மாத்திரத்தினாலே.—தானதுநோக்கித் தன்னையுமதனை தன்முதற்பொருளையும் - இந்தவான்மா வுண்மை ஞானத்தைத்தெரிசித்து ஞாதுருவாகியதன்னையும் ஞானமாகிய வுண்மைஞானத்தையும் மந்தஞானத்திற்கு முதலாயுள்ளஞேயத்தையுமிந்தமூன்றுமுதலையும்,—இன்னவென்றறியா விருவருமுயங்கி – அவ்விடத்திற் சுட்டியறியாமலிந்தவான்மாவுஞ் சிவமுந்தம்மிலேகூடி,—ஒன்று யுறபய னுவப்புமின்றாய் நிற்குமிதுசிவகதியே – இரண்டுமொருமுதலாகி யவ்விடத்தற்ற தொருபயனும் பிரியமு

மிரண்டு மில்லையாயிருக்கிற வவதரத்தைச் சிவசாயுச்சிய மென்று சொல்லப்படுவது. எ-று, (௧௭)

சைவவாதி சங்கற்ப-முற்றிற்று.

———()———

சைவவாதி சங்கற்ப நிராகரணம்.

இதுகதியாக முதலறிவுயிரேற்
பொறிபுலனீங்க வறிவுயிரன்றே
யடைகாயநூறி னிடைசேர்சிவப்பென
விந்தியத்தொகையின் வந்தறிவொன்றுநின்
றின்றுமென்ற லன்றேயெந்தை
யறிவிலனதீதச் செறிவிலென்றுரைத்த
நின்மொழிவிரோதமும் பின்முன்மலவு
மன்வயினிகழா மலமிருணிறையொளி
யான்மாவிளக்கிற் றருமருட்கலாதிக
ளீனமிலிவனிடத் தெவ்வாறிசைந்தன
விசைந்ததாயினு மிசையாதாயினு
மசைந்திடுமுத்தி சாதநமவமே
சத்திநிபாதமோ தருமலபாகமோ
வுய்த்தகாரண காரியமோதுக
பாகங்காரணமாகின்மற்றது
காலாவதியிற்காயாவதியின்
மேலாமென்னும் வினையுறுமவதியிற்
றுயரெனவுயிர்க்குத் தோன்றிடுமவதியி
னயமிகுமிறைவ னல்கிடுமவதியி
லேதிற்கூடு மோதுகவிருவினை
யொத்தவெல்லையில் வைத்தனரென்னி
லருவினைதூக்க வருவினைநில்லா

வொருவினைபுரிகா விருவினையாகா
வொப்புறுமாறு செப்புகதேசிக
னருளுருவென்ற பொருளினையாயின்
மாயாவுருவன் மாயாவுருவினை
யேயானெய்ந்தவ ரெம்மனோரே
பல்பணிஞான் காரணமென்னிற்
றொல்பணிதொறும்பயன் றொடுப்பதனாலு
மொருபணிசெய்யாச் சிரபுரச்சிறுவரு
மரசராய தருணத்தலைவரு
முதிர்பர சமயத்திதமுறுமரசரு
ஞானம்பெற்ற நன்மையினாலு
மினமில்பணியருட் கேதுவன்றென்றுன்
ஞானோற்பத்தி நிமித்தமித்தொழிலென
வேனோர்கிறைநூ லியம்பிற்றென்னுங்
கருவியுமலமும் பிரிவுறவருடரு
மென்றனைகேவலத் தேதமறிவின்
றன்றியசகலத் தருணிலைதோன்று
வெவ்வவத்தையி லிறையருள்பெறுகுவம்
செவ்வியஞான தரிசநமாவது
நால்வகைமாயைப் பால்வருஞானம்
பண்டைஞான மிதுவறிதாவாக்
கண்டஞான மிதுவரக்காணி
லீனஞானிக ளென்போர்யாருமின்
ஞானவேற்றுமை நாடலுமரிதே
தானுஞானமுந் தலைவனுமென்றனை
யானபினிவனு மிவனதுஞானமும்
பாசமும்பாச ஞானமுமென்றிவை
பேசுவரொன்றுப் பெற்றியவாகலின்
மும்மைப்பொருட்கு மும்மைத்தன்மை

செம்மைத்தென்னிற் செலவுகளெழுதக்
கிருவருக்கூடி யொருப்படுத்தென்
றருளினையிவ்வா றபேதிகணிலையே
பதிபசுபாச முதிரறிவுகளுட
ஞுமுன்னர்க் கூறுப்பின்ன
ரிருபொருணீத்தமற் றொருநால்வகையு
மீனமில்ஞா துரு ஞானஞேயமென்
றிசையமூன்றுய்ப் பசுபதியென்றவற்
றிரண்டாயிரண்டு மொன்றினொன்றாகத்
திரண்டாம்பயனெனுந் திருவருடெளியிற்
சென்றுசென்றணுவாய்த் தேய்ந்துதேய்ந்தொன்று
மென்றிறையியற்கை யியம்புதறகுமே
யொன்றுமென்ற லன்றியுமுவப்பு
மின்றுமென்ற லென்பயனியம்புக
வென்றனைவினவு மியாவும்விளங்க
வென்றிகொள்கருத்தின் விரும்பினையாயி
னதிக்கரையானெனக் கொதித்தலமாந்து
வெண்ணெயம்பதிதிகழ் மெய்கண்டவனரு
ளுண்ணிலையுடையோ னொருவனுரைத்த
தவப்பிரகாசத் தன்மையில்விரித்த
சிவப்பிரகாசச் செழுந்தமிழுண்மையை
யருளுடனுய்ந்து கொள்ளத்
திருவருள்வினவுறிருந்திமென்றே,

(இ-ள்.) இதுகதியாக முதலறிவுயிரேல் - நீயிப்பொழுது சொல்லிமுடிந்தவிது முத்தியாகட்டும் அதுபின்பு சொல்லுகிறோம் ஆன்மாவநாதியிலே யறிவாயிருக்குமாயின்,...பொறிபுல னீங்க வறி வுயிரன்றே - இந்திரியங்களு மதனாலறியப்பட்ட விடயங்களு நீங்கினவிடத் தான்மாவிற்கறியும் பகுதியுண்டாமோ அவ்வி

ந்திரியங்கள் கூடினபொழுதறிந்து மலைநீங்கினபொழு தறியா
மையுமாயிருப்ப தான்மாவிற்குள்ள சுபாவமென்று நீ-சொல்லி
ல்,—அடை காய் நூறினிடைசேர் சிவப்பென பாக்கு வெற்றிலை
சுண்ணாம்பு கூடிமத்தித்தவிடத்திலே யவையிற்றினது தன்மை
யின்றி நடுவேயொரு சிவப்பெழுந்தாற்போல,— இந்தியத் தொ
கையின்வந் தறிவொன்று நின்றின்றுமென்ற லன்றே யெந்தை-
இந்திரியங்களினுடைய கூட்டத்தினடுவே யோரறிவுதோன்றியுட
னேயழியுமென்று கணபங்கஞ்சொல்லுகிற புத்தனாமே பப்பாநீ
ரிதன்றியும்,—அறிவில னிதீதச்செறிவிலென்றுரைத்த - அறிவா
யறிந்துவருகிறவான்மாவிற்கு மலத்தினாலே நெருங்கியிருக்கிற வ
றிதத்தானத்திலறிவில்லையென்றுசொன்ன.—நின்மொழிவிரோத
மும் பின்முன்மலைவு மன்வயி னிசழா - உன்னுடையசொல்வி
ரோதமுமொருக்காலறிவில்லையென்று மொருக்காலறிவென்று நீ
முன்னேபின்மலையச்சொன்ன வினைவு நிலைபெற்ற நல்லோர்க
ளுடைய கூட்டத்தினிடத்துச் சொல்லிக்கொள்ளப்படாது. இத
ன்றியும்,— மல மிருள் - ஆணவமலமோவென்றாற் சுத்தவிருளா
யிருப்பதொன்று,... இறையொளி - கத்தாதானோ வென்னின் ம
காபிரகாசமாயிருப்பானொருத்தன்,...ஆன்மா விளக்கிற்றருமருட்
கலாதிகள்-ஆன்மாவிற்குத்தான் விளக்கைபோலே காட்டாயுள்
ள கலைமுதலானதத்துவங்களு மாயாகாரியமாயிருக்கையினாலேம
யக்கமாயிருப்பதொன்று. ஆகையாலந்தக்கருவிகள் - ஈனமிலிவனி
டத்தெவ்வாறிசைந்தன-இருளாயிருக்கிறகேவலத்தானத்திலேயறி
வின்றியிருக்கிற வான்மாவிற்கு மகாபிரகாசமாயிருக்கிற கருவிகள்
சென்றுபொருந்தினபடியெப்படி,...இசைந்ததாயினு மிசையா
தாயினும்-அந்தக்கருவிகள் கூடியறிந்தாலும் அந்தக்கருவிகள் கூ
டாமற்கேவலத்திலே கிடந்தாலும்போகட்டும்,...அசைந்திடு முத்
திசாதநவமே நீநிலைநிற்கமாட்டாமல் முத்திசாதநஞ்சொன்னது மி
கவுநன்றாயிருந்ததில்லை. (இதபெத்தத்தைமறுத்தது.) (மேன்மு
த்தியைமறுக்கிறார்,)... சத்திநிபாதமோ தருமலபாகமோவுய்த்த

காரண்காரிய மோதுக-முன்னேயிருண்மலபாகமுஞ் சத்திநிபாத
முமருவழியென்ருய் அதிற்சத்திநிபாதங்காரணமாக மலபரிபாக
முண்டாயினதோ மலபரிபாகங்காரணமாகச் சத்திநிபாதமுண்
டாயினதோ இவையிற்றிற்செலுத்தப்பட்டகாரணகாரியமியாதெ
ன்றுசொல்லுவாயாக,... பாகங்காரணமாகின் - மலபாகங்கார
ணமாகச் சத்திநிபாதமுண்டாயிற்றென்னின்,...மற்றது காலாவ
தியிற் காயாவதியின்-அந்தமலபாகமென்றுசொன்னது எண்ணி
றந்த சரீரமெடுத்துப்போட்டு வருகிறதற்குள்ளே யின்னசரீரத்தி
லே முத்தியென்றிருக்குமோ வந்தச்சரீரத்தினுடைய வெல்லையி
லே யெண்ணிறந்த காலஞ்செல்லுகையிலே யதிலே யின்னகால
த்திலே யிவனுக்கு முத்தியென்றிருக்குமோ,மேலாமென்னும் வி
னையுறுமவதியில்-அந்தக்காலத்தினெல்லையிலே யொன்றுக்கொன்
றுமேலாகவருகிற புண்ணியபாவங்களிரண்டுந்துலையொப்புவந்த
வெல்லையிலேயோ,... துயரெனவுயிர்க்குத் தோன்றிடு மவதியில் -
எண்ணிறந்தகாலம் பிறந்திறந்துவருகிற வான்மாவிற்கு ஜநநந்து
க்கமென்று தோன்றின வெல்லையிலேயோ,...நயமிகுமிறைவனல்
லி மவதியிலேதிற்கூடு மோதுக-ஆன்மாக்கள்பேரிலே மிகவும்
பிரியத்தையுடைய கத்தா அவனை யின்னவவதரத்திலே யிரக்ஷி
ப்பனென்றுண்டே யந்தவெல்லையோ இவையிற்று லெந்தவவதர
த்திலே கூடுமென்று சொல்லுவீராக... இருவினையொத்த வெல்
லையில்வைத்தன ரென்னில் - புண்ணியபாவ மிரண்டுந்துலை யொ
த்தவவதரத்தில் மலபாகமுண்டாமென்று பெரியோர்கள் சொல்
லுவார்களென்று நீசொல்லில்,...அருவினை தூக்க வருவினை யில்
லா - கன்மமருவாயிருக்கையினுலே புண்ணியமொரு தட்டிலும்
பாவமொரு தட்டிலும்போட் டிரண்டுமொத்ததோவென்று தூ
க்கிப்பார்க்கைக்கு உருவாகக்காணப்படாது, இதன்றியும்,... ஒரு
வினைபுரிகா விருவினையாகா - ஒருபுண்ணியத்தைச் செய்யுமிடத்
துப் பாவம்பாதியாகப் பகுத்துவில்லாது ஒருபாவத்தைச்செய்யுமி
டத்துப் புண்ணியம்பாதியாகப் பகுத்து வில்லாது புண்ணியம்பு

ண்ணியமாகவும் பாவம் பாவமாகவும்வரும்,—ஒப்புறமாறசெப்பு க - புண்ணியம் பாவமிரண்டுந் துலையொக்கிறபடி யெப்படியெ ன்று நீர்சொல்லவேண்டும். இதன்றியும்,... தேசிகனருளுருவென் றபொருளினையாயின்-ஆசாரியனுடைய வடிவு அருள்வடிவாயிரு க்குமென்று நீசொன்னதனுடைய வத்தத்தை விசாரிக்குமிடத்து ..மாயாவுருவன் மாயாவுருவினையேயான் - அழியாத் திருமேனி யினையுடைய கத்தா வழிந்துபோகிற மாயாசரீரத்தைப் பொருந் தான். அப்படியன்றுகாணும் ஆன்மாக்களை யிரக்ஷிக்கைப் பொ ருட்டாகப் பொருந்தவனென்று சொல்லில்.— ஏய்ந்தவ ரெம்ம னேரே-யாதொருத்தர் மாயாசரீரத்தைப் பொருந்தினவர்க ளெ ம்மைப்போல வான்மவர்க்கத்திலே யொருத்தர், அதனையொ ழிந்து வேறென்றாகச்சொல்லப்படாது. இதன்றியும்,—பல்பணி ஞானகாரணமென்னில் - பல்பணியாகச்சொல்லப்பட்ட சரிதை கிரியாயோகங்களைச் செய்வதுகாரணமாக ஞானமுண்டாமென்னி ல்,—தொல்பணிதொறும் பயன்றெடுப்பதனாலும் - பழையதாக ச்சொல்லப்பட்டுவருகிற சரிதைகிரியா யோகங்களைச்செய்வதுகா ரணமாகச் சாலோகசாமீப சாரூபங்களுண்டாயநுபவித்துப்போ மென்பது திருவாக்குச்சொல்லி யிருக்கையினாலும்,— ஒருபணி செய்யாச் சிரபுரச்சிறுவரும் - ஒருதொழிலுஞ் செய்யாத சீகாழித் தலைவராய் திருஞானசம்பந்தரும்,—அரசராய தருணத்தலைவரும் - இராஜகுமாரராகிய வாலிபத்திற்கெல்லாந் தலைவராகிய சுந்தர ப்பெருமாணாயனாரும்,—முதிர்பரசமயத் திதமுறுமரசரும் - மிக் கவமணசமயத்திலேநின் றவையிற்றைச் சமயமல்லவென்றுசைவ சயமேசயமென்றறுதி யிட்டுவந்த திருநாவுக்கரையரும்,— ஞான ம்பெற்ற நன்மையினாலு மீனமில்பணியருட்கேதுவன்று - குற்ற மற்றிருக்கிற சரிதை கிரியாயோகங்களென்னுந்தொழில்களைச்செ ய்யாமல் ஞானத்திற்குக்காரணம் பதியேயல்ல தவை காரணமெ ன்றுசொல்லப்படாது,-என்றால் - அல்லவென்று சொல்லி யிருக் கையிலே நீவுள்ளதென்று சொல்வதென் ஞானோற்பத்தி நிமித்த

மித்தோலென-ஞானவுற்பத்தி நிமித்தமித் தொழிலென்று,— ஏ
னோர்க்கிறை நூலியம்பிற்றென்னும் - உன்னையொழிந் துள்ளோ
ரெல்லார்க்குங்கத்தா நூல்களிலே யருளிச்செய்து வைத்திருக்க
ஞானத்தைப்பெறுதற்கு நிமித்தமன்றி ஞானங் கொடுப்பதற்குச்
சரிதைமுதலாகியது நீகாரணமென்ற தென்னமாய்முடியும். (எ
ன்னவே ஞானம்பெறு நிமித்தந் தவமாமென்பது கருத்து.) இத
ன்றியும்,...கருவியுமலமும் பிரிவுற வருடருமென்றனை - அறிவா
கியகருவியு மறியாமையாகிய மலமுநீங்கத்தக்கதாக வருட்பிரகா
சமுண்டாமென்று நீசொன்னாய்,...கேவலத்தேதுமறிவிலன்-கே
வலத்தையிலே யான்மாவொன்று மறியாமற்கிடக்கையினா லவ்வி
டத்தருட் பிரகாசமுண்டாகாது,—துன்றியசகலத் தருணிலதோ
ன்று - கருவிகணெருங்கியிருக்கிற சகலாவத்தையிலு மருட்பிரகா
சமுண்டாகாது,—எவ்வவத்தையி லிறையருள்பெறுகுவம் - முன்
சொன்னவிரண்டவ தரத்திலுமருட்பிரகாச முண்டாகாதென்று
ற்பின்னெந்த வவதரத்திலேதான் கத்தாவினுடைய திருவருளைப்
பெறுவோம்,—செவ்விய ஞானதரிசநமாவது - மயக்கமற நீதரிசி
த்த ஞானமாவது,— நால்வகைமாயைப்பால் வருஞானம் - தனு
கரணபுவன போகமென்கிற நால்வகையோடுங் கூடியிருக்கிறமா
யையின்பகுதியிலே நின்றறிந்துவருகிற ஞானமெப்பொழுது மு
ள்ள ஞானமாகவேண்டும்,— பண்டைஞான மிதுவறிதாவரக்க
ண்டஞான மிதுவரக்காணில் - இந்தமாயையினாலே யறிந்துவரு
கிறஞான மெப்பொழுதுமுள்ளஞானம் இதுநீங்கத்தக்க தாகவே
வருகிறஞானம் இந்தத்தனுகரணபுவன போகங்களாகக்காணப்ப
டின், ஈனஞானிக ளென்போர் யாருமில் -அஞ்ஞானிகளென்று
சொல்லத்தக்கதாக வொருத்தருமில்லை நீசொன்னவசநத்தினாலே
யெல்லாரு ஞானவான்களாகவேண்டும்,...ஞானவேற்றுமை காட
லுமரிதே - ஞானத்தினுடைய வேறுபாடறியும் பொழுதரிதாயிரு
க்கும். இதன்றியும்,—தானுஞானமுந் தலைவனுமென்றனை-ஆன்
மாவுஞ் சிவஞானமுஞ் சிவமுமென்று மூன்றுகச்சொன்னாய்—ஆ

ணபினிவனு மிவனதுஞானமும் - சிவனுஞ் சிவனுடையஞானமு மென்கையினலே ஆன்மாவு மான்மாவினுடைய ஞானமும்.— பாசமும் பாசஞானமுமென் றிவைபேசுவர் - பாசமும் பாசத்தி னுடைய ஞானமுமென் றிந்தமூன்று முதலிற்கு மூன்றுஞானமு ண்டென்று பெரியோர்கள் சொல்லுவார்கள்,—ஒன்ருப்பெற்றிய வாகலின் - இதுஒன்ருகாத முறைமையினலே, - மும்மைபொ ருட்டுமும்மைத்தன்மை செம்மைத்தென்னிற் செலவுகளெழுதுக இந்தமூன்றுமுதலிற்கு மூன்றுஞானமுள்ள தென்கையா லான் மாவொன்ருமிடத் தந்தப்பசுஞானமும் பாசஞானமும்போனபடி யெப்படியென்று சொல்லவேண்டும், இதன்றியும்,... இருவருங் கூடி யொருபயனய்த் தென்றருளினே-ஆன்மாவுஞ் சிவனுங்கூடி யொருமுதலாயிற் றென்றுசொன்னய்,— இவ்வாற பேதிகணிலே யே - இப்படிப்பெத்தத்தி லிரண்டாய் முத்தியிறென்ருயிருக்கு மென்றுசொல்லுகிறது மாயாவாதியுடைய மதமாயிருக்கும்,...பதி பசுபாச முதரறிவுகளுடனுரு முன்னர்க்கூரு - பதிபசு பாசங்க ளுமவையிற்றினுடைய ஞானங்களு மாறுவகையாக முன் சொல் லி,—பின்னரிருபொருணீத்து மற்ருருநால்வகையும்- அந்தவா றினும் பாசமும் பாசஞானமென்ற விரண்டையும்விட்டுப் பின்பு நாலாக்கி யந்நால்வகையும்,—ஈனமில் ஞாதருஞானஞேயமென் றிசையமூன்ருய் - இதிலேபசுஞானமொன்றையும்விட்டுக் குற்ற மில்லாத ஞாதருஞானஞேயமென்று பொருந்தப்பட்டமூன்ருய் —பசுபதியென் றவற்றிரண்டாய் - அதிலே ஜீவஞானத்தை நீக் கியான்மாவென்றுஞ் சிவமென்று மிரண்டாய்,...இரண்டுமொன் றினென்ருகத் திரண்டாம்பயனெனுந் திருவருடெளியில் - இந்த விரண்டிலே யான்மாவானதந்தச் சிவனிடத்திலேகூடி யிரண்டு மொருபயனய் நிற்குமென்று நீசொல்லும் நிர்மலசாக்கிராதீததிரு வருட்பகுதியைச் சொல்லுமிடத்து,— சென்று சென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்ருமென் றிறையியற்கையியம்புத றகும்-தி ருவாசகத்தில் "இன்றெனக்கருளி,, என்றதிருவிருத்தத்தில் திரு

வாதவூர்நாயனர் பேரின்பம்வேண்டிக் கத்தாவினுடையதன்மை யையருளிச்செய்தது நீர்சொன்னவத்தத்திற்குத் தகும். (என்றது என்னத்தகாதென்பது கருத்து.) (ஒன்றுமல்லவிரண்டுமெல்லவொன்றுமிரண்டு மின்றுமல்ல வென்பதுண்மை,) இதன்றியும், ஒன்றுமென்றலன்றியு முவப்பமின்றுமென்று லென்பயன் - பதியும்பசுவுமொன்றுமென்று சொன்னதன்றியு மிவ்விடத்தோ ரின்பமுமதனு லுண்டாகிய பிரியமுமின்றுதலினு லுனக்குப் பிரயோசனமென்ன (என்னவே பெறுவானில்லையென்பது கருத்து.)—இயம்புக - நான்சொன்னவத்தை யல்லவென்று சொல்னீரேபின் னையிந்தச் சித்தாந்தவத்த மிப்படியிருப்பதென்று நீர்சொல்லுவீராக,—என்றனை வினுவுமியாவும்விளங்க வென்றிகொள் கருத்தின்விரும்பினையாயின் - பின்னையெப்படி யிருப்பதென்றென்னை நீகேழ்க்கிறதாக வுன்னுடைய திடமுறுகருத்திலே விருப்பமுண்டாயின்.—நதிக்கரையானெனக் கொதித்தலமாந்து - ஆற்றங்கரைப்பசுப்போல் அங்காமோ விங்காமோவென்று நீபதறிக்கொண்டுதிரிகிறதெல்லாந் தெரியத்தக்கதைவிட்டு வெண்ணெயம்பதிதிகழ்மெய் கண்டவனரு ளுண்ணிலையுடையோ னொருவனுரைத்த - திருவெண்ணெய் நல்லூரிலேவிளங்கப்பட்ட மெய்கண்டதேவனுடைய வநுக்கிரகத்தி லுண்மையைப் பெற்றமறைஞானசம்பந்தநாயனர் எனக்கருளிச்செய்த வத்தத்தைக்கொண்டு,— தவப்பிரகாசத்தன்மையில் விரித்த சிவப்பிரகாசச் செழுந்தமிழுண்மையை - முன்ஜநநத்திலே செய்ததவங்களினது மிகுதிகொண்டுநான்செய்யப்பட்ட சிவப்பிரகாசமாகிய செழுவியதமிழினுடையவத்தத்தை,—அருளுடனுய்ந்து கொள்ள - ஆசாரியருடனே கூடியாராய்ந்துகொள்ளவே,—திருவருள்வினவ றிருந்திடுமென்றே-

மூலமும்-உரையும்.

பின்னையிந்தத் திருவருளின்பகுதி யெப்படியிருப்பதென்றுக் கேட்ட சந்தேகங்களெல்லா நன்றாயுமக்கு விளங்காநிற்கும். எ-று.

சைவவாதி சங்கற்ப நிராகரண-முற்றிற்று.

சங்கற்பநிராகரணமூலமும் - உரையும் - முற்றிற்று.

பாயிரமுட்பட அகவல் - ௨௰.

திருச்சிற்றம்பலம்.

தனியன்;

கற்றவன்கருணைகூரக் கலந்துயிர்சிவமாய்வாழப்
பற்றவன்பரமேயாகப் பரிவினாற்சிவப்பிரகாசஞ்
சொற்றவன்பொருட்சுபாபக் துலக்கியதூயோன்றொல்லோன்
கொற்றவன்குடியானந்தங் குடிமுழுதாண்டகோவே.

இந்நூலுரையாசிரியர் பெயர் பிரதிகளிற்
காணப்படவில்லை.